கடல் நீலம்

''வரவர எல்லாருக்கும் காபி கொடுக்கணும். ஒருத்தர்கூட விட்டுப் போயிடக்கூடாது. சார் சாப்பிட்டேளா? நீங்க... சார் காபி?''

''வேண்டாமா. ஏன் பழக்கமில்லையா? அரை டம்ளர் தரேன். ஒரு சிப் குடிச்சுட்டு கீழே வச்சுடுங்கோ. இட்ஸ் எ மஸ்ட். இங்க இன்னிக்கு இப்படி வரவாளுக்கு காபி குடுத்தே ஆகணும்னு ஒரு சம்பிரதாயம்.''

''ஏன்னு கேட்கறேளா? ஆறுதல் சொல்ல வரேள். அப்படி ஆறுதல் சொல்றவாளுக்கு ஆறுதலா இருக்கணும்னு தர்ற பானம் இது.''

யாரோ வாசலில் உரக்கப் பேசிக்கொண்டிருந்தார்கள். மைதிலி பெண்கள் கூட்டத்திலிருந்து எழுந்து அறை ஜன்னல் வழியே வராந்தாவை எட்டிப் பார்த்தாள்.

நாற்பது மடக்கு வாடகை நாற்காலிகள் பரப்பப்பட்டு தோட்டத்துப் புற்கள் நசுங்கிப் போயிருந்தன. மேலே கலர் துணிப்பந்தல் போடப்பட்டிருந்தது. வழி நடை எங்கும் செருப்புகள் விடப்பட்டிருந்தன.

அநேகமாய் எல்லா ஆண்களும் வேட்டி சட்டையும், மேல்துண்டுமாய் இருந்தார்கள். காலையில் எழுந்து

குளிப்பதற்கு முன் ஒரு நடை பார்த்துவிட்டுப் போகிற அவசரத்தில் இருந்தார்கள்.

ராமு மாமாதான் காபி விசாரித்துக் கொண்டிருந்தார். ''காலைல ஏழு மணிக்கு வர ஆரம்பிச்சிடுவாம்மா, பத்துப் பதினோரு மணி வரைக்கும் வருவா. அப்புறம் வரது பேர். எத்தனை காபி வேண்டி இருக்கும்? ஒரு கணக்கு சொல்லேன்.''

மைதிலிக்குப் புரியவில்லை. கல்யாணத்துக்கு எத்தனை பேர் வருவார்கள் என்று ஒரு கணக்கு சொல்லலாம். பத்திரிகையை வைத்து ஒரு குத்துமதிப்பாய் வருகை சொல்லலாம். இதற்கு எப்படிச் சொல்ல முடியும்?

''ஒரு முந்நூறு காபிக்கு ஏற்பாடு பண்ணிக்கிறேன். அத்திம்பேருக்கு ஒரு கூட்டம் உண்டு. அது தவிர உங்க அண்ணன், உங்க அக்கா, அவ ஆத்துக்காரர். உன் ஸ்நேகிதா, உறவு, தெரு எல்லாம் சேர்த்து நானூறு வச்சுப்பம்.''

''முந்நூறுக்குத் தயாரா இருக்கேன், தேவைப்பட்டா மேற்கொண்டு பால் வாங்கி கலந்துடலாம். காபி நல்ல காபியா இருக்கலாமோல்லியா? இருக்கட்டும். நாலு பெரிய மனுஷா வருவா. வாய்க்கு வழங்காதத தருவானேன்? இன்னும் எத்தனையோ செலவு இருக்கு... இதுல கஞ்சத்தனம் பண்ணுவானேன்? முந்நூறு காபி ஓகே?''

தலையாட்டினாள்.

ராமு கணக்கு சரியாய் இருந்தது. முந்நூறுக்கு மேல் சுலபமாய்த் தாண்டும், யார் யார் யாரென்றே தெரியவில்லை. விதவிதமான ஆட்கள் வந்து நின்று அப்பா படத்துக்கு எதிரே கை கூப்பிவிட்டுப் போனார்கள். யாரோ மாலைகூட சாத்தினார்கள்.

''சங்கரா.. சங்கரா!'' ஒரு கிழவர் வாய்விட்டு அழுதார்.

குபீரென்று கிளம்பிய அந்தக் குரல் எல்லாரையும் உலுக்கிற்று. துக்கத்தை பெரிசுபடுத்திற்று. மெல்ல சமாதானப்படுத்தி கிழவரை மைதிலி எதிரே கொண்டு வந்து விட்டார்கள்.

'இப்படிப் பண்ணிட்டானே...இப்படிப்பண்ணிட்டானே... எல்லார்க்கும் எல்லாத்தையும் பண்ணிட்டு உனக்கு ஒரு நல்லது பண்ணாத போயிட்டானே.'' - கைகளைப் பிடித்துக் கொண்டு அழுதார்.

கிழவர் யாரென்றே தெரியவில்லை. ராமு விசாரித்து சொன்னார். அப்பாவோடு படித்தவராம். ஒன்றாய் வேலைக்குச் சேர்ந்தவராம். ஒரே லாட்ஜில் தங்கி, ஒரே ஹோட்டலில் சாப்பிட்டு, நாலு வருடம் ஒன்றாய் இருந்தவர்களாம்.

''மோதிர விரலை இடிக்கிற மாதிரி தன ரேகை அவனுக்கு... 'ஓஹோன்னு வரப் போறடா நீ'ன்னு அப்பவே சொன்னேன். நம்பலை அவன். பார்ப்பம்.... பார்ப்பம்னு பதில் சொன்னான்.

நான் சொன்ன மாதிரி ரொம்ப சீக்கிரம் உச்சிக்குப் போயிட்டான். எங்க செட்ல முப்பது வயசுல மேனேஜரானவன் அவன் ஒருத்தன்தான். கடைசி நாள் வரைக்கும் அவன் கொடி உச்சிலதான் பறந்தது.

அறுபத்தொரு வயசு அவனுக்குப் போறவே போறாது. இன்னும் இருபது வருஷம் தாராளமா இருந்திருக்கலாம். கிடந்து என்னை மாதிரி வியாதி வெக்கைன்னு சீப்பட இஷ்டமில்லையோ என்னவோ... டக்குன்னு போயிடுத்து. வசதி ஒண்ணும் குறைவு இல்லையே.''

கிழவர் கேட்டாராம்.

''கொஞ்சமா சம்பாதிச்சார். ஒரு குறைவும் இல்லை. கப்பல் மாதிரி கட்டிய வீடு. ஒண்ணுக்கு மூணு கார். எல்லாக் குழந்தைகளும் படிச்சு செட்டில் ஆய்ட்டா. கடைசி மவ கல்யாணத்துத்தான் முயற்சி பண்ணிண்டிருந்தார். பாவம் அவளுக்குக் கொடுத்து வைக்கலை, அப்பா இருந்து நடந்த.''

''அதுக்கில்லை. சங்கரன் அப்பவே உல்லாசி. நிறைய சாப்பிடணும். நன்னா சாப்பிடணும் அவனுக்கு. ஹோட்டல்ல உட்கார்ந்து இரண்டு அல்வா, இரண்டு மசால் தோசைம்பான். என்னைப் பார்த்து உனக்கு என்ன வேணும்பான். அதான் ரெண்டு ரெண்டு சொல்லியிருக்கியே என்பேன். அது எனக்கு... உனக்கு என்ன வேணும்னு நீ சொல்லும்பான். தனியா ஒரு நாள்கூட சாப்பிட்டதில்லை. யாராவது கம்பெனி வேணும். கடைசி வரைக்கும் அப்படித்தான். வீடு பேர்ல ஒண்ணும் கடன் இல்லையே?''

''ஒரு பைசாகூட இல்லை.''

''வெளியே ஏதாவது கடன் கொடுத்துருக்காரா?''

''வரணும்னா இனிதான் விசாரிக்கணும்.''

-கிழவர் தலையாட்டிவிட்டுப் போய்விட்டார்.

''அப்போ...'' என்று கைகூப்பி, ''போயிட்டு வரேன்னு சொல்லிக்கக் கூடாது.'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

கிழவர் நகர்ந்ததிலிருந்து ஒரு வார்த்தை மனசுள் சுற்றிக் கொண்டிருந்தது.

''சங்கரன் அப்பவே உல்லாசி.'' இரண்டு மசால் தோசை தின்பது உல்லாசமா? இல்லை...

கிழவருக்குத் தெரியுமா அப்பா பற்றி? தெரிந்திருக் கிறது. நிறையப் பேருக்குத் தெரிந்திருக்கிறது. அப்பா உல்லாசி என்று அநேகமாய் எல்லோருக்குமே தெரிந்திருக்கிறது.

அப்பா உணவில் உல்லாசி, உடையில் உல்லாசி, நடவடிக்கையில் உல்லாசி. சாவுகூட உல்லாசமாய் அமைந்து விட்டது.

ஏ.ஸி. ரூமில் நட்சத்திர ஹோட்டலில் மெத்து மெத்தென்ற படுக்கையில் இடுப்பு வேட்டி மட்டும் அணிந்து நாலாவது சானலில் மியூஸிக் ஒலிக்க உயிர்போயிருக்கிறது.

பன்னிரண்டு மணி நேரம் இருக்கும் உயிர் போய். மாஸ் அட்டாக். ரெண்டு நிமிஷத்துல பிராணன் போயிருக்கணும். துடிச்ச மாதிரி தெரியவில்லை. படுக்கை கலையலை. வேஷ்டி அவிழலை எச்சிலோ, சளியோ, மூக்கு ரத்தமோ இல்லை. மலஜலம் வெளியே வரலை. சைலண்ட் ஆன்ஜைனா. ஏ.ஸி. ஆனதுனால உடம்பு துர்நாற்றம் வரலை.

''ராத்திரி ஒன்பது மணிக்கு பிராணன் போயிருக்கணும். பகல் ஒன்பது மணிக்கு டெலிபோன் மணி அடித்து, காலிங்பெல் அழுத்தி, கதவு இடிச்சுப் பார்த்துட்டு பதில் இல்லேன்னதும் ஹோட்டல்காரா மாஸ்டர் கீ போட்டுத் திறந்து உள்ளே நுழைஞ்சு பார்த்திருக்கா. என் விசிட்டிங் கார்டு இருந்திருக்கு. உடனே பத்தாவது நிமிஷம் வந்தேன். ஜஸ்ட் தூங்கற மாதிரி இருந்தார். அதே சிரிப்பு மூஞ்சில குறும்பா சிரிப்பாரே... அதே சிரிப்பு...''

- டாக்டர் பேசினது நினைவில் ஓடிற்று.

போலீஸுக்கு, ஹோட்டல் தகவல் சொல்லிவிட்டு மைதிலிக்குக் கார் அனுப்பியது. மைதிலி, அண்ணாவுக்கு போன் பண்ணிவிட்டு ஹோட்டலுக்கு வந்தாள்.

ஹோட்டல் பின்பக்கம் கொண்டு வந்துவிட்டார்கள். மத்த கஸ்டமர்களுக்கு மனக்கஷ்டம் வந்துவிடுமாம். போலீஸ், அறையை சோதனை போட்டுவிட்டு உடம்பை ஜி.ஹெச்சுக்கு அனுப்பியது.

குடும்ப டாக்டர் கூடவே போனார். அப்பாவின் கேஸ் ஹிஸ்டரி சொன்னார். சின்ன கீறுகீறி குடலை கொஞ்சம் உருவிக்கொண்டு இறுகக்கட்டி அனுப்பிவிட்டார்கள். கீரை வடையும் ஆல்கஹாலும் குடலில் இருந்தது. விஷமேதுமில்லை என்று சொல்லிவிட்டார்கள். மாரடைப்பில் மரணம் என்று எழுதிக் கொடுத்து விட்டார்கள்.

இரவு பத்து மணிக்குத் தகனம் முடிந்துவிட்டது. அறுபத்தோரு வயசு உல்லாசம் சாம்பலாயிற்று.

வியாழன் இரவு மரணம். வெள்ளி இரவு தகனம். சனி போய் இது ஞாயிறு.

ஞாயிறு துக்கம் விசாரிக்கும் நாள். மரணத்துக்கு வராதவர்கள் துக்கம் கேட்க அன்று வந்தார்கள். சாரி சாரியாய், கார் காராய், பெரிய பெரிய ஆட்கள் வந்தார்கள்.

ஆர்.வி.எஸ். கம்பெனி ஆட்கள்தான் அதிகம். அப்பா அங்கே சேல்ஸ் கன்சல்டன்ட். குறிப்பாய் டூவீலர் கன்சல்டன்ட். அந்த கம்பெனி மொபெட் வண்டி செய்ய யோசித்ததுமே அப்பாவைக் கன்சல்டன்டாகச் சேர்த்துக் கொண்டது.

''லைசென்ஸ் வாங்கிடலாம், செலவாகும். பரவாயில்லையா?'' இந்தக் கட்டத்தில்தான் அப்பா அந்தக் கம்பெனிக்கு உற்சாகமூட்டினார். ''நான் இருக்கேன் பர்மிட்டுக்கு.''

''டெல்லிக்கு ஒரு கும்பலா போவோம். ஒரு வாரம் டேரா அடிப்போம். நாப்பது அம்பது பட்டுப்புடவை வாங்கிக்கோ. முதல்ல பக்கத்து வீடு ஏறி இறங்கி ப்ரெசண்ட் பண்ணுவேன். அப்புறம் பேரம். பேரம் முடிஞ்சா இரண்டே மாசம் உன் கைல பர்மிட். செலவுக்கு அச்சப்பட்டியான்னாக் கூட இரண்டு மாசம் ஆகும். என்ன சொல்றே?''

இரண்டாவது மாசம் பர்மிட் வந்துவிட்டது. கம்பெனி தொடக்க விழாவுக்கு மைதிலி அப்பாவோடு போயிருந்தாள்.

''மைதிலி உங்கப்பா டக்கர் கெட்டிக்காரன். நோ டவுட். ஆனா, இது ஜாஸ்தி. இந்த வயசுக்கு ரொம்ப ஜாஸ்தி.'' - கட்டை விரலை வாய்க்கு கொண்டுபோய் காட்டி கம்பெனி டைரக்டர் கூறினார்.

''கொஞ்சம் அதட்டி வை. வீட்ல சாப்பிடறாரா? கூடாதுன்னு சொல்லிடு. ஏழு மணிக்குப் பிறகு பறக்கறார் பாட்டிலுக்கு. இரண்டுபெக் ஓகே. ஆறு ஏழுன்னு போறார். உங்க அம்மா வேற இல்லை கண்டிக்க. நீதான் பேசணும். என்ன, அதட்டி வை. டெல்லில ரெண்டு நா திண்டாடிட் டோம். இவரைக் கண்ட்ரோல் பண்ண முடியாத?''

- விடை பெறும்போது டைரக்டரின் மனைவி தனியே அழைத்துப் போனாள்.

''உங்க வீட்டு ஹிஸ்டரி எனக்குத் தெரியும் மைதிலி! உங்கம்மா உன்னைப் பெத்த மூன்றாவது வருஷம் போயிட்டா. இவர் தனியாயிட்டார். நாப்பது வயசுல மறுபடி இளமை திரும்பும். அனுபவிக்க ஆசை வரும். அதுக்காக இப்படி கண்ட இடத்துக்குப் போய் உடம்பு கெடுத்துப்பாளா?

ப்ளீஸ்... டோண்ட் மிஸ்டேக் மீ. டெல்லிலே ஒரே கூத்தாம். எட்டு மணிக்கு மூன்று பெண்களை வரவழைச்சு... உன்கிட்ட எனக்கு இது பேசவே கூச்சமா இருக்கு. ஹி ஈஸ் நியரிங் சிக்ஸ்டி. உனக்குக் கல்யாணம் கார்த்தி நடக்க வேண்டாமா? உங்க அண்ணா இது பத்திக் கேட்க மாட்டானா? எல்லா காசும் தேவடியாளுக்கு இறைச்சா எப்படி? ஏழாயிரம் ரூபா ப்ராஸ்டிட்யூட்டுக்கு செலவு பண்ணியிருக்கார். கம்பெனி செலவுதான். நான் காசு பேசலை. ப்ளீஸ்! டோண்ட் மிஸ்டேக் மீ. உல்லாசத்துக்கு வயசு வேண்டாம்...?''

தயங்கித் தயங்கி அவள் பேசினபோது வெட்கமும் குழப்பமும் தாக்கின. ஒரு மகள் தகப்பனிடம் இது பற்றி என்ன பேச முடியும்?

''இது புதுசா? இப்பதானா? அம்மா இருக்கறபோதே உண்டு. உனக்குத் தெரியாது. ஆனா, எனக்குத் தெரியும். ஊர்ல நிறைய பேருக்குத் தெரியும்.

சுந்தரம்னு ஒருத்தன் வருவான். தடியா... மார்ல சூட்டுத்தழும்போட வந்து அப்பாவோட கார் துடைப்பான். அப்பாவோட போயிடுவான். அந்தக் கம்மனாட்டிதான் இவரைக் கெடுத்தது. பிம்ப் அவன்தான். சரி... அவனைச் சொல்லி என்ன பண்றது? இவருக்கு வீக்னஸ். இது புதுக் கதையில்லை மைதிலி. இருவது வருஷத்துக் கதை. இனி மாத்த முடியாது.''

''நான் பேசட்டுமா?''

''வேண்டாம்.''

''ஏன் அண்ணா?''

''இதைப் எப்படிப் பேசறதுன்னு தெரியலை. இந்த வீட்டுக்கு அப்பா எந்தக் குறையும் வச்சதில்லை. நாம கேட்டு ஒரு பண்டம் மறுத்ததில்லை. நம்ம அம்மாவை 'சீ சீ போடி'ன்னுகூட சொன்னதில்லை. வீடு, நகை, நிலபுலம் எல்லாம் இருக்கு. அவர் சம்பாதிச்சதுதான் அத்தனையும். நாப்பது வயசுல பெண்டாட்டி போனதும் ஆம்பளைக்கு வர வேதனை அவருக்கு அதிகமா வந்துடுத்து. எதுக்கு மடக்கணும்?

ஒண்ணு புரிஞ்சுக்கோ மைதிலி. அப்பா ரோட்ல போற பொண்ணை, குடித்தனம் பண்ற பொம்பளைய தொடக்ககூட மாட்டார். இவர்கிட்ட காரியம் சாதிக்க பொண்டாட்டிய அனுப்பிவச்சவனை எனக்குத் தெரியும். 'சரி, இதுதானே...

முடிச்சுத் தர்றேன். ஒரு சத்தியம் பண்ணுன்னார். என்னான்னு கேட்டான். இனிமே பொண்டாட்டிய பொண்டாட்டியா வச்சுக்குவேன்னு சொல்லு. உடனே செய்து தரேன்'னார். வந்தவன் இந்த கூடத்துல அவர் கால்ல விழுந்து அழுதது எனக்குத் தெரியும்.

நம்ம அப்பா நல்லவர். இது பலஹீனம். ஆனா, இதுக்குன்னு வர பொம்மனாட்டிதான் அவருக்கு உடன்பாடே தவிர...''

அண்ணனும் தங்கையும் தலைகுனிந்து மேற்கொண்டு பேச முடியாமல் உட்கார்ந்திருந்தார்கள்.

''குடிக்கறத குறைச்சுக்க சொல்லு மைதிலி. அது போதும். நீ சொன்னா கேட்பா.''

மைதிலி சொன்னாள்.

''சரிம்மா. குறைச்சுக்கிறேன். இனிமே வீட்ல குடிக்க மாட்டேன். ஹோட்டல்ல ரூம் போட்டு குடிக்கறேன். மன்த்லி ஒன்ஸ் ட்வைஸ். ஓகே?'' உடனே வாக்கு தந்தார்.

''யார் சொன்னா தாயி, அப்பா நிறைய குடிக்கறதா?''

மைதிலி ஆள் விவரம் சொல்ல... சிரித்தார். போன் சுழற்றினார்.

''ஏண்டா எச்சல் தயிர்வடை. என் குழந்தைகிட்ட உன் பொண்டாட்டி கம்பளெயின் பண்ணினாளாமே குடிக்கறதா, எப்படி இருக்கு உடம்பு? உன் விஷயம் வெளியே அவுத்து வுடட்டுமா? இனி எந்த மயிரானுக்கும் நான் கன்சல்டன்ட் இல்ல. பெர்மிட் கைல வாங்கினதும் புத்தி மாறிடுத்துல்ல, உனக்கு? இந்த வாசப்படி மறந்தும் மிதிக்காத. இதுக்கு மேல என்னைப்பத்தி எங்கயாவது ஏதாவது பேசினது தெரிஞ்சா... உன்னை, உன் மொபெட் கம்பெனிய எப்படி அழிக்கிறதுன்னு எனக்குத் தெரியும்.''

தடேரென்று போன் வைக்கப்பட்டது.

''மாசத்துக்கு ரெண்டு தடவை மைதிலி. இது ப்ராமிஸ். இதுக்கு மேல நான் குடிக்க மாட்டேன். ஓகே. நீ போதாயி?''

இது உல்லாசமா?

இப்படி உறுதியான உல்லாசம் உண்டா? - மைதிலி வியந்தாள்.

அடுத்த இரண்டு மணிக்குள் வீடு திமிலோகப்பட்டது நாலைந்து கார்களில் ஆட்கள் இறங்கி வந்து ஓயாது மன்னிப்புக் கேட்டார்கள். கம்பெனி டைரக்டர் மனைவியை 'பைத்தியம்,' 'அதிகப்பிரசங்கி', 'திமிர் என்றார்கள்.

அப்பா சாந்தமானவர், ''ஒழிஞ்சு போங்கோ. ஆனா, பேச்சுல மரியாதை குறைஞ்சுது. சங்கரன் உங்க கண்ல விரல் கொடுத்து ஆட்டுவான்னு புரிஞ்சுக்கோங்க.''

கன்னத்தில் புத்தி போட்டு, கூட்டம் போயிற்று.

''அப்பா. நீ என்ன எப்படி உசத்தி?'' கேட்கத் தோன்றிற்று? கேட்டாள்.

2

''பகவான் எனக்குப் புத்தி கொடுத்திருக்கார். தாயே, கொடுத்த புத்தியை முழுசுமா உபயோகப்படுத்தறேன். ஜெயிக்கறேன், ஓர் உதாரணம் சொல்லட்டுமா?

ஸ்டாமடிஸ்ன்னு ஒரு கப்பல் மெட்ராஸ்ல தரை தட்டித்து. புயல்ல அலைக்கழிக்க நம்ம யூனிவர்சிட்டி எதிர்க்க வந்து மணல்ல சொருகிடுத்து. ஆறு மாசம் தலை கீழா நின்னு பார்த்துட்டான் கப்பல்காரன். கரையை விட்டு கப்பல் அசையலை.

என்னத் தண்ணியும் இறைச்சுட்டு ஏலத்துல விட்டுருன்னு ஒருகம்பெனிக்கிட்ட காண்ட்ராக்ட் கொடுத்து போய்ட்டான். நாப்பது பர்சன்ட் ஏலக் கமிஷன். இருநூறு அடி நீளம். நூத்து நாப்படி உசரம். இடுப்பு உடைஞ்ச கப்பல் எவன் வாங்குவான் மெட்ராஸ்ல? யாருக்கு அது உபயோகம்? அழுகித்து நாலு மாசம் கடல்லியே.

என்கிட்ட வந்து அழுதான் ஏலக்கம்பெனி ஆள். யோசனை பண்ணி ஒரு கணக்குப் போட்டேன். நீ பி.காம். தானே. கவனமா கேளு.

கப்பலின் உண்மையான மதிப்பு ஆயிரம் ரூபாய், ஆயிரம்ன்னா ஆயிரமில்லை. கம்மா ஒரு கணக்கு. இடுப்பு உடைஞ்சு மணல்ல சிக்கியிருக்கு, என்ன மதிப்பு இப்போ? முந்நூறு ரூபாய். அது ரிப்பேர் பண்ணா மதிப்பு அறு நூறு.

ரிப்பேர் பண்ணி ஓட்டணும், எங்க ஓட்றது? மெட்ராஸ் டு சிங்கப்பூர், சிங்கப்பூர் டு மெட்ராஸ். இல்லை சிலோன். அதுக்கு மேல இது ஓடாது. ரிஸ்க். அறுநூறுக்கு ரிப்பேர் பண்ணி இருக்கற கப்பலோட வியாபாரப் போட்டி முடியுமா? முடியாது. அதுக்கு வாய்ப்பு இல்லை. ஸோ நோ ரிப்பேரிங்.

என்ன செய்யலாம். ஓடாத கப்பல், ஓட்டினா லாபம் வராத கப்பல். உடனே பத்திரிகைல விளம்பரம் கொடுத்தேன். கப்பல் உடைக்கணும் டெண்டர் தாங்கடான்னு. இருநூறுக்குக் கிடைச்சுது. எட்டடிக்கு நாலடி தகடா வெட்டினான்.

உள்ள இரும்பு பைப், அலுமினியத் தகடு இன்ஜின். நாற்காலி, மேஜை, கண்ணாடி மரத்தளம்னு பிரிச்சு பிரிச்சு காட்டினான். எல்லாம் இம்போர்ட்டட்.

பிரிச்சு எக்ஸிபிஷன் வச்சோம். நூறு ரூபா செலவு. ஏலம் விட்டோம். எத்தனைக்குப் போச்சு. ஆயிரத்து நூறு

ரூபாய்க்குப் போச்சு. ஆயிரத்து நூறு ரூபாய்ல ரிப்பேருக்கு மைனஸ் முந்நூறு. ஆக எண்ணூறு கைல. அறுநூறு கப்பல்காரனுக்கு. இருநூறு ஏலக்கம்பெனி. அதுக்குப் பிறகு ஏலக்கம்பெனி மூடிட்டான். என்ன முழிக்கிற? நஷ்டம்னு மூடலை. அதைவிட ஸ்கிராப் வாங்கறது லாபம்னு தொழில் மாத்திட்டான்.

எனக்குப் பத்து ரூபா கன்சல்டன்ட் ஃபீஸ். பத்து ரூபான்னா பத்து லட்சம். அதுல வாங்கின வீடும்மா இது! நியாயமா இந்த வீட்டுக்கு ஸ்டாமடிஸ்னு பேர் வைக்கணும். ஸ்ரீனிவாசம்னு வெச்சேன். அன்னிலேர்ந்து நானும் கன்சல்டன்ட்னு போர்டு போட்டேன். ஏதோ ஓடறது.''

''என்ன தைரியத்துல உடைக்கலாம்னு தீர்மானம் பண்ணினேள்?''

''விக்க முடியும்கற தைரியத்துல. அர்தப்பழசா இருந்தாலும் இந்த ஊர் ஜனத்துக்கு இம்போர்ட்னா ஒரு மயக்கம். எல்லாத்துலயும் ஸ்டாமடிஸ் ஸ்டாமடிஸ்னு ஸ்டென்ஸில் போட்டேன். அந்த ஏலக்கடைக்காரன் லோக்கல் மரம் வாங்கி அதுல ஸ்டாமடிஸ்னு போட்டு வித்தான். அது வேற கதை.

கப்பல் வாங்குறயா, கப்பல் வாங்குறயான்னா யார் வாங்குவான் மெட்ராஸ்ல? உடைஞ்ச கப்பல் மரம் ஒரிஜினல் தேக்குன்னு சொன்னதும் உரசித் தட்டி வாங்கிண்டு போயிட்டான். ஏமாத்தலே இல்லை. உடைஞ்சதும் விலை உசந்தது. ஒண்ணா இருந்தபோது குறைவா இருந்தது.

நாலணாக்கு கூடை கத்திரிக்கா வாங்கி நாலு கூற போட்டு, கூறு இரண்டணான்னு விக்கற ஜாலம். வாங்கறவனுக்கு ஒரு கூறு போறும். ஒரு கூடை வேண்டாம். புரியறதா?''

''புரியறதுப்பா!''

''இது காமென்சென்ஸ் மைதிலி! இது குறைவு இங்கே. எம்.பி.ஏ. படிக்கிறயா? இது மாதிரி நிறைய கத்துக்கலாம்.''

''படிக்கறேம்ப்பா!''

அப்பா உல்லாசி, இருக்கட்டுமே. அவர் உல்லாசம் யாரையும் அழித்ததில்லை. அவரைத்தான் அழித்தது. இரண்டு தடவை மாசத்துக்கு என்றாலும் முட்ட முட்டக் குடித்து எவளோட புரண்டு வருவது பலஹீனப்படுத்திற்று. கேட்க முடியவில்லை. இதற்கு மேல் தடுக்க முடியவில்லை.

அண்ணா ஆரம்பித்தான். இடை மறித்தார்.

''லுக் ஹியர். நான் சாதாரண மனுஷன், எனக்கு ஆசாபாசம் உண்டு. அதை உன்கிட்ட சொல்ல முடியாது. நான் சொத்து அழிக்கலை. சம்பாதிக்காம இல்லை. என் வருமானத்துல ஒரு பகுதி சந்தோஷமா செலவு பண்றேன். அதைத் தடுக்க யாருக்கும் உரிமை இல்லை. மரபு பேசறேளா... அவமானம்னு நினைக்கிறேளா. அப்படிப் பேசறவா நினைக்கறவா போகலாம்.'' - கை கூப்பினார்.

அண்ணா பதில் பேசாது திரும்பினார்.

வேறொரு நாள் மைதிலி ஆரம்பித்தாள். பேச வந்தது முழுவதும் பேசாது மென்று முழுங்கினாள்.

''சொல்லு என்ன நினைக்கறியோ அதைத் தயங்காம சொல்லு'' - கார் ஓட்டியபடியே அப்பா உற்சாகப் படுத்தினார். ''ஊர்ல எல்லாரும் பின்னலே சிரிக்கிறாளே. இன்னும் இந்த வயசிலேயும் இந்த ஆட்டம் அவசியம் தானா?''

நடு மவுண்ட்ரோடில் போய்க்கொண்டிருந்த ஃபியட் கார் சரேலென்னு இடப்பக்கம் ஒதுங்கி நடைபாதையை உரசி

நின்றது. ஒரு சைக்கிள் ஓட்டி, 'ஐயோ' என்று பயந்து பிரேக் போட்டான்.

''இறங்கு.''

''அப்பா.''

''இறங்குடி கீழே.''

''அப்பா நான் வந்து...''

''தோளுக்கு மிஞ்சினா தோழன்னு புள்ளைய சொல்லுவா. உன்னை புள்ளையா வளர்த்தேன்கறது வாஸ்தவம். அதுக்காக கிட்டவா நாயேன்னா மூஞ்சி நக்கற கதையா பேசறேயே... உனக்கு என்னடி வயது... எது பத்திப் பேசறே நீ?''

உறுமல், கர்ஜனை, சீறல்......

''உன் நன்மைக்குத்தான்...''

''புல் ஷிட். நாக்க அறுத்து எறிஞ்சிடுவேன். அண்ணனும், தங்கையும் பிளான் பண்ணி ஆடறேளா? அப்பன் அத்தனை அவமானமா இருந்தா அப்பன் சம்பாதிச்ச காசும் அவமானமா இருக்கும். என் வீட்ல, என் காசுல உட்கார்ந்து என்னையே கேள்வி கேட்கறேளா? போலாம். அத்தனை நாயும் வெளிய போலாம்.

பி.ஈ. படிச்சுட்டு சாடே சாத்தானா சம்பாத்தியம். ஒரு ட்ரைவ் இல்லை. முன்னேற ஒரு துடிப்பு இல்லை. அப்பனுக்கு உபதேசம் பண்றானா உங்கண்ணா? இவனுக்குப் பொண் கிடைச்சதே என் முகரையைப் பார்த்துத்தாண்டி. சங்கரன் புள்ளைன்னு பொண் கொடுத்தானே ஒழிய இவன் பி.ஈ. படிப்புக்கு எண்பது சவரனோட கிடைக்கலை...'' பி.யும் ஈ.யும் மெல்லிய தாக்கி உமிழ்ந்தார்.

அப்படி என்னடி அவமானம் பண்ணிட்டேன்?

''அப்பா... ஐயம் ஸாரி.''

''அந்த டைரக்டர் பொண்டாட்டி கம்ளெயிண்ட் பண்ணினதுலேர்ந்துதானே இது பேசறேள்? அந்த நாறத்தேவடியாகதையைச் சொல்லட்டுமா?''

''அப்பா.. மன்னிச்சுடு.''

''அண்ணா, தம்பின்னு மூணு பேர் பங்கு... கம்பெனில பொண்டாட்டில போறுமா கதை...''

''அப்பா.. ப்ளீஸ்'' - மைதிலி கை கூப்பி அழுதாள். நெருவில் நடந்துபோனவர்கள் வேடிக்கை பார்த்தார்கள்.

மவுனமாய் தெரு வெறித்து உட்கார்ந்திருந்தார். மெல்ல... வண்டியை செலுத்தி கடைக்கு அழைத்துப் போனார். தங்க ப்ரேஸ்லெட்டும், ஜிமிக்கியும் வாங்கித் தந்தார். தனியே முக்கால் பவுனில் மோதிரம் வாங்கி டப்பாவை பாக்கெட்டில் போட்டுக் கொண்டார். 'யாருக்கு, எதற்கு?' என்று கேட்க முடியவில்லை. கேட்கத்துணிவில்லை.

எண்ணி இருபதாம் நாள் எல்லோரையும் ஹாலுக்கு கூப்பிட்டார்.

''இந்தா ரேவதி... இங்கே வா'' - மருமகளை அழைத்தார். ''இதை உன் புருஷன் கிட்ட கொடு'' - நீண்ட கவர் கொடுத்தார்..

கவரில் பத்திரம் இருந்தது. இரண்டரை கிரவுண்ட் வீடு சரிபாதியாய் மைதிலிக்கும் அண்ணாவுக்கும்.

மன்னிக்கு திருவான்மியூர் தென்னந்தோப்பு, அக்கா உமா மகேஸ்வரிக்கு அபிராமபுரம் ஃப்ளாட்.

ஆர்.வி.எஸ். கம்பெனி ஷேர் மூன்றாய்ப் பிரித்து அக்காவுக்கு, அண்ணாவுக்கு, மைதிலிக்கு. கூடவே எடுபிடி வேலை செய்த ராமுவுக்கு லாயிட்ஸ் ரோடு ஃப்ளாட், ஒரு கார்.

பாங்க் கையிருப்பும், ஃபிக்சட் டெபாசிட் முழுவதும் எட்டு லட்சம்... மைதிலிக்கு, மைதிலியின் திருமணத்திற்கு.

''ஸோ... நௌ. திஸ் மினிட் ஐயம் அகய்ன் பென்னி லெஸ். இருபது வயசுல கும்பகோணம் காலேஜிலிருந்து வெளியே வந்த அதே நிலைமை.''

''அப்பா. நான் இது கேட்கவேயில்லையே?'' - அண்ணா பயந்து பயந்து பேசினான்.

''இது காரணமா இருக்குமோ உன் பேச்சுக்குன்னு எனக்குத் தோணித்து. அதனால பிரிச்சுட்டேன். என் குழந்தைகளை நான் நல்லபடி வளர்த்து நல்ல நிலைமைக்கு ஆளாக்கி அவர்களுக்கு செய்ய வேண்டியது செய்தாச்சு.

இனி எந்த நாயும் என் வாழ்க்கையை குத்தம் சொல்ல முடியாது. சங்கரன் இப்படியாமே... அப்படியாமேன்னு அலட்ட முடியாது. சங்கரன் இனி எப்படி வேணா இருப்பான். தட்ஸ் ஆல், யூ கேன் கோ.''

மல்லாந்து கட்டிலில் படுத்துக் கிடந்தவர் அருகே போய் மைதிலி கால் பிடித்து விட்டாள். அப்பாவுக்கு வாயு உபத்திரவம் உண்டு. கால் ஆடுதசை அடிக்கடி வலிக்கும். 'ணங் ணங்' என்று முஷ்டியால் ஆடு தசையை குத்திக் கொள்வார். அழுத்திப் பிடித்துவிட சந்தோஷத்தில் கண் திறந்தார்.

''என்ன கண்ணம்மா வேணும்?''

''ஏம்ப்பா இப்படிப் பண்ணினே?''

''உன் நல்லதுக்குத் தாயி. அப்பா கடன் வச்சுட்டுப் போனார்னு யாராவது சொன்னா நம்பிடக் கூடாது. எம்.பி.ஏ. படிப்பு முடிஞ்சு மறுமாசம் உனக்கு கல்யாணம் தாயி. நீயா பார்த்துண்டாலும் சரி. என்னைப் பார்க்கச் சொன்னாலும் சரி.''

''நீ பாருப்பா. யாரைச் சொல்றியோ...''

''சரி, கண்ணம்மா. நான் பார்க்கறேன். இப்பவே மெல்ல மெல்ல விசாரிச்சு வைக்கறேன்.''

''அப்பா.''

''சொல்லு?''

''கோச்சுக்கமாட்டியே?''

''சொல்லு.''

''என் கல்யாணத்துக்குப் பிறகு நீ கல்யாணம் பண்ணிக் கோப்பா.''

- சட்டென்று அப்பா முகம் மாறிற்று. எழுந்து உட்கார்ந்தார்.

மைதிலி பயத்தில் கன்னம் பொத்திக்கொண்டாள்.

அப்பா தலை குனிந்து யோசித்தார்.

''மைதிலி.'' - அழைத்துவிட்டு உற்றுப் பார்த்தார். கண்கள் கலங்கியிருந்தன.

''என் வயசு அம்பத்தொம்பது. எனக்குத் தயவு செய்து புத்தி சொல்லாத மைதிலி. முட்டாத்தனமா சொல்லாத, பொம்பளைங்களுக்குத் தாரைவார்த்துடுவானோ பெத்தவன்கற பயம் போக சொத்துப் பிரிச்சேன். எனக்கு காலணாகூட இல்லாம சப்ஜாடா பிரிச்சேன். கல்யாண ஆசை இருந்தா அது என்னிக்கோ நடந்திருக்கும்.

எனக்கு பொண்டாட்டி வேண்டாம் மைதிலி. முப்பது வயசுக்கு ஒரு பொண்ணை நாளைக்குக் கல்யாணம் பண்ணிக்கலாம். அதுக்கு குழந்தையும் பொறக்கலாம். அப்படிப் பண்ணிண்டா நீங்க அவளை எப்படி நடத்துவேள்? அந்தக் குழந்தையை யார் தூக்கிப்பேள்? நீ கொஞ்சுவியா? நீ அவளுக்கு சாதம் போடுவியா? எங்கயாவது சந்துல குடி வைன்னு சொல்லாத மைதிலி.

நான் போகி. பாபி இல்லை. யார் வயித்தெரிச்சலையும் கொட்டிண்டதில்லை. எனக்கு இதம் பேசறதா நினைச்சு இஷ்டத்துக்கு உளறாதே. உனக்கு வாழ்க்கை தெரியாது. நான்

ஒரு ஆள் பத்து பேருக்கு யோசனை பண்ணுவேன். உங்க பத்து பேரால எனக்கு என்ன வேணும்னு யூகிக்கக்கூட முடியாது. ஐயம் எ டைப் மேன். என்னை எடை போடறது கஷ்டம், நெவர் ட்ரை திஸ். போ. போய் உன் வேலையைப் பாரு.''

''அப்பா.''

''என்னைத் தனியா விடு தாயே!'' கை கூப்பினார்.

மைதிலி வெட்கமும் துக்கமும் மண்ட வெளியேறினாள்.

இதற்குப் பிறகு அப்பா மலர்ச்சியாய் சந்தோஷமாய் கேலியாய் பேசுவதில்லை. ஆனால், மாசத்துக்கு இரண்டு நாள் காணாமல் போவது மட்டும் தொடர்ந்தது.

அப்படிக் காணாமல் போன ஒரு நேரம்தான் மரணம் வந்தது. மரணமான பின் பல மணி நேரத்திற்குப் பிறகு தகவல் வந்தது. தனியே வாழ்ந்து தனியே செத்துப்போன துக்கம் நடந்தது.

''அப்பா! நீ எப்போது செத்துப் போனாய்? என்ன நினைத்து செத்துப் போனாய்? யாரைப் பார்க்க ஆசைப் பட்டாய்? உன் கடைசி மூச்சு பிரிகிறபோது எப்படி இருந்தாய்? என்ன நினைத்தாய்? எவரைப் பார்த்தாய்? என்ன ஆசைப்பட்டாய்?''

''அப்பா, ஏன் இப்படி? மர்மமாய், தனியாய், தான்தோன்றியாய் வாழ்ந்தாய்? ஏன் இப்படி? என்ன துக்கம் உனக்கு? எதனால் எவரோடும் ஒட்டாமல் போயிற்று.

கார் கிளம்பி வாசலில் நின்றது.

''மைதிலி! ஒரு நல்ல ப்ரீஃப்கேஸ் எடு.''

மைதிலி உள்ளே ஓடி தோல் ப்ரீஃப்கேஸ் நம்பர் புரட்டி லாக் செய்யும் சிகப்பு ப்ரீஃப்கேஸ் எடுத்து வந்தாள்.

''தேங்க் யூ மைதிலி!''

புன்சிரிப்போடு இரண்டு கைகள் நீட்டி வாங்கிக் கொண்டார். தானே கார் ஓட்டிக்கொண்டு போனார்.

அந்த தேங்க்யூ தான் கடைசி வார்த்தை. அப்பா இந்த வீட்டில் பேசிய கடைசி வார்த்தை. வேறு எங்கு பேசினார்? யாரோடு பேசினார்? தெரியவில்லை.

3

அநேகமாய் எல்லாப் பெண்களும் எழுந்து போய் விட்டார்கள். உறவுப் பெண்கள் நாலு பேர் நடக்க வேண்டிய சடங்கு பற்றி அபிப்பிராய பேதம் கொண்டு விவாதிக்க, மைதிலி அயர்ச்சியுடன் எழுந்து ஹாலுக்கு வந்தாள்.

அப்பாவைப் பற்றி யாரிடமாவது பேச வேண்டும் போல் தோன்றியது அவர் பிஸினஸ் டாக்டிஸ் பற்றி மேலும் தெரிந்து கொள்ளத் தோன்றியது அப்பாவை யாராவது பாராட்டினால் காது குளிரக் கேட்கலாம் என்று ஆசை வந்தது.

''வணக்கம்மா. நான் ஆளவந்தார், திருப்பதி ஏஜென்ஸீஸ்.''

''உட்காருங்க.''

''நீங்க நம்ம கடைக்கு வந்திருக்கீங்கம்மா அப்பாவோட. நினைவு இருக்குங்களா?''

''இல்லியே.''

''ஆர்.வி.எஸ். கம்பெனி மொபெட் டீலர்ம்மா. வொயிட்ஸ் ரோட்ல மிட்லண்ட் எதிர்க்க இரட்டை கடைன்னுவாங்க.''

''ஆமாமா. கடை வாசல்ல பெரிய சங்கு சக்கரம் வச்சுருக்குமே.''

''அதான். அதான். அப்பா சொல்லித்தான் வச்சேன். எப்படி டெக்ரேட் பண்ணலாம் மொபெட் கடையைன்னு

கேட்டேன். கோயில் வாசல் மாதிரி பண்ணுடா. புதுசா இருக்கும். மொபெட் வாங்கறவனுக்கு ஒரு பயம் இருக்கும். நம்பிக்கையும் இருக்கும். கடவுள்மேல பாரத்தைப் போடுங்கற மாதிரி பயம்போக்கி அதிக நம்பிக்கை தர டெக்கரேஷன் பண்ணுன்னாரு. என் கடை வாசல்ல வந்து கும்பிட்டு போறவங்க உண்டு இப்ப.''

''அப்பாக்கு திருப்பதி ரொம்ப இஷ்டம்.''

''சொல்வாரு. நெறைய பாடுவாரு. நான் தெலுங்கு தேசம்மா. எனக்குத் தமிழ் அவ்வளவா புரியாது. இருந்தாலும் கட்டைக் குரல்ல ஆண்டாளம்மா முப்பது பாட்டும் அப்பா பாடறப்ப கண்ணு தளும்பிடும்.''

''ப்ச்சு... அவரை கேலி பண்றவாளும் உண்டு.''

''அது பொச்செரிச்சல் தாயே! அவரு நட்புக்கு கட்டுப் படுவாரு. அதிகாரம் பண்ணா போடாம்...னுவாரு. என் கடை, நான் நல்லா இருக்கக் காரணமே அவருதான் தாயே.''

''கேட்க சந்தோஷமா இருக்கு. உல்லாசி, உல்லாசின்னு அப்பாவை இங்கக்ககூட...''

''அட... எவன் உல்லாசி இல்லை? தோண்டி மோந்தா அத்தனையும் நாத்தம்தான். இங்கு எவனுக்ரும் பயப்படாத, நான் அப்படித்தான்டான்றது போங்காயிருச்சி... பல பேருக்கு.''

''காபி சாப்பிட்டீங்களா?''

''சாப்பிட்டேன் தாயே, ஒரு விஷயம்.''

''சொல்லுங்க?''

''தனியா வர்றீங்களா... ஹால்ல வேணாம்.''

தோட்டப்பக்கம் போய் மகிழ மரத்தடியில் நின்று அடிக்குரலில் ஆளவந்தார் பேச ஆரம்பித்தார்.

''அவரு இறந்த அன்னிக்கு சாயந்திரம் லட்சத்து அறுவதாயிரம் கேஷ் கொடுத்தேங்க. சிகப்பு தோல் ப்ரீஃப்

கேஸ்ல போட்டுக்கிட்டாரு. வந்துதா... இல்லை ஹோட்டல்ல வுட்டுட்டாரா? வூட்டுக்கு அது வந்துதா - கேட்கணும்னு ஒரு இது.''

''இல்லையே.''

''நினைச்சேன். ஹோட்டல்ல பார்த்தீங்களா?''

''ரூம் பூட்டி சாவி வச்சிருக்கேன். போய் பார்த்த போது எதுவும் கண்ல படல. இரண்டு ஃபைல், ஒரு விஸ்கி பாட்டில், பேண்ட், ஷர்ட் இருந்தது. அங்கேயே இருக்கட்டும்னு ஹோட்டல்ல சொல்லிட்டு வந்துட்டேன்.''

''இன்னும் காலி பண்ணலையா?''

''இல்லை. நான் வாடகை தரேன், கவலைப்படாதீங்கன்னு சொல்லிட்டேன். கார்ல இருக்குமோ?''

''கார் எங்க?''

''இங்க இருக்கு. அதுல எதுவும் இல்லையே. அண்ணா தான் ஹோட்டல்லேர்ந்து ஓட்டிண்டு வந்தான். கார் கீ ரூம்ல இருக்கு.''

''அதுல வேற ஒரு பண்டல் இருந்ததும்மா. ரூவா பண்டலா காக்கி கவர் சுத்தி வச்சுருந்தது. நான் கேட்கலை. பிரிக்கறப்ப கண்ணுல பட்டுது.''

''எத்தனை மணிக்குப் பார்த்தீங்க?

''நாலு மணிக்கு. அம்பத்தூர் ஆர்.வி.எஸ். கம்பெனி லேர்ந்து நேர வரேன்னாரு. அஞ்சு நிமிஷம் பேசினாரு. எடுத்து கேஷா கொடுத்தேன். பேப்பர் கொடுன்னாரு. மொத நாள் மாலை முரசு கொடுத்தேன். சுத்தி வச்சுக்கிட்டாரு.''

''வேற ஏதாச்சும் சொன்னாரா?''

''இல்லீங்க. தண்ணீ போடலாம் வரியான்னாரு.

'நாலு மாசத்துல மூணு லட்ச ரூபா தம்பி வரியா தண்ணி போடலாம்?' - பொட்டி தட்டி கூப்பிட்டாராம்.

'வவுறு சரியில்லீங்க. நெஞ்சுல காரம் ஏறுது, அடிக்கடி. நீங்க போயிட்டு வாங்க.'

'நீ வரலை?'

'வரலை.'

'அப்ப நான் போறேன்.'

அச்சானியமாய் சொல்லிவிட்டுக் கிளம்பியிருக்கிறார். ''இஷ்டமிருந்தா, மனசு மாறினா வா.'' - ஹோட்டல் பெயர் சொல்லியிருக்கிறார்.

ஆளவந்தார் மனசு மாறவில்லை. அப்பா தனியே போய்விட்டார். எவளோ விட்டுவிட்டு அந்த ஹோட்டல் அறையில் தனியாய்...

''ஆமா அந்தக் காசு எங்க?''

''அதாம்மா சந்தேகத்துல இத்தனையும் சொல்றேன்.''

''வீட்டுக்கு வரலையே.''

''ஒரு வேளை ஹோட்டல்ல இருக்குமோ?''

''நான் ஒரு பெட்டியும் பாக்கலையே அங்கே.''

''நல்லா பார்த்தீங்களா?''

''நல்லா பார்க்கலை.''

''பாருங்க.''

''ஆளவந்தார். இப்ப போலாமா. உங்க கார் இருக்கா?''

''நானும் நீங்களுமா?''

''ஏன்?''

''ஹோட்டலுக்கு வேணாம்மா. அண்ணாரைக் கூட்டிக்கிட்டுப் போங்க.''

மைதிலி யோசித்தாள். பூட்டி அறைசாவி தன்னிடம் இருக்கிறது. யார் திறப்பார்கள். நாளைக்குப் போனால்...

''நான் போய்க்கிறேன் ஆளவந்தார்.''

''நன்றிம்மா. பொட்டி கிடைச்சதும் போன் பண்ணுங்கம்மா.''

''சரி!''

போய்விட்டார்.

மைதிலிக்கு உள்ளே லேசாய் ஒரு பதற்றம் எழுந்தது.

4

மூணு லட்சம் ரொக்கம் கணக்கில் வராத கறுப்புப் பணம். ஹோட்டலில் இல்லை என்றால் என்ன செய்ய முடியும்? யாரிடம் போய் புகார் கொடுக்க முடியும்? ஏது இத்தனை பணம் என்றால் என்ன பதில்?

கண்டுபிடித்துக் கொடுத்துவிட்டால் வாங்கின மறுவினாடி இன்கம்டாக்ஸ் குழு சிரித்துக் கொண்டு உள்ளே நுழையும். எல்லா ப்ரீஃப்கேஸும் திற என்று கேட்கும், ஆர்.வி. எஸ். கம்பெனி கணக்குக் காட்டு என்று வீடு புரட்டும், ஆர்.வி.எஸ். கம்பெனியைத் தட்டும். ஆளவந்தாரை சட்டை பிடித்து விசாரிக்கும்.

'செத்துப் போன கம்மனாட்டி சொதப்பிட்டான்' என்று அப்பாவை எல்லோரும் ஏசும்படி ஆகும்.

மூணு லட்சம் ரொக்கம் கணக்கில் வராத கறுப்புப் பணம் இருக்குமா, ஹோட்டலில்? இல்லை யாராவது தேட்டை போட்டிருப்பார்களா?

அது நல்ல ஹோட்டல். மரியாதையான ஐந்து நட்சத்திரம். அப்பாவை இரண்டு முறை லுங்கியோடு ஹோட்டலின் சொந்தக் கார் கொண்டு வந்து இறக்கியிருக்கிறது. வாந்தியெடுத்த உடைகளைச் சுத்தம் செய்து ஒப்படைத்திருக்கிறது.

உடைகளை ஒப்படைப்பார்கள். மூன்று லட்சம் ரொக்கம் ஒப்படைப்பார்களா? ஐந்து நட்சத்திர ஹோட்டல் திருடாதா? திருட்டு ஆளே அங்கு இருக்க மாட்டார்களா?

போய்ப் பார்க்கலாமா? இப்போதே அண்ணாவை அழைத்துக் கொண்டு போய்ப் பார்க்கலாமா? அண்ணாவை மட்டும் தனியே அழைத்துச் செல்லலாமா?

மன்னி கேட்பாள். 'என்ன ரகஸ்யம், எனக்கும் சொல்' என்று கேட்பாள்.

'பணம் கிடைத்தால் மூன்று பேரும் சரியாய் பங்கு போட்டுக் கொள்ளலாம்' என்பாள்.

கிடைக்கவில்லையெனில், ''கிழம் எங்க குடிச்சு எவகிட்ட தாரைவார்த்துதோ... வந்து வாக்கப்பட்டேனே இப்படி ஒரு சாக்கடைல...'' முகவாய் இடிப்பாள்.

அப்பா செத்த அன்று தன் உறவுக்காரர்களிடம் எல்லாம் ஏக ரகஸ்யம் பேசினாள். 'இனிமே கொஞ்சம் நிம்மதி' என்று அலுத்துக் கொண்டாள். மன்னிக்கு அப்பாவின் ஒழுக்கம் பற்றி ஓர் இளக்காரம் இருந்தது. இந்தக் காசு கிடைக்கவில்லை என்றால் இளக்காரமும் அதிகமாகும். அவள் உறவெல்லாம் செய்தி பரவும்.

''சுளையா மூணு லட்சம் மாமி! எவகிட்ட போச்சோ?'' வாய் கூசாமல் அப்பாவின் வாழ்க்கை விமரிசிக்கப்படும்.

காலையில் தனியே போனால் என்ன?

ஹோட்டலில் கேட்பார்கள். ''ரூம் வெகேட் செய்கிறீர்களா?'' கூட ஆள் அனுப்புவார்கள். தேட முடியாது. தேடி, கிடைக்கவில்லையெனில் கேட்க முடியாது.

என்ன செய்யலாம்? என்ன செய்யலாம்? அண்ணாவிடம் பேசத்தான் வேண்டும். ஓர் ஆண் துணை இல்லாது இந்தக் காரியத்தில் இறங்குவது கஷ்டம்.

ஒருவேளை காசு இருந்து, எடுத்து வர வேண்டியிருந்தால் அப்போதும் தனியே எடுத்து வருவதைவிட ஓர் ஆண்துணையோடு வருவது நலம். மைதிலி, அண்ணாவைத் தேடினாள்.

அண்ணாவின் அறை திறந்திருந்தது. உள்ளே யாரும் இல்லை. அடுப்படியில் சமையல் மாமி மட்டும் உட்கார்ந்திருந்தாள். மைதிலிப் பார்த்து எழுந்து நின்றாள். பின்கட்டு கிணற்றடியில் ராமு குளித்துக் கொண்டிருந்தார்.

''மாமி மன்னி எங்கே?''

''இங்க வரலடியம்மா. மாடிக்குப் போனாப்பல இருந்துதே.''

''அண்ணா?''

''நான் பார்க்கலையே.''

''மாடியில் அப்பாவின் அறை பூட்டப்பட்டிருந்தது, பின்பக்க ஹாலில் உறவினர்கள் படுத்துக்கொண்டிருந்தார்கள். மன்னியும் அண்ணாவும் அங்கே வரவில்லை என்று தெரிந்தது.

மைதிலி படியிறங்க, மேல்மாடியில் விளக்கு வெளிச்சம் தெரிந்தது.

யார்மேல் மாடில? பசங்க யாராவது போயிருப்பாளா? சமையல் ஆட்களா? படியேறினாள். கதவு ஒருக்களித்து சாத்தியிருந்தது.

''மைதிலி கல்யாணம் உங்க வேலையில்லை. என் வேலையில்லை. அதுக்கு என் காசு செலவழிக்கக்கூடாது. ஏன்... உங்க அக்கா செய்யட்டுமே. அவளுக்கு பாத்தியதை இல்லையா?''

- மன்னி குரல் கேட்டது.

மைதிலி அசையாது நின்றாள்.

''நான் சொல்றதக் கேளுங்கோ, பெரிய பொறுப்பா இழுத்து விட்டுக்க வேண்டாம். நமக்குக் குழந்தைகள் இருக்கு. அதுங்க எதிர்காலம் முக்கியம்.''

''சரிடி. காசா தரப்போறோம். கல்யாணம் நின்னு பண்ண வேண்டாமா;''

''எதுல பண்ணுவேள்?''

''அவ காசுலதான்.''

''அதைஅவளேபண்ணிக்கட்டுமே. உங்களுக்கு என்ன?''

''அது நன்னாயிருக்குமா?''

''சரிப்பா. இங்க பாரு. பாரேன், நான் சொல்றதக் கேட்கணும்.''

கதவு இடுக்கு வழியே மன்னி அண்ணாவை இழுத்து நெஞ்சோடு இறுக்கிக்கொண்டது தெரிந்தது.

''உங்கப்பா முகரையைப் பார்த்துத்தான் உங்க கல்யாணம் நடந்ததுன்னு பேச்சு. இப்ப யார் முகரையைப் பார்த்து மைதிலி கல்யாணம் நடக்கும்? உங்களைப் பார்த்துத்தானே. உங்க காசு செலவழிக்காம உன் சொத்து வித்து உன் கல்யாணம்னா ஒத்துக்குவாளா மைதிலி?''

''அப்படித்தான்னு சொல்லிடப் போறேன்.''

''நடக்காது.''

''நடக்கும்.''

''நாலு பேர்கிட்ட சொன்னா விடமாட்டா. உன் சொத்தை வித்து நடத்தும்பா.''

''அதுக்காக நீயே பண்ணிக்கோன்னு விடமுடியுமா?''

''உங்களைக் கேட்டு எம்.பி.ஏ. படிச்சாளா? உங்களைக் கேட்டுத்தான் சொத்து வாங்கிண்டாளா? இந்தப் படிப்பு படிச்சவளுக்குப் புருஷன் செலக்ட் பண்ணிக்கத் தெரியாதா? இப்போதைக்கு அவ கல்யாணப் பேச்சு வேண்டாம். கிழவன்

செத்த ஒரு வருஷத்துல கல்யாணம் செய்தா நல்லதுன்னு யாராவது சொல்வா. சரின்னு கேட்டு வரப்படாது. ஆறப்போடுங்கோ.''

''நாலு நாளா ஆறிப் போயிருக்கேடி.''

''எது?''

''என் உடம்பு?''

''ச்சீ...''

''வாயேன்.''

''இங்கேயேவா?''

''கீழ் கசகசன்னு ஜனக்கூட்டம். இங்கதான் சவுகர்யம்.''

''ச்சு... கையெடுங்கோ.''

''ச்ச்.. நாயே... கிட்ட வா.''

அண்ணா புரள்வது தெரிந்தது. மைதிலி மெல்லப் படியிறங்கினாள். படி திருப்பத்தில் நின்று கதவு வழியே பார்த்தாள் இரண்டு ஜோடி கால்களும் பின்னித் தவித்தன.

மைதிலிக்கு வியர்வை பொங்கிற்று. அயர்ச்சி கண்ணை இருட்டிற்று.

அண்ணா இனி ஒட்டமாட்டான். எந்த உதவியும் பண்ணமாட்டான். இவனிடம் பேசுவதில் புண்ணியமில்லை.

மன்னியின் கொழுத்த இடுப்பு மடிப்புக்குள் சிக்கியவனை மீட்பது சிரமம். மீட்கவேண்டிய அவசியமும் இல்லை.

காலையில் ஆளவந்தாரைத் துணைக்கு அழைத்துப் போகவேண்டும். 'நீங்க எனக்கு தமையன் போல' என்று கைகூப்பி அவரை உதவிக்கு அழைக்க வேண்டும்.

ஆளவந்தார் வர மறுக்கலாம். அவர் எதற்கோ பயப்படுகிறார். ஒரு வேளை காசு கிடைக்காமல் போனால் என்னவாகும் என்று யோசிக்கிறாரா? அல்லது அந்த ஹோட்டலுக்கே என்னோடு வர கூச்சப்படுகிறாரா?

கடவுளே! மூணு லட்சம் ரொக்கம். அத்தனையும் கறுப்புப் பணம், கிடைத்து மிரட்டினாலும், கிடைக்காது போனாலும் ஏகக் குழப்பம்.

அப்பா, அதை ஏன் அங்கு எடுத்துப் போனாய்? யாருக்குப் பங்கு பிரிக்க உத்தேசித்தாய்? ஒரு வேளை கெட்ட பெண்களுக்கு இறைக்கவே இத்தனை காசும் எடுத்துப் போனாயா? கடைசியா ஒரு சூதாட்டம் ஆடிட்டுப் போகலாம் என்கிற நினைப்பா?

அப்பா... அந்தக் காசு ஹோட்டலில் இருக்குமா? நான் நாளைக்கு காலை போகும்போது எனக்குத் துணை இருக்கிறாயா?

தன் அறைக்குப் போய்த் தாளிட்டு உடைகளைக் களைந்து பூத்துவாலையோடு ஷவர் திரும்பியபோது அண்ணாவின் அறைக் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. அண்ணாவின் அறை பாத்ரூம் ஷவரும் சப்தமிட்டது. மன்னி சினிமா பாட்டோடு வளையொலி எழும்ப பக்கெட் நகர்த்துவது கேட்டது.

ஆட்டம் முடிந்துவிட்டது போலும். மன்னி உடம்பெல்லாம் நீர் ஓட நிற்பதை மனசு உணர்ந்தது.

''ச்சீ... நாயே கிட்ட வா.''

''நாய்தான். எப்போது வாலாட்ட வேண்டும். எப்போது குரைக்க வேண்டும் என்று தெரிந்த நாய். தீனி போட்டவன் எஜமான் என்று தீர்மானம் செய்து கொள்கிற நாய். விளக்குக் கம்பத்திற்கு கால் தூக்குகிற நாய். தரை தோண்டி தனக்கு மட்டும் என்று புதைத்து வைக்கிற நாய். 'கிட்ட வா' என்றால் முகத்தை நக்குகிற நாய். நக்கிவிட்டு வந்து ஷவரில் குளிக்கிற நாய்.

ச்சே. பெண்கள் ஏன் இத்தனை அல்பமாய் இருக்கிறார்கள்? புருஷனை மயக்கவே உடுத்துவதும், மயங்கியவன் மல்லாக்க சாய அவிழ்ப்பதும்.... ஏன் இந்தக் கூனி புத்தி?

ஒரு வேளை இதுதான் இல்லறமோ? இதுதான் குடித்தனப் பாங்கா? எனக்கு ஏன் காமம் எகிறவில்லை? புருஷ சுகம் பெரிதாய்ப் படவில்லை? நானும் இப்படி ஆவேனோ? உரசி உரசி காதோடு பேசுகிற பொண்டாட்டியாய், மொட்டை மாடி தாசியாய், சொத்து சேர்க்கிற கற்புக் கனலியாய், மாமனாரைத் துப்பிவிட்டு அவர் சொத்தை அமுக்கித் தின்கிற குடும்பத்தலைவியாய், நாத்தனாரை நாசமாய்ப் போக என்கிற மருமகளாய்... கடவுளே.... இது என்ன வாழ்க்கை...?

''டீ ரேவதி. அப்பா மூணு லட்சம் கேஷ் விட்டுப் போயிருக்காடி. மைதிலி எடுத்துக் கொடுத்தா.''

''மூணு லட்சமா...? கேஷா...? மைதிலி உனக்கு இந்த சாரி ரொம்ப நன்னா இருக்கு. ஆளுக்கு ஒரு லட்சமா பிரிச்சுக்குவோம். உமாவுக்கு சொல்ல வேண்டாம். உங்களுக்கு எதுக்கு ஒரு லட்சம்? என்கிட்ட கொடுங்கோ. வைர அட்டிகை பண்ணிக்கணும். பதின்மூன்று வயசுலேர்ந்து ஒரு கனா. உங்க பொண்டாட்டி வைர அட்டிகை போட்டுக்கப் படாதா?''

''வைர அட்டிகைதானே... போட்டுக்கோ. ஆனா, ஒரு கண்டிஷன்.''

''என்னன்னா?''

''வைர அட்டிகை மட்டும்தான் போட்டுக்கணும். வேற ஒண்ணும் கூடாது. வெறும் வைர அட்டிகை மட்டும் ஜிலுஜிலுன்னு போட்டுண்டு அப்படியே லட்டு மாதிரி வந்து நிக்கணும்.''

''ச்சீ...''

நாய் நிற்கும். கழுத்தில் மட்டும் பட்டை கட்டிக் கொண்டு போய் நாய் நிற்கும். ஆண் நாய் பல்லிளித்து, உடல் முகர்ந்து, உரசி, உரசி... சரி, எனக்கென்ன. இது குடித்தனம், குடும்ப பாங்கு, கணவன் மனைவி அந்தரங்கம். நான் யார் இதைக் குறை சொல்ல...?

நான் எந்த நாய் முன்பு லட்ச ரூபாய் பட்டைக் கட்டிக் கொண்ட பெண் நாயாய் நிற்கப் போகிறேனோ தெரியவில்லை. நிற்க என்னால் முடியுமோ? புரியவில்லை.

என் சொத்து, என் கல்யாணம் என்று பிரித்து விட்டார்கள். இனி அவர்களோடு ஒட்ட முடியாது. உதவிக்கும் கூப்பிட முடியாது. எந்த உதவிக்கும் இனி ஆள் சேர்க்க முடியாது.

என்ன செய்யலாம் யாரோடு ஹோட்டலுக்குப் போகலாம். மூன்று லட்சம் ரொக்கம், அத்தனையும் கறுப்புப் பணம்.

மைதிலி குளித்துவிட்டு உடை மாற்றி சாப்பிட உட்கார்ந்தாள். மன்னி பரிமாற முற்பட்டபோது மறுத்து தானே சாதம் போட்டுக் கொண்டாள்.

''அப்பா இல்லாத வீடே வெறிச்சுக் கிடக்கு.'' - மன்னி தலையில் கை வைத்து தட்டு முன்பு உட்கார்ந்திருப்பதை விநோதமாய்ப் பார்த்தாள். மனசுக்குள் சிரித்தாள்.

இரவு திடுக் திடுக்கென்று விழிப்பு வந்தது. விடியலில் நல்ல தூக்கம் வந்தது.

குளித்துவிட்டு டிபன் சாப்பிட்டுக் காரெடுத்துக் கிளம்புகையில் அண்ணா 'எங்கே?' என்று கேட்டான்.

''டாக்டர் வீட்டுக்கு'' என்று பதில் சொல்லிவிட்டு கார் சாவியை திருகினாள். கேட்டை ராமு திறக்க. விரைவாய் ஹோட்டல் நோக்கி செலுத்தினாள்.

கடவுளே! அந்தப் பெட்டி அங்கே இருக்க வேண்டும். இல்லை எனில் என்ன செய்யப் போகிறோம்? யாரைக் கேட்கப் போகிறோம்? இருக்கும். எங்கே போகும்? அங்குதான் இருக்கும் வண்டியை ஹோட்டல் லாபிக்குள் செலுத்தி பார்க்கிங் இடம் தேடி ரிவர்ஸ் ஓட்டி நிறுத்தினாள். இறங்கினாள்.

உடம்பு படப்படப்பு அதிகமாயிற்று.

எந்த தெய்வத்திடமாவது வேண்டிக்கொள்ளலாம். என்று தோன்றியது.

வேண்டாம். பெட்டி உள்ளே இருக்கும். அனாவஸ்ய மாய் உழப்பிக்கொள்ள வேண்டாம். மைதிலி அமைதியாய் இரு. கலவரம் காட்டாதே, சமனப்படுத்திக் கொண்டாள். ரிசப்ஷன் நோக்கிப் போனாள்.

5

''யெஸ் ப்ளீஸ்.''

- ரிசப்ஷன் பளிச்சென்று புன்னகை செய்தது.

''வேகேட் செய்யப் போகிறீர்களா?''

''இல்லை. அப்பா இறந்த இடத்தில் சின்ன சடங்குகள் செய்ய வேண்டியிருக்கின்றன. பதின்மூன்று நாள்கள் கழித்து வெகேட் செய்யலாம் என்பது எண்ணம். அப்படி ஒரு சம்பிரதாயம் உண்டு.''

''அந்த இடம் சுத்தம் செய்யப்பட வேண்டும்.'' - ரிசப்ஷன் கவலைப்பட்டது.

''நான் சொல்வது எனக்கு மட்டுமல்ல. ஹோட்டலுக்கும் நல்லது. ஒரு உயிர் பதின்மூன்று நாள்கள் வரை இறந்த இடத்திலேயே உலவும் என்பது இந்து நம்பிக்கை.''

''தெரியும். எதற்கும் ஜெனரல் மேனேஜரைக் கேட்டுக் கொள்ளலாம். அறைக்குப் போகிறீர்களா? அங்கு அவரை வரச் சொல்லட்டுமா? கீ உங்களிடம் இருக்கிறதல்லவா?''

''நன்றி அறைக்கு ஜி.எம்.ஐ. வரச் சொல்லுங்க. நான் பேசுகிறேன். வாடகை பற்றிக் கவலைப்பட வேண்டாம்.''

''ஓ... நோ...'' கையசைத்து அந்தக் கவலை இல்லை என்று ரிசப்ஷன் காட்டியது.

லிஃப்ட் பட்டனை அழுத்தி மைதிலி காத்திருந்தாள். பெட்டி கீழிறங்கி கதவு தானாய் திறந்ததும் உள்ளே புகுந்து மறுபடி பட்டனை அழுத்தினாள். நான்காவது மாடிக்குள் நுழைந்தாள்.

நானூத்திப் பத்து நோக்கி வராண்டாவில் கடக்கும் போது கால்கள் பின்னின. கதவுத் துவாரத்தில் சரியாகச் சாவியை நுழைக்க முடியாது கை நடுங்கிற்று.

பெட்டி இருக்கும். உள்ளே அமைதியாய் ஒரு மூலையில் மூன்று லட்சம் கரன்ஸியோடு இருக்கும்.

கதவு திறந்தாள். கதவுத் தானே மூடித் தாழிட்டுக் கொண்டது.

ஒரே ஓர் ஒற்றை ரோஜா படுக்கையில் நீண்ட காம்பும் இலையுமாய்க்கிடந்தது. எப்போது வைத்தது... வதங்கியிருந்தது.

நேற்று முன் தினமா? அல்லது அப்பவை எடுத்துப் போகும்போது வைத்ததா? எத்தனை நாள் வாடல் இது? ஏ.ஸி. கட் பண்ணப்பட்டிருந்தது.

கதவு அருகே போய் குமிழிகளைத் தட்டி வெளிச்சம் வரவழைத்தாள். ஏ.ஸியை முழு வேகத்துக்குத் தள்ளினாள். குப்பென்று குளிர் காற்று அறைக்குள் நுழைந்தது.

சுற்றி ஒரு பார்வைக்குப் பெட்டி இல்லை.

கட்டிலுக்கு அடியில் குனிந்து பார்த்தாள். பெட்டி இல்லை.

மர பீரோக்களின் கதவுகளை நகர்த்திப் பார்த்தாள். பெட்டி இல்லை.

மேஜை அறைகளை இழுத்துப் பார்த்தாள். பெட்டி இல்லை.

பாத்ரூம்... குளியல்தொட்டி... குளியலறை... அலமாரி குப்பைத் தொட்டி.. எங்கும் பெட்டி இல்லை.

படுக்கையைத தூக்கிப் பார்த்தாள். தலையணையைப் புரட்டினாள். அறையெங்கும் நடந்து பார்த்தாள். பெட்டி இல்லை. மூன்று லட்ச ரூபாய் இல்லை. காணோம்.

யாரைக் கேட்பது?

எங்கே தேடுவது

எப்படிக் கண்டுபிடிப்பது? தலைசுற்றியது. நெஞ்சில் ஒரு துக்கம் ஏறி மூச்சு அடைத்தது. யாரோ மல்லாக்கத் தள்ளுவது போல் ஒரு நடுக்கம். உதறல் வந்தது. தடுமாறினாள். கட்டிலில் உட்கார்ந்து கன்னத்தில் கை வைத்தாள்.

யாரைக் கேட்பது.

எங்கே தேடுவது?

எப்படிக் கண்டுபிடிப்பது?

ஹோட்டலில் அமுக்கி விட்டார்களா? அறையைப் பூட்டிக் கிளம்பியதும் மாஸ்டர் கீ போட்டு சுத்தம்செய்ய வந்து பெட்டி பார்த்து அமுக்கி விட்டார்களா?

யார்...?

பெல் பாயா?

செக்யூரிட்டியா.

ஹோட்டல் ஜெனரல் மேனேஜரேவா.

அப்பாவைத் தெரியும் என்பதால் நடந்த கொள்ளையா?

'குடிச்சுட்டு எங்க போட்டாரோ' என்கிற சால் ஜாப்பா...

'இனி இந்த ஐயரு உயிரோட வந்து எங்க கேட்கப் போறார்' என்கிற தைரியமா?

இப்படி ஒரு காரியம் ஐந்து நட்சத்திர ஹோட்டல் செய்யுமா?

யாரை நம்ப முடியும்?

இதற்குமுன் மூன்று முறை அப்பாவை ஹோட்டல் கொண்டு வந்து வீட்டில் போட்டிருக்கிறது. டூத் பேஸ்ட், டூத் ப்ரஷ் உட்பட கொண்டு வந்து கொடுத்திருக்கிறது. பெட்டியை எடுக்குமா? இல்லை. வாய்ப்பு இல்லை.

இருப்பினும் கேட்க வேண்டும். ஹோட்டலை விசாரிக்க வேண்டும்.

என்ன விசாரிப்பது.

'பெட்டி எங்கே' என்றா...?

பெட்டிக்குள் என்ன இருந்தது என்றால் தெரியாதென்றா...?

மூன்று லட்சம் கறுப்புப் பணம் என்று ஹோட்டலில் சொல்ல முடியுமா?

முட்டாள்தனம்.

வெளியே கதவு தட்டும் சத்தம் கேட்டது.

எழுந்தாள். தாழ் நீக்கி கதவு திறந்தாள்.

ஹோட்டல் ஜி.எம்.

கை கூப்பினார்.

''குட்மார்னிங் என்று சொல்ல ஆசை. ஆனால், நீங்கள் இன்னும் மனம் தேறியிருக்க மாட்டீர்கள். அதனால் மவுனமாய் கூப்புகிறேன். மிஸ் மைதிலி. என் ஆழ்ந்த அனுதாபங்கள். அவர் ஆன்மா சாந்தியடையட்டும். ஏதோ சடங்கு செய்வதாக கூறினீர்களாம்.''

''ஆமாம்.''

''தீ வளர்த்து ஹோமம் போலவா... ப்ரீஸ்ட் வருவாரா.. இது இரண்டும் கூடாது. புகை வர ஆட்டோமெடிக் அலாரம், நெருப்பு அலாரம் அடிக்கும். உரக்க மந்திரம் சொல்வது மற்றவர்களுக்கு இடைஞ்சலாய், வியப்பாய், வேடிக்கையாய் இருக்கும்.''

''இரண்டுமில்லை. மாவிலையால் புனிதநீர் தெளித்து ஓர் அகல்விளக்கு ஏற்றி வணங்கி மலர் தூவுதல். இரண்டு நிமிடவேளை. நானே செய்வேன். அது ஹோட்டலுக்கு நல்லது. இது எதிர்பாராத மரணமல்ல.''

''நல்லது. ஹோட்டலும் மலர்கொத்து வைத்து வணங்கும். என்று இந்த செரிமனி?''

''பதின்மூன்றாம் நாள்.''

''அதுவரை...''

''என் பொறுப்பில் அறை இருக்கும்.''

''நல்லது. வாடகை பற்றிக் கவலை இல்லை. மிஸ்டர் ஐயர் எங்கள் நெடுநாள் கஸ்டமர். பன்னிரண்டு நாள் வாடகை போதும். செரிமனி அன்று வாடகையை ஹோட்டலே ஏற்கும், வேறஹெதாவது வேண்டுமா?''

''அவர் விட்டுப்போன பொருட்களை சேகரிக்க வந்திருக்கிறேன்.''

''பொருட்கள் ஏதுமில்லை. இரண்டு ஃபைல், சட்டை பேண்ட் பேனா. பர்ஸ் இருந்தது. பாடியோடு அவற்றை உங்கள் சகோதரர் பெற்றுக் கொண்டாரே...''

''இந்த ரோஜாப்பூ யார் வைத்தது?''

''என் செக்யூரிட்டி, இந்த ப்ளாக் செக்யூரிட்டி. இதைப் பார்த்த முதல் ஆள் அவர். இறந்தது தெரிந்த முதல் ஆள். உடனே பூ வரவழைத்து வைத்ததாகக் கூறினான்... ஏன்?''

''ஒன்றுமில்லை.''

''சொல்லுங்க. ஏன் இதைக் குறிப்பாகக் கேட்டீர்கள்?''

''ஒரு பெட்டியைக் காணோம்.''

''என்ன? என்ன பெட்டி?''

''ப்ரீஃப்கேஸ். நம்பர் லாக் உள்ளது, சிவப்புக்கலர்.''

''என்றிலிருந்து காணோம்.''

''இவர் இறந்த அன்றிலிருந்து காணோம். அது இவருடன் இருக்கும் பெட்டி.''

''என்ன இருக்கிறது அதில்?''

''தெரியவில்லை. முக்கிய பத்திரங்கள், உயில்காப்பி, பிஸினஸ் தகவல்கள் இருக்கலாம்.''

''மை காட்.''

''இங்குதான் விட்டாரா? இங்கு எடுத்து வந்தாரா?''

''தெரியவில்லை.''

''கண்டுபிடிக்கலாம்.''

''எப்படி?''

''விசாரிக்கலாம். பேரர் துணையில்லாது அறைக்குள் வந்திருக்க முடியாது. கூட வந்த பேரர் யார் என்று தெரிந்து விசாரிக்கலாம்.''

''ரகசியமாய் செய்ய முடியுமா?''

''ஏன்?''

''பிஸினஸ் தகவல்கள் ரகசியமானவை.''

''ம்... ம்... ஜி. எம். தலைகுனிந்து யோசித்தார்.

''ஒரு பேரரிடம் விசாரித்தால் சகலருக்கும் தெரியும். திருட்டுப் போயிருக்க வாய்ப்பிருப்பதாகக் கருதுகிறீர்களா?''

''சொல்ல முடியவில்லை.''

''பெரிய தொகை உள்ளே இருந்திருக்கிறதா?''

''தெரியவில்லை.''

''மிக முக்கியம் வாய்ந்ததா அந்தப் பெட்டி?''

''நிச்சயம்.''

''என்ன நம்பரில் திறக்கும்?''

''அது ரகசியம்.''

''நான் முயற்சி செய்கிறேன் மிஸ் மைதிலி. நான்கு நாள்கள் சும்மா இருந்து விட்டீர்களே?''

''எனக்கே பெட்டி பற்றி நேற்றுதான் நினைவுக்கு வந்தது. அப்பா போன துக்கத்தில்...''

''புரிகிறது. இந்த ஹோட்டலில் திருட்டு நடக்க வாய்ப்பில்லை. ஆனால், இங்கு வேலை செய்பவர்கள் மனிதர்கள்தானே? மனிதர்கள் பற்றி என்ன சொல்ல முடியும்? ஐ'ல் ட்ரை மை பெஸ்ட்.'' போனுக்கு அருகே போனார்.

''ஜி.எம். ஹியர். வின்ஸென்ட் மான்யூவலைக் கூப்பிடு. ரூம் நானூற்றுப் பத்து. உடனே வரச்சொல்.''

அறையைச் சுற்றிப் பார்த்தார். பாத்ரூம் திறந்து பார்த்தார். மண்டி போட்டு, கட்டிலுக்குக் கீழே பார்த்தார்.

வாசல் கதவு தட்டும் ஒலி கேட்டது.

''கம் இன்!'' குரல் கொடுத்தார். கதவு தள்ளும் முயற்சி தெரிந்தது.

மைதிலி குமிழ் திருகித் திறக்க முன்னேறினாள். ஜி.எம். கைநீட்டித் தடுத்தார். காத்திருந்தார்.

''சார்! வின்ஸென்ட் மான்யூவெல் ஹியர்.''

''கம் இன் வின்ஸென்ட்.''

பளிச்சென்று சாவி போடப்பட்டது. கதவு திறக்கப் பட்டது. கறுப்பாய், உயரமாய், வெள்ளைப் பற்களும், அடர்த்தியான மீசையும், கருநீல சஃபாரியில் ஒரு நடுத்தர

வயது ஆள் உள்ளே வந்தான். சின்னதாய் மிலிட்டரி சல்யூட் அடித்தான்.

''வின்ஸென்ட். உன்னிடம் எப்போதும் மாஸ்டர் கீ இருக்குமா?''

''எட்டு மணி நேர ட்யூட்டியில் இரண்டு மணி நேரம் மாஸ்டர் கீ இருக்கும் சார்?''

''கூட யார் இருப்பார்கள்?''

''ஹவுஸ் கீப்பர் வனிதா.''

''வனிதா எங்கே...?''

''நானூற்று ஒன்பதில் துப்புரவு செய்கிறார். கூப்பிட்டதாக போன் வந்தது. வந்தேன்.''

''மிஸ்டர் வின்ஸென்ட்.''

''யெஸ் சார்.''

''தனியாய் மாஸ்டர் கீ உபயோகிக்கக் கூடாது. பொறுப்பாய் யாரும் அருகே இருக்க வேண்டும் என்பது கட்டளை அல்லவா?''

''கட்டளையை நான் மீறவில்லை.''

''உன்னோடு யாருமில்லையே. தனியாக இப்போது இங்கே மாஸ்டர் கீ உபயோகபடுத்தியிருக்கிறாயே... ஏன்?''

''பொறுப்பானவர் உடனிருந்ததால் திறந்தேன்.''

''யார் பொறுப்பானவர்?''

''நீங்கள் சார். உள்ளே நீங்கள் இருப்பது தெரிந்து கொண்ட பிறகுதான் மாஸ்டர்ட கீ உபயோகித்தேன், இவர்கள் அழைத்தால் வனிதாவை உடன் நிறுத்தியிருப்பேன்.''

''குட். மிஸ்டர் சங்கரன் போன பிறகு இந்த அறை திறக்கப்பட்டதா?''

''யெஸ் சார். அன்று இரவு திறக்கப்பட்டது.''

''மாஸ்டர் கீ உதவியுடன்?''

''யெஸ் சார்.''

''உடன் இருந்தது யார்?''

''மிஸ் வனிதா.''

''லாக் புக்கில் திறந்தது எழுதப்பட்டதா?''

''உடனே.''

''ஏன் திறந்தீர்கள்?''

''பாடி அப்புறப்படுத்தப்பட்டதே தவிர பாத்ரூம் க்ளீன் செய்யப்படவில்லை. மேலும் அறையை மறுபடி ஒரு கம்ப்ளீட் செக் செய்ய நான் விரும்பினேன்.''

''மிஸ்டர் வின்ஸெண்ட்.''

''யெஸ் சார்.''

''மிஸ் வனிதாவை உடனே வரவழையுங்கள்.''

வின்ஸெண்ட் வெளியேற, ஜி.எம். தடுத்தார். ''போன் இருக்கிறதே, மிஸ்டர் வின்ஸெண்ட்?''

வின்ஸெண்ட் ஆபரேட்டரிடம் கேட்டு வனிதாவைத் தொடர்பு கொண்டான். வரச் சொன்னான்.

வனிதா உள்ளே நுழைய, ஜி.எம்., வின்ஸெண்டைப் போகச் சொன்னார். வின்ஸெண்ட் சல்யூட் செய்து கதவு சாத்திவிட்டுப் போனான்.

''மிஸ் வனிதா.''

குள்ளமாய், சிவப்பாய், பூசின உடம்பாய், பாப்தலையாய், புடவை ஒருபுறம் சரிந்து மேடு காட்ட வயிறு தெரிய, பெரிய சிரிப்புடன் வனிதா நின்றிருந்தாள்.

''யெஸ் சார்.''

''மிஸ், ஐயர் இறந்த பிறகு இந்த அறை திறக்கப் பட்டதா?''

''யெஸ் சார். ஒரு முறை.''

''எதற்கு?''

''ஃபார் க்ளீனிங் த டாய்லெட்.''

''ஆளில்லாத போது க்ளீனிங் எதற்கு?''

''பாடி அப்புறப்படுத்திவிட்ட பிறகு ஒரு முறை முழுவதுமாய் அறையை சுத்தம் செய்ய விரும்பினேன்.''

''நீங்களாய் விரும்பினீர்களா? சுத்தம் செய்ய உத்தரவு இடப்பட்டதா?''

''நானாய் நினைத்தேன். பாடி போன பிறகு கதவு பூட்டி விட்டோம். மறுநாள் ரொடீனில் இதையும் சுத்தம் செய்தால் என்ன என்று தோன்றியது. இறந்த உடல் இருந்த இடம் கிளீனிங் மிகவும் அவசியம் என்று சுகாதாரம் கருதித் தோன்றியது.''

''யாரைக் கூப்பிட்டீர்கள்?''

''மிஸ்டர் வின்ஸெண்ட்டை கன்ஸல்ட் செய்தேன். 'போலீஸ் வேலை பாக்கி இருக்கா. ரூம் சுத்தம் செய்யலாமா?' என்று கேட்டேன். 'பாடி பரியல்க்ரவுண்ட் போய் விட்டது. உன் வேலையைச் செய்' என்றார்.''

''யார் கீ போட்டது?''

''வின்ஸெண்ட்.''

''முழு நேரமும் அருகே இருந்தீங்களா?''

''இருந்தேன். பாத்ரூம் சுத்தமாய் இருந்தது. உபயோகப்படுத்தப்படவில்லை, இருப்பினும் ஒருமுறை ஃப்ளஷ் செய்தேன். படுக்கை மடிப்புகளை சரிசெய்தேன்.''

''பிறகு?''

''நானும் வின்ஸெண்ட்டும் வெளியேறினோம்.''

''இறந்தவர் உடல் இருந்த இடம் என்று சொன்னா அதற்கு ஏதேனும் நிவாரணமாய் செய்தாயா?''

''இல்லை.''

''ஏன்?''

''கலைக்க விரும்பவில்லை. மேலும் இந்த ரூம் வெக்கேட் செய்யப்படவில்லை. என்று புத்திக்குத் தோன்றியது. கஸ்டமர் கலைக்க விருப்பப்படாமல் இருக்கலாம். கேட்டு செய்யலாம் என்று திரும்பி விட்டேன்.''

''மிஸ் வனிதா. நான்கு நாளுக்குப் பிறகு இந்த அறை க்ளீனிங் பற்றி கேட்டும் மறக்காமல் வரிசையாக நடந்ததைச் சொல்கிறீர்கள்... எப்படி?''

''இது இம்பார்ட்டென்ட் ரூம் சார், என்னைப் பொறுத்தவரை.''

''எப்படி?''

''என் நாலு வருட சர்வீஸில் முதல் முதலாய் ஒரு ஹோட்டலில் மரணம் பார்த்தேன். இது மறக்காது என் வாழ்நாள் முழுவதும். இவர் இறந்து மறுநாள் இங்கு நுழைந்தபோது வேதனையாய் இருந்தது. அவை எதுவும் மறக்காது.''

''நேச்சுரலி! நீ போகலாம் வனிதா.''

''சார் ஒரு கேள்வி.''

''யெஸ்.''

''எதும் காணோமா?''

''ஏன் கேட்கிறாய்?''

''மேடம் கவலையாக இருக்கிறார். நீங்கள் குடைந்து குடைந்து கேள்வி கேட்கிறீர்கள்.''

''யெஸ் வனிதா.''

''என்ன என்று சொன்னால் நான் உங்களுக்கு உதவ முடியமா என்று பார்க்கிறேன்.'' வனிதா கண்களில் கள்ளம் இல்லை.

ஜி.எம். யோசித்தார்.

''நான் மறுபடியும் கூப்பிடுகிறேன். அதுவரை...''

''இதுபற்றி எவரிடமும் பேசாது இருக்கவேண்டும்.''

''யெஸ். தாங்க்யூ.''

வனிதா கதவு திறந்து வெளியே போனாள்.

மைதிலி மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்தாள்

''இது ஐந்து நட்சத்திர ஹோட்டல் மிஸ் மைதிலி. இங்கு கெட்டிக்கார ஆண் - பெண்களை அபௌவ் ஆவ்ரேஜ் ஆட்களைத் தேர்ந்தெடுக்கிறோம். மிரட்டியோ குறுக்குக் கேள்வி கேட்டோ இவர்களை உடைத்துவிட முடியாது. இவர்கள் திருட முயற்சி செய்ய மாட்டார்கள். கேரியர் கெட்டுவிடும். மூவாயிரம் சம்பளம் கெட்டுவிடும். ஒரு வேளை திருடினால் கண்டுபிடிப்பது கஷ்டம். மேலும் யூனியன் உண்டு இங்கே.''

''புரிகிறது. ஆனால், பெட்டி ஹோட்டலுக்கு வந்ததா என்று கேட்கவில்லையே நீங்கள்? அப்படி விசாரிக்கவேயில்லை?''

''இங்கேயே உடைத்துவிடக்கூடாது. விஷயம் பரவி உஷாராகிவிடக்கூடும். அந்த விசாரணையை ரிசப்ஷனில் ஆரம்பிப்போம்.''

ரிசப்ஷனுக்குப் போய் காடெக்ஸ் புரட்டினார். கம்ப்யூட்டர் பட்டன்களை அழுத்தினார்.

மிஸ்டர் சங்கரன் ஆறு மணிக்கு இன் செய்திருந்தார். எந்தப் பொருளும் டெபாஸிட் செய்யப்படவில்லை. அட்வான்ஸ் தெளிவாக இல்லை. நாலு மணிக்கு ரூம் வேண்டும் என்று டெலிபோன் மெஸேஜ் இருந்தது. அந்த ரூமுக்கு என்ன சப்ளை ஆகியிருக்கிறது என்று கம்ப்யூட்டரில் கேட்க...

ஓர் ஆரஞ்சு ஜூஸ். ஒரு ப்ளேட் ரவா இட்லி. சோடா நான்கு. டுட்டிஃப்ருட்டி ஐஸ்கிரீம் ஒன்று.

ஆல்கஹால் வயிற்றில் இருந்திருக்கிறது. ஐஸ்கிரீம், ஆரஞ்சு ஜூஸ் எப்படி? முக்கால் பாட்டில் விஸ்கி இருந்திருக்கிறது. ஐஸ்கிரீம் எப்போது சாப்பிட்டிருக்க முடியும்? விஸ்கி, ஆரஞ்சு ஜூஸ்... ஐஸ்கிரீம் ஒட்டவில்லையே. மது குடிப்பவர் ஐஸ்கிரீம் சாப்பிடமாட்டார்களே... ஐஸ்கிரீம் யாருக்கு? ஆரஞ்சு ஜூஸ் யாருக்கு? யாரோ விருந்து வந்திருக்கிறது. ரிசப்ஷன் பதிவு செய்யவில்லை.

''யார் பெல் கேப்டன்? யார் பேரர்?''

''குஞ்சப்பன் பெல் கேப்டன். கங்காதரன் பேரர்.''

''கூப்பிடு.''

''கங்காதரன் வரவில்லை லீவ். குஞ்சப்பனுக்கு இன்று விடுமுறை தினம். நாளை நைட் டூட்டி.''

''கங்காதரன் ஏன் லீவு?''

''வயிற்றுப்போக்கு.''

''நாலாவது மாடிக்கு ஆறு பேர்கள் உண்டு. யார் யார்?''

''அப்பு, குணசேகரன், மில்டன். ராஜசேகர், கங்காதரன், கருப்புசாமி.''

நேரே கிச்சன் யூனிட்டுக்குப் போனார். ஆர்டர் புத்தகங்களைத் தேடி எடுத்தார். யார் ஆர்டர் வாங்கியது?

நட்சத்திர ஹோட்டலில் ஆர்டர் செய்தவுடன், கொடுத்த ஆர்டர் தரப்பட்டு உடனே கையெழுத்து வாங்கப்படும்.

முதல் ஆர்டரில் ஆரஞ்சு ஜூஸ், ரவா இட்லி, சோடா நான்கு கங்காதரன் வாங்கியிருக்கிறான். சங்கரன் கையெழுத்திட்டிருக்கிறார்.

அடுத்து ஐஸ்கிரீம் தனியே ஆர்டர் செய்யப்பட்டிருக்கிறது. மில்டன் எழுதியிருக்கிறான். யார் கையெழுத்தும் இல்லை.

''ஏன்? மில்டன் எங்கே?''

''இன்னிக்கு ஐந்தாவது மாடி மாத்திக்கிட்டான்.''

''கூப்பிடு.''

கூடவே இருந்த மைதிலி அவர் பரபரப்பு கண்டு கவலைப்பட்டாள்.

''என்ன விஷயம் சார்.'

''கூட யாரோ இருந்திருக்கிறார்கள், மைதிலி கெஸ்ட் இருந்திருக்கிறார்கள். என் அறைக்கு வாருங்கள்.''

ஹோட்டல் ரிசப்ஷன் மைதிலியைக் கூர்மையாய்ப் பார்த்தது. ஏதோ தகராறு. ஜி.எம். அலைகிறார் என்று புரிந்து கொண்டது. கிசுகிசுப்பாய் பேசிற்று.

''பரவிவிடும் போலிருக்கிறதே.''

''வேறுவழியில்லை மைதிலி!''

ஜி.எம். அறை பெரிது. வரைபடங்கள், வேலையாட்கள், தகவல்கள் இருந்தன.

காத்திருந்தார்கள்.

மில்டன் வரத் தாமதமாயிற்று. மறுபடி பட்டனை அழுத்தி ஐந்தாவது மாடியை விசாரித்தார்.

''மில்டன் இங்கு இல்லையே. விசாரித்து அனுப்புகிறேன் சார்.''

''அங்குதானே ட்யூட்டி?''

''யெஸ் சார்.''

மறுபடி இன்டர்காம் அழுத்தி சீஃப் செக்யூரிடி ஆபீஸரைத் தொடர்பு கொண்டார்.

''பாண்டியன்.''

''யெஸ் சார்.''

''உடனே ஒரு காரியம் செய்ய வேண்டும். மில்டன் பேரர் எங்கே யாருடன் இந்த க்ஷணம் இருக்கிறான் என்று பாருங்கள். அவன் ட்யூட்டி ஐந்தாவ்து மாடியில், அங்கு

அவன் இல்லை. உடனே கண்டுபிடியுங்கள். கண்காணியுங்கள்.''

''யெஸ் சார்.''

காத்திருந்தார்கள்.

மைதிலி நகம் கடித்தாள்.

ஜி.எம். கவலைப்பட்டார். வேறு போன்கால்கள் வந்தன. ஏ.ஸி. ரூமில் வால் கிளாக் சப்தம் பெரிதாய்க் கேட்டது. ஜன்னலுக்கு வெளியே கீழே வாகனங்கள் விரைவது தெரிந்தது.

கண்ணாடிக்கு அந்தப் பக்கம் இரண்டடி அகலம் சிமெண்ட் பலகை. அதற்குக் கீழே தொட்டி போன்ற அமைப்பு.

அந்தத் தொட்டியிலிருந்து மணிப்ளாண்ட் படரவிட்டு மேலே ஏற்றப்பட்டிருந்தது. சுவரில் செடி முளைத்து ஜன்னலை எட்டிப்பார்ப்பது போல் வசீகரத்துடன் இருந்தது.

''என்ன பார்க்கிறீர்கள் மைதிலி?''

''ஒவ்வொரு ஜன்னலுக்குக் கீழேயும் சிமெண்ட் தொட்டி இருக்கிறதா?''

''ஆமாம். சுவர் முழுக்க செடி பரப்ப உத்தேசம்.''

''தண்ணீர் எப்படி?''

''மாதம் ஒரு முறை தண்ணீர் விட்டால் போதும். காற்று ஈரத்தில் வளரும் செடிகள் இவை.''

கதவு தட்டப்பட்டது.

கருநீல உடையும் அதே தொப்பியுமாய் கூர்மையான போலீஸ் மீசையுடன் ஓர் ஆள் உள்ளே நுழைந்தார். சல்யூட் செய்தார்.

''மில்டன் ஈஸ் சிட்சாட்டிங் வித் எ செக்யூரிட்டி பர்ஸனல் அட் த ஃப்ளோர்.''

''யார் அது?''

''வின்ஸென்ட் மான்யூவெல்.''

''என்ன பேசுகிறார்கள் புரிந்ததா?''

''இல்லை. தொலைவிலிருந்து கவனித்தேன்.''

''போய் காஷுவலாக மில்டனை இங்கு அழைத்து வாருங்கள். எங்கே என்று சொல்ல வேண்டாம்.''

பாண்டியன் வெளியேற, மறுபடி இன்டர்காம் அழுத்தினார். ''சாவித்திரி. ப்ளீஸ் கம் டு மை ரூம் இம்மீடியட்லி. ப்ளீஸ், ரஷ் அப்.''

நாற்பது வினாடியில் சாவித்திரி தோன்றினாள். ரிசப்ஷன் பெண் போலிருக்கிறது.

''என்ன சார்?''

''அப்படி சுவரோரம் நில். கை கட்டு.''

கட்டினாள்.

''நான் இப்போது கத்துவேன். திட்டுவேன். பதில் பேசாது இரு. இது ஒரு நாடகம். ஒரு சின்ன வலை. உனக்கு இதில் சம்பந்தில்லை. நான் போகச் சொன்னதும் மவுனமாய்ப் போ.''

''சார்!''

''ப்ளீஸ்! ஹெல்ப் மீ சாவித்திரி. பேர் வித் மீ.''

''யெஸ் சார்!''

காத்திருந்தார்கள்.

கதவு தட்டப்பட்டது. பீரோவில் பதித்த நிலைக் கண்ணாடியைத் திருப்பி வாசல் தெரியும்படி வைத்துக் கொண்டார்.

''யெஸ் கமின்.''

பாண்டியன் தோன்றி நடந்து வழி விட, ஓர் இளைஞன் வந்து நின்றான். சின்ன சிரிப்பு முகத்தில் இருந்தது.

''வேர் ஸ்த பாக்ஸ்? அந்தப் பெட்டி எங்கே...? தெரியாதுன்னு எப்படிச் சொல்ற? உனக்குத் தெரியாம எங்க

போயிருக்கும்? நோ, சாவித்திரி உன் பதில் எனக்கு சமாதானமாகவில்லை. நீ சொல்வது உண்மை இல்லை. சொல், எங்க அந்தப் பெட்டி?'' - உரத்த குரலில் ஜி.எம். அதட்ட,

சாவித்திரி விழித்தாள்.

இளைஞன் முகம் மாறினான்.

''ஹூ ஈஸ் தட்?''

''மிஸ்டர் மில்டன் பேரர் சார்.''

''சாவித்திரி யூ கேன் கோ நௌ. பாண்டியன் நீங்களும் போகலாம்.''

வெளியேறினார்கள்.

ஜி.எம். மவுனமாய் உட்கார்ந்திருந்தார். ஃபைல் புரட்டினார். தொலைபேசியில் யாருடனோ ஏதோ சம்பந்தமில்லாமல் பேசினார்.

அந்த இளைஞன் நெளிந்தான். விரல்கள் பின்னினான். கதவுக்குப் பின்னால் திரும்பிப் பார்த்தான். மைதிலியை நோக்கிப் புன்னகை செய்தான். மறுபடி நெளிந்தான்.

''யெஸ்.''

''கூப்பிட்டீர்களாமே சார்.''

''நீ யார்?''

''மில்டன்? பேரர். செகண்ட் க்ரூப்.''

''எந்த இடம் ட்யூட்டி?''

''ஐந்தாவது ஃப்ளோர்.''

''நீ ஏன் அங்க இல்லை?''

''ஒண்ணும் கால் இல்லை சார். நாலாவது ஃப்ளோர்ல மிஸ்டர் வின்ஸென்டோட பேசிட்டிருந்தேன்.''

''என்ன பேச்சு? ட்யூட்டில இருக்கும்போது என்னைய்யா பேச்சு?''

''ஸாரி சார்.''

''வாட் ஸாரி சார்? திஸ் ஈஸ் த வார்லிங்! போ, உன் இடத்துக்கு.''

''யெஸ் சார்! ஸாரி சார்.'' படபடத்து கதவுப் பக்கம் போனான்.

''மில்டன்.''

''யெஸ் சார்.'' திரும்பினான்.

''மிஸ்டர் சங்கரன் செத்துப் போனாரே... நம்ம ஹோட்டல்ல நாலு நாள் முன்னாடி... அவரைத் தெரியுமா?''

''தெரியும் சார்.''

''அவங்க டாட்டர் இது. மிஸ் மைதிலி.''

''ஹலோ மேடம்.''

''ஹலோ.''

''மிஸ்டர் சங்கரனுக்குக் கடைசியா ஆர்டர் வாங்கினது நீதான்னு நினைக்கிறேன்.''

''இருக்கலாம் சார்.''

''என்ன சப்ளை பண்ணினே?''

''ம்ம்... தெரியலை. ஆர்டர் புக் பார்த்து சொல்றேன் சார்.''

''நினைவுபடுத்திச் சொல்.''

''தெரியலை சார். கஷ்டம் சார். அதற்குப் பிறகு பல ஆர்டர், பல கஸ்டமர்.''

''நியாயம். இது ஆர்டர் புக். பார்த்து சொல்.''

புரட்டினான். நிமிர்ந்தான். ''டூட்டிஃப்ரூடிட்டி சார். லார்ஜ் சைஸில் ஆர்டர் வந்தது. நான் ஸ்மால் சைஸ்தான் கொடுத்தேன். இப்போது நினைவுக்கு வருகிறது.''

''ஏன்?''

''காரணம் இருக்கு சார்.''

''சொல்.''

''தனியா சொல்றேன் சார். இங்க வேண்டாம்.''

''ஏன் இங்க வேண்டாம்?''

''இவர்கள் எதிரே வேண்டாம்.''

''மிஸ் மைதிலி! நீங்கள் இருங்கள். நான் பேசிவிட்டு வருகிறேன்.''

''மிஸ்டர் மில்டன் எதுவானாலும் இங்கேயே சொல்லலாமே. நோ அப்ஜெக்ஷன்!'' மைதிலி நிதானமாய் பேசினாள்.

''என்ன மில்டன். சொல்லேன்.''

''சார்...''

''யெஸ்.''

''ஒரு கெஸ்ட் கூட இருந்தாங்க. மிஸ்டர் சங்கரனோட அவங்கதான் போன்ல லார்ஜ் டுட்டிஃப்ரூட்டி சொன்னாங்க. நான் ஸ்மால் எடுத்துக்கிட்டுப் போனேன்.''

''ஏன்?''

''அது... அது...''

''யெஸ் மில்டன், சொல்லு.''

''அது கேஸ் சார்.. கிராக்கி''

-சட்டென்று ஓர் அமைதி அறைக்குள் படர்ந்தது. மைதிலி கண்களை மூடிக்கொண்டாள்.

''அப்பா'' என்று முனகினாள்.

''செக்யூரிட்டிக்குத் தெரியுமா, அவங்க உள்ள நுழைஞ்சது...?''

''தெரியும் சார். கஸ்டமர் சொல்லித்தான் வந்தாங்க.''

''அந்த அம்மாவைத் தெரியுமா?''

''தெரியும் சார். இரண்டு மூன்று தடவை இந்த ஹோட்டல்ல பார்த்திருக்கேன்.''

''சங்கரனோட யா...''

''இல்லை சார். வேற வேற ஆளோட.''

''ஆர் யூ ஷ்யூர்!''

''தெரியும் சார். அது கேஸ்.''

''லார்ஜ் ஐஸ்கிரீம் கேட்டா ஏன் ஸ்மால் கொண்டு போனீங்க?''

''அந்த மாதிரி கேஸுங்க கன்னாபின்னான்னு ஆர்டர் போடும். பின்னால கஸ்டமர் யாரைக் கேட்டு கொடுத்தேன்னு திட்டுவாங்க. அதனால நாங்க முடிஞ்சவரை டைரக்டா கஸ்டமர்கிட்ட கன்ஃபர்ம் பண்ணுவோம். முடியாதபோது யார் ரூம்ல இருந்து கேட்டாலும் கொடுத்துடுவோம்.''

''நீங்க கன்ஃபர்ம் பண்ணலயா கஸ்டமர்கிட்ட.''

''அவரு தூங்கறாருன்னுச்சு அது?''

''என்ன லாங்கேஜ் பேசிச்சு?''

''தமிழ் சார்.''

''எக்ஸாக்டா எப்படி ஆர்டர் செஞ்சது? அதே மாதிரி சொல்லு.''

''யார் அது ரூம்பாயா? எனக்கு ஒரு பெரிய ஐஸ்கிரீம் டுட்டிஃப்ரூட்டி எடுத்தா. சீக்கிரம் வரணும்.''

''நீ என்ன கேட்ட?''

''சங்கரன் எங்கன்னு கேட்டேன்?''

''அதுக்கு...''

''அவரு தண்ணி போட்டு நல்லா தூங்கறாரு, எனக்குப் பசிக்குது. எடுத்தான்னு சொல்லிச்சு.''

''பேர் தெரியுமா?''

''ஒவ்வொரு தடவை ஒவ்வோர் பேர். சில சமயம் சொல்லாதுங்க.''

''நீ பேசுவியா அவங்களோட?''

''கஸ்டமர் தூங்கிட்டா அதுங்க வராண்டால வந்ததும் மடக்கிப் பேசுவோம்.''

''கூட்டிட்டுப் போவீங்களா?''

''சில சமயம்.''

''பரவாயில்லை சொல்லுப்பா.''

''சில சமயம் ரூமிலேயே விளையாடுவோம்.''

''விளையாடுவோம்னா?''

''ப்ளீஸ்! வேணாம் சார் லேடீஸ் எதிர்க்க.''

''டெல் மீ எவரிதிங்.''

''சார்.''

''கோ ஆன் மில்டன்.''

''கிள்ளுவோம். கட்டிப்போம். கிஸ்கூட அடிப்போம்.''

''உபயோகப்படுத்துவீங்களா?''

''முடியாது சார். வேற கால் வரும். தேடுவாங்க.''

''இங்க விளையாடினீங்களா?''

''இல்லை சார். திட்டினேன்.''

''ஏன்?''

''பெரிசு கேட்டேன்னுச்சு. இது போறும் தின்னுன்னேன். போடா மயிராண்டின்னுச்சு. வெளிய வா. கிழிச்சிடறேன்னேன். அசிங்கமா திட்டுச்சு. வந்துட்டேன்.''

''அசிங்கமான்னா?''

''சார்! லேடீஸ் எதிர்க்க... வேணாம் சார்.''

''மில்டன்! இது போலீஸ் கேஸ் ஆகப்போகுது. உன்னைக் காப்பாத்திக்கணும்னா எல்லாம் சொல்லிடு.''

''இரண்டு ஸ்பூன் ஐஸ்கிரீம் அள்ளி சாப்பிட்டு...''

''ம்...ம் சாப்பிட்டு.''

''என் மூஞ்சில ஐஸ்கிரீம் நீட்டி நக்குடான்னுச்சு சார்.''

மைதிலி தலை குனிந்து கொண்டாள்.

''நீங்க என்ன சொன்னீங்க?''

''போடி.. ன்னு வந்துட்டேன்.''

''அப்ப சங்கரன்?''

''தூங்கிட்டு இருந்தார்.''

''நார்மலி?''

''வெரிமச் நார்மல்.''

''அசைவு இருந்துதா?''

''சப்தம் கேட்டு முனகினாரு.''

'அவங்க எப்ப போனாங்க?''

''தெரியலை சார்.''

''ஏன் கவனிக்கலை?''

''நாலு அஞ்சு கால் அதுக்குப் பிறகு அட்டெண்ட் பண்ணிட்டேன். பிஸியாயிட்டேன்.''

''யார் கிட்டயாவது சொன்னியா?''

''சொன்னேன்.''

''யார்கிட்ட?''

''வனிதா மேடம். ஹவுஸ் கீப்பர். உள்ள கிராக்கி உட்கார்ந்து ஐஸ்கிரீம் தின்னுது. உன் பெட்ஷீட் மொத்தமும் நாசம்னேன்.''

''வனிதா என்ன சொன்னாள்?''

''கங்காதரன் சொல்லிட்டான். நீ போன்னாங்க.''

''சங்கரன் செத்துப் போனது எப்பத் தெரியும் உனக்கு?''

''மறுநாள் மத்தியானம் நான் பாடிகூட பார்க்கலை. பத்து மணிக்கு ஷிஃப்ட் சேன்ஜ். மறுபடி மத்தியானம் இரண்டு மணிக்கு ரிப்போர்ட் பண்றபோது சொன்னாங்க.''

''மில்டன்.''

''யெஸ் சார்.''

''தாங்யூ வெரிமச். அவர் ரூம்ல ஏதாவது ஓர் பெட்டி பார்த்தியா?''

''இல்லை சார்.''

''யார் அவரை உள்ளே கொண்டு விட்டது?''

''கங்காதரன் சார்.''

''நீ போகலாம் மில்டன்.''

''பிராப்ளம் வராதே சார்.''

''வராது. நீ சொல்றது உண்மைதானே?''

''சத்தியம் சார்.''

போனான்.

மைதிலி மேஜையில் முகம் கவிழ்த்துக்கொண்டாள்.

''மிஸ் மைதிலி.''

- தலை நிமிர்ந்தாள்.

''போலீஸுக்குப் போகலாமா?''

''நோ.''

''ஏன்?''

''பெட்டில ப்ளாக் மணி இருக்கலாம்னு சந்தேகம் இருக்கு. போலீஸுக்குப் போக முடியாது.''

''நினைச்சேன். என்ன பண்ணப் போறீங்க?''

''அந்தப் பொம்பளை யாருன்னு தெரியணும்?''

''மிஸ் மைதிலி! அது என் வேலையல்ல. என் இடம் இங்கு முடிகிறது. தனிப்பட்ட முறையில் உங்களுக்கு உதவமுடியும்.''

''கங்காதரன் எப்படி?''

''வெரி சாஃப்ட் ஃபெல்லோ. இன்னிக்கு ஆள் விட்டு வரச் சொல்றேன்.''

''வேண்டாம்.''

''ஏன்?''

''அந்தப் பொம்பளை கண்டுபிடிக்க கங்காதரன் வேணும். அப்பா பெட்டியை எடுத்துண்டு உள்ள வந்தாரா தெரியணும். நானே விசாரிக்கறேன் கங்காதரன்கிட்ட. அவர் அட்ரஸ் தர முடியுமா?''

''நான் விசாரிக்க முடியும் இதை.''

''வேண்டாம். அவங்க ரொம்ப பயப்படறாங்க. மேனேஜர்னு. மறைக்க ட்ரை பண்றாங்க. நான் டாக்கிள் பண்றேனே.''

''அந்த லேடியை எப்படிக் கண்டுபிடிப்பீங்க?''

''நானே தனியா.''

''ஓர் ஆளை டெப்யூட் பண்ணட்டுமா?''

''யார்?''

''பாண்டியன்! கிரைம் ப்ராஞ்ச் போலீஸ் ரிடையர்ட். எங்க ஹோட்டல் செக்யூரிட்டி ஆபீஸர்.''

''யெஸ்! அனுப்புங்க. அவர் கேக்கற ஃபீஸ் தரேன்.''

''பாண்டியன்.'' இன்டர்காம் எடுத்துப் பேசினார்.

மைதிலி வெளியே வந்து காத்திருந்தாள். பாண்டியன் வெள்ளைச்சட்டையும், நீலப் பேண்ட்டுமாய் உருமாறி அவள் கார் அருகே வந்தான்.

6

‘‘மேடம், ஐயாம் பாண்டியன்.’’ குனிந்து கை நீட்டி கார் கதவு திறந்தார்.

‘‘கம் இன் மிஸ்டர் பாண்டியன்.’’

‘‘ஜி.எம். உங்களோட போகச் சொன்னார். கேஸ் முழுக்கச் சொன்னார். பெட்டியில என்ன இருக்கு மேடம்?’’

‘‘தெரியலை.’’

‘‘முக்கியமா ஏதாவது இருக்கும்னு நினைக்கறீங்களா?’’

‘‘சான்ஸ் இருக்கு.’’

‘‘காணமேன்றதால தேடறீங்களா, கண்டுபிடிச்சே ஆகணும்னு தேடறீங்களா?’’

‘‘புரியலை.’’

‘‘எவ்வளவு சீரியஸா தேடறீங்கன்னு கேட்கறேன்?’’

‘‘வெரி சீரியஸ்.’’

‘‘சரி, வடபழனி பக்கம் போங்க.’’

‘‘யாரைப் பார்க்க?’’

‘‘கங்காதரன்.’’

வண்டி கிளம்பியது. இடப்புறம் திரும்பி அண்ணாசாலை நோக்கி ஓடியது. சர்ச் தாண்டியது. மேம்பாலம் குறுக்கே போய் இடப்பக்கம் திரும்பி வடபழனி நோக்கி வேகமாய்ப் பறந்தது.

‘‘பெட்டி உள்ள வந்ததான்னு முதலில் தெரியணும். கங்காதரன் கவனிச்சிருந்தா நல்லது. வடபழனில எங்க?’’

‘‘நூறடி ரோடுல ஒரு குறுக்கு சந்து, மாணிக்க வாசகம் தெரு.’’

‘‘வீட்டில இருப்பாரா?’’

‘‘வீடு இல்லை. பேச்சலர் குவார்ட்டர்ஸ். வயிற்றுப் போக்குன்னு எழுதிக் கொடுத்திருக்கான்.’’

‘‘எத்தனை நாள் லீவ்?’’

‘‘நேத்து... இன்னிக்கு.’’

‘‘எப்படி விசாரிக்கப் போறீங்க?’’

‘‘நேரடியா... பொட்டி உள்ள வந்தது பாத்தியான்னு கேட்கப் போறேன்?’’

‘‘அவர் இல்லேன்னா?’’

‘‘அது அப்புறம் வர பிரச்சினை.’’

‘‘மிஸ்டர் பாண்டியன். உங்க ஃபீஸ் எவ்வளவு?’’

‘‘பெட்டி கிடைக்கட்டும் மேடம்! அதனுடைய வொர்த் உங்களுக்குத் தெரியாதபோது நான் என்ன ஃபீஸ் கேட்க முடியும்?’’

‘‘குத்து மதிப்பா சொல்லுங்களேன்?’’

‘‘கஸ்டமர் சர்வீஸா செய்யுங்கன்னு ஹோட்டல் அனுப்பியிருக்கு. ஒருவேளை ஹோட்டலே சார்ஜ் பண்ணலாம். அவசரப்பட்டு... நாம இது பத்திப் பேசுவானேன்? பெட்டி தேடுவோம். ரைட்ல திரும்புங்க.’’

‘‘இதுதான் நூறடி ரோடா?’’

‘‘யெஸ்!’’

நின்று மாணிக்கவாசகம் தெரு கேட்டார்கள். நாலு தெரு தாண்டி இடப்பக்கம் நுழைந்தார்கள்.

‘‘பதினெட்டாம் நம்பர் இதுதான். நாலு வீடுதள்ளி நிறுத்துங்க.’’

‘‘நான் வரணுமா?’’

‘‘வேண்டாம். கிளாஸ் ஏத்திட்டு உள்ள இருங்க. இங்க வரவழைக்கறேன்.’’

பாண்டியன் போனார். இரண்டு நிமிடத்தில் திரும்பினார்.

''இல்லை.''

''எங்க போயிருக்கார்?''

''அருணாசலம் ஸ்டூடியோல ஷூட்டிங்காம். அங்க போனாராம். நேத்து வரலையாம்.''

''ஷூட்டிங்குல பேரருக்கு என்ன வேலை?''

''பாதி பேரர் மெட்ராஸுக்கு சினிமா ஆசைல வந்த வங்கதான். அது 'க்ளிக்' ஆகாதபோது பசிக்கு பேரரா சேர்ந்துடுவாங்க. சான்ஸ் கிடைச்சா டக்குன்னு நின்னுடு வாங்க. யூ நோ.. இந்த கங்காதரன் எல்.சி. இ.சி.வில் இன்ஜினீயரிங் டிப்ளமா ஹோல்டர். கவர்ன்மெண்ட் வேலையை ரிஸைன் பண்ணிட்டு சினிமா சான்ஸ் தேடி குற்றாலத்துலேருந்து மெட்ராஸ் வந்தவர்.''

''நல்ல பழக்கமா?''

''இல்லை.''

''எப்படி இத்தனை சொல்றீங்க?''

''அவன் பர்ஸனல் ஃபைல் படிச்சுட்டு வரேன். நடத்தைல இதுவரைக்கும் ப்ளாக் மார்க் இல்லை.''

''இப்ப எங்க போறது?''

''அருணாசலம் ஸ்டூடியோ.''

சந்துபோல நுழைந்து திடீரென்று பெரிய திடல் வந்தது. ஓங்கி வளர்ந்த ஆலமரம், சுற்றி மண்மேடை, தடாகம், குடிசைகள், சிதிலமான கோயில், கட்டை வண்டிகள், கலர் சோடா வண்டிகள், பானை அடுக்குகள், நிறைய ஆட்கள், விளக்குகள் வெளிச்சப் பலகைகள், மின்சார ஒயர்கள், ஆண்களும் பெண்களுமாய் கிராமத்து மனிதர்கள் மாதிரி

நிறையப் பேர் உட்காந்திருந்தார்கள். சில பெண்கள் போர்த்திக் கொண்டு படுத்திருந்தார்கள்.

பாண்டியன் இறங்கி சுற்றி நோட்டமிட்டார். மைதிலி அருகே போய் ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''யார், என்ன வேணும்?''

''போலீஸ். ஓர் ஆள் தேடறேன். சும்மா இருங்க.''

பக்கத்திலிருந்தவர்கள் மிரள, பாண்டியன் முன்னேறினார்.

கையில் கள்ளு பாட்டிலுடன் ஒரு பையன் தாமரைத் தடாகத்துச் சுற்றுச்சவரில் உட்கார்ந்திருந்தான். ஏதோ ஒரு பெண்பிள்ளையுடன் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான்.

''ரெடி! ரெடி!'' குரல் கேட்டது.

''தேவையில்லாத ஆள் எல்லாம் ஃபீல்ட் விட்டு வெளியே போ.'' அதட்டல் கேட்டது.

நீண்ட விஸில் கேட்டது.

''நானொரு ராணி
நீயொரு ராஜா -
வாலிப வயசு விடலாமா ஹா....
நாளொரு மேனி
பொழுதொரு வண்ணம்.''

பாட்டு ஒலித்தது. மறுபடி விஸில் தர நின்றது.

உடம்பு முழுவதும் மறைத்த சல்வார் கமீஸ் உடையில் ஒரு பெண் நெளித்து ஆடினாள். இவளா டான்ஸர்? சாதாரணமாய் இருக்கிறாளே... எண்ணெய்ப் பசை முகம் பரட்டைத்தலை... இவளா கதாநாயகி...?

''ஓகே... ஷாட் ரெடி. நல்லா இருக்கு. கலா இன்னும் க்ரேஸ் மூவ்மெண்ட்ஸ் கொடு.''

அந்தப் பெண் இடுப்பைப் பல கோணங்களில் சுழற்றிற்று. க்ரேஸ் காட்டியது.

''யாருப்பா பேக் ரௌண்ட் ஆளுங்க. வாங்க.''

அந்த இளைஞன் கள்ளு பாட்டிலுடன் வந்தான். லுங்கியும், பனியனும் அணிந்து கால் பரப்பி குடித்தவன் போல் தள்ளாடி நின்றான். அவனோடு நாலு பேர் நின்றார்கள்.

''கூப்பிடுங்க ஆர்டிஸ்டை. டைம் ஆவுது.''

சல்வார் கமீஸ் பெண் நகர்ந்து கொள்ள,

உடம்பெல்லாம் ஜிகினாவாய், கோதுமை உடைத்த வெளுப்பாய் சிவந்த உதட்டுச் சாயமும் நீண்ட மை விழிகளும், லோ கட் ஜாக்கெட்டும், தொப்புள் தெரிந்த அரைப் பாவாடையுமாய் ஒரு பெண் வந்தாள்.

''குயிலி! அந்த க்ரூப் பின்னாடி போங்க. பாட்டு ஆரம்பிச்சதும் அவங்களைத் தள்ளிட்டு சென்டருக்கு வந்துடுங்க. இங்க மார்க் போடுய்யா. க்ரேன் ஷாட் மாமான்னு முடியறபோது க்ளோஸப்ல இருக்கும். நல்லா எக்ஸ்பிரஷன் காட்டணும். ரெடி... ரெடி... மானிட்டர்...''

அந்தப் பெண் உடம்பு சதை குலுங்க அந்தப் பையன் பின்னால போயிற்று.

''அடட, இதுதான் குயிலியா'' - மைதிலி வியந்தாள்.

''ஸ்டார்ட் சவுண்ட்!'' விஸில் தரப்பட்டது.

''நானொரு ராணி
நீயொரு ராஜா!
வாலிப வயசு விடலாமா...''

அந்த நாலு பேரை இரண்டாய்ப் பிளந்தபடி குயிலி உள்ளே வந்து நடனமாடினாள்.

''இன்னும் க்ரேஸ் கொடு குயிலி.''

''டேக்ல தூள் பண்ணிடறேன் சார். ஒரே கூட்டமா இருக்கு.''

''ஏம்ப்பா... தேவையில்லாத ஆளெல்லாம் வெளியே அனுப்பு. ஆர்டிஸ்ட் ஆட கூச்சப்படறாங்க பார்''

மைதிலி சங்கடத்துடன் பின்னே போனாள். பாண்டியன் அசையாது நின்றிருந்தார்.

விசாரித்தார்கள்.

''சூபரின்டெண்டெண்ட் ஆஃப் போலீஸ். க்ரைம் ப்ராஞ்ச்... ரிடையர்ட்'' என்பதை மெல்லச் சொன்னார்.

''உட்காருங்க சார்... என்ன மேட்டர்?''

''ஒண்ணுமில்லை. உங்க வேலையை கவனிங்க.''

ஆள் நகர, மறுபடி விஸில் தரப்பட்டது. மறுபடி மறுபடி நாலு முறை விஸில் கொடுத்து குயிலி ஆட, நாலாவது முறை ஓகே ஆனது.

''கங்காதரன்!'' பாண்டியன் நின்ற இடத்திலிருந்து கூப்பிட்டார். அந்தக் கள்ளு பாட்டில் பையன் குரல் வந்த இடம் தேடினான்.

இதுவரை பெட்டியை சுத்தமாய் மறந்திருந்த மைதிலி மறுபடி உயிர் பெற்றாள்.

''பாண்டியன் சார்... வாங்க, வாங்க. ஷூட்டிங் பார்க்க வந்தீங்களா?''

'என்னப்பா வயித்துப் போக்கா...?''

''ஸாரி சார். ரொம்ப நாள் கழிச்சு சாங் சீக்வேஷன்ல ஒரு ரோல் கிடைச்சுது. டைரக்டர் என் ஃப்ரெண்டு சார். எங்க ஊர் பக்கம். அதுதான் சார்...''

''பத்து நிமிஷம் பேசலாமா?''

''ஷாட் எடுக்க மாறுது சார். அரை அவர் பேசலாம்.''

''சங்கரன்னு ஒருத்தர்...''

''ஆமா சார். நம்ம கட்டடத்துல செத்துட்டார்.''

''அவரு டாட்டர் இவங்க.''

''வணக்கம்மா.''

''வணக்கம். இது என்ன கள்ளு?''

''இல்லம்மா மோரு. நேத்துலேர்ந்து கைல வச்சிருக்கேன். குலுக்கின குலுக்கலுக்கு இப்ப கள்ளா யிட்டிருக்கும்.''

''சங்கரன் செக் இன் பண்ணபோது யார் கூடப் போனது?''

''நான் சார்.'' வெள்ளையாய் சொன்னான்.

''லக்கேஜ் என்ன வச்சிருந்தார்?''

''ஒரு பொட்டி, ஒரு பார்சல்.''

''என்ன கலர் பெட்டி...?''

''சிவப்பு கலர் ப்ரீஃப்கேஸ்.''

''பார்சல் என்ன?''

''ஃபுல் பாட்டில் விஸ்கி சார். இப்போர்ட்டட்.''

''பெட்டி கலர் சிவப்பில்ல போலிருக்கே....''

''இல்ல சார். சிவப்புதான்.''

''எப்படிச் சொல்றே?''

''ரிசப்ஷன்ல கீ வாங்கிட்டு பொட்டிக்குக் கை நீட்டினேன். தரமாட்டேன்னுட்டார். அப்புறம் லிஃப்ட்ல பொட்டி தாங்கன்னேன். அப்பவும் மாட்டேன்னுட்டாரு.''

''ஏன்?''

''சில சமயம் சில பேர் தரமாட்டாங்க. ஆனா, நான் கேட்கறது வழக்கம். நான் தூக்கறேன்னு ரிக்வெஸ்ட் பண்றது வழக்கம். மாட்டேன்ன உடனே க்யூரியஸா பொட்டி பார்த்தேன். அதனால ஞாபகம் இருக்கு.''

''கெஸ்ட் வந்தாங்களா?''

''யெஸ் சார். ஆஸ் யூஷுவல்.''

''தெளிவா சொல்லு.''

''சங்கரன் வந்தா கெஸ்ட் வருவாங்க சார்.''

''லேடி கெஸ்டா?''

''ஆமா சார்.''

''உனக்கு ஆள் தெரியுமா?'

''எங்க ஏரியா பொண்ணுதான் சார்!''

''என்ன வயசு?''

''முப்பதுக்குள்ள இருக்கும்.''

''நல்லா பழக்கம் உண்டா?''

''பழக்கம் இல்ல சார். நான் யாருன்னு அவங்களுக்குத் தெரியும். அவங்க யாருன்னு எனக்குத் தெரியும். ஒரு தடவை காலைல ஆட்டோல வீட்டுக்குப் போவுது. நானும் ட்யூட்டி முடிச்சு வீட்டுக்குத் திரும்பினேன். ஆட்டோல ஏத்திக்கிட்டாங்க.''

''பேசினியா?''

''சினிமா பத்தி பேசினோம். புதுப்படம், பழைய படம். யாரு மார்க்கெட் நல்லா இருக்குன்னு பேசினோம்.''

''சினிமா ஆர்டிஸ்டா.''

''இல்ல சார். அவங்க வேற. அதான் தொழில்!''

''என்ன அன்னிக்கு சப்ளை பண்ணின?''

''அந்தப் பொண்ணு ஆரஞ்சு ஜூஸ் குடிச்சுது. சங்கரன் சார் விஸ்கி திறந்துட்டாரு. ரவா இட்லி கேட்டாரு...''

''எப்படி கரெக்டா ஞாபகம் வச்சு சொல்ற?''

''அந்த மாதிரி கேஸ் எல்லாம் முதல்ல ஆரஞ்சு ஜூஸ் தான் கேட்பாங்க.''

''ஏன்?''

'சாராய கேஸ். குடிச்சு குடிச்சு தொண்டை கரைஞ்சு போனவங்க அடிக்கடி ஜூஸ் சாப்பிடுவாங்க. பர்ட்டிக்குலரா இந்தப் பொண்ணு உடனே ஜூஸ் கேட்கும். இல்லை ஐஸ்கிரீம் கேட்கும்.''

''இப்ப உடனே வந்து அந்தப் பொண்ணை அடையாளம் காட்ட முடியுமா?''

''சார்... சார்... இது நல்ல சான்ஸ். என்னை ரெண்டு நாள் வுட்ருங்க சார்! லைஃப்ல பெரிய சான்ஸ் சார் இது.''

''நான் காசு தரேன் மிஸ்டர் கங்காதரன்.''

''காசு பெரிசில்லை மேடம், டிப்ஸிலே இந்தக் காசு எடுத்துடுவேன். இந்த சினிமா சான்ஸ் நான் காசு கொடுத்தாக்கூட கிடைக்காது. லைஃப்ல பெரிய பிரேக் சார் இது எனக்கு. ப்ளீஸ்.''

''அவ பேர் என்ன?''

''தெரியாது சார்.''

''இடம்... விலாசம் சொல்லு...''

''விலாசம் தெரியாது. எங்க ஏரியான்னு தெரியும்.''

''எனக்கு அந்தப் பொண்ணைப் பார்க்கணும்.''

''எதுக்கு சார்?''

''அதெல்லாம் உனக்கு வேண்டாம்.''

''சுந்தரத்தைப் பிடிச்சா சொல்வான் சார்.''

''யார் சுந்தரம்?''

''புரோக்கர், அவன்தான் ஹோட்டலுக்கு கூட்டி வரது.''

''எங்கே இருப்பான் அந்த சுந்தரம்?''

''வடபழனி கோயில்கிட்ட ஒரு லாட்ஜ் இருக்கு. அந்த லாட்ஜ் வாசல்ல போய் சுந்தரம்னு கேளுங்க. வருவாரு.''

''நீ இங்கதான இருப்ப...?''

''விடிய விடிய இங்கதான் சார் ஷூட்டிங். டேல டான்ஸ். நைட்ல ஸீன்.''

''கிடைக்கலைன்னா மறுபடி வருவேன்.''

''சார்... ஒரு விஷயம்.''

''என்ன...''

''சிஸ்டரை அங்க கூட்டிட்டுப் போவேணாம்.''

''ஏன்?''

''ஒரு மாதிரி இடம் சார் அது.''

''புரியுது. நான் பார்த்துக்கறேன்.''

''பாண்டியன் சார்...''

''யெஸ்.''

''தாங்க்யூ... லைஃப்ல உங்களை நான் மறக்க மாட்டேன்.''

''அங்க போய் நடி கண்ணா.''

பாண்டியனும் மைதிலியும் காருக்குத் திரும்பினார்கள்.

கங்காதரன் சொன்ன லாட்ஜ் தெரிந்தது. வாசலில் ஆட்கள் நின்றிருந்தார்கள். காரில் இருந்தபடி சுந்தரம் யாரென்று விசாரித்தார்.

''போலீஸுங்களா?''

''இல்லை.''

''சுந்தரம் சாயந்திரத்துக்கு மேல வருவான். இப்ப எங்கயாவது தூங்கிட்டிருப்பான். என்ன விஷயம்?''

''ஒரு சமாசாரம் பேசணும்?''

''இப்ப தேட முடியாதே.''

''அவர் வீடு எது?''

''வீட்ல இருக்க மாட்டான் சார். எங்காவது படுத்துத் தூங்குவான். எழுந்து வீட்டுக்குப் போய் குளிச்சுட்டு ட்ரஸ் மாத்திட்டு இங்க வந்துடுவான். என்ன சொல்லணும்?''

ஹோட்டல் பெயர் சொன்னார்.

''இரண்டு ஆள் வரணும் சாயந்திரத்துக்கு.''

''நான் இட்டாரேன். பார்த்து செலக்ட் பண்ணிக்கங்க.''

''இல்லை சுந்தரத்துக்குத் தெரியும்.''

அவன் குனிந்து மைதிலி முகம் ஊடுருவினான். பாண்டியன் கிளாஸ் ஏற்றினார்.

''சாயந்திரத்துக்கு வரேன். சுந்தரத்தை இருக்கச் சொல்லு.''

மைதிலி வண்டி கிளம்பினாள். கோடம்பாக்கம் மேம்பாலம் ஓரம் நிறுத்தினாள்.

'இப்ப என்ன செய்யறது பாண்டியன்?''

''பழக்கப்பட்ட ஆளுங்க. பார்த்த உடனே போலீஸுங்கறான். பதற்றமா விசாரிச்சா நழுவிடும். சாயந்திரம் நான் மட்டும் விசாரிச்சுட்டு வரேன். நீங்க போய் ரெஸ்ட் எடுங்க.''

''நானும் வரேன் பாண்டியன்.''

''தப்பா பார்க்கறான் மேடம்.''

''ஐ டோண்ட் கேர். நான் இல்லாம விசாரிக்காதீங்க?''

''ஏன்?''

''நான் விசாரணைல தவறு பண்ண விரும்பலை. கூட இருக்கறது உங்களுக்கு நல்லது. ஹோட்டலுக்கு நல்லது.''

''சரி, மேடம்.''

அவரைப் பாலச் சரிவில் இறக்கிவிட்டாள். ஆட்டோ நிறுத்தி ஏறியதும் புறப்பட்டாள். வீடு வந்தாள்.

சுருண்டு படுக்கையில் விழுந்தாள்.

7

''குழந்தை. சாப்பிட வரயா? சூடு ஆறிப்போறது?''

சமையல்கார மாமி குரல் வாசலில் கேட்டது.

கதவு திறந்து வெளியே வந்தாள்.

''அண்ணா, மன்னி சாப்பிட்டாச்சா?''

''பத்தரைக்கே ஆச்சு.''

''வெளியே போயிட்டாளா?''

''இல்லை. ரூம்ல சத்தம் கேட்டதே. உள்ளதான் இருக்கா.''

''உறவுக்காரா...''

''முடிச்சாச்சு. மளிகை சாமான் கொஞ்சம் வேணும் மைதிலி.''

'மன்னியைக் கேட்டேளா?''

''தூக்கம் கண்ணைச் சுழட்டறது, அப்புறம் சொல்லுங் கோன்னுட்டா.''

''என்ன வேணும்?''

''எழுதி வச்சுருக்கேன். சாப்பிட வா.''

லிஸ்ட்டை ஒருமுறை பார்த்துவிட்டு அறைக்குச் சென்று ஆயிரம் ரூபாய் காசு எடுத்து ராமு மாமாவிடம் கூப்பிட்டுக் கொடுத்தாள். உடனே வாங்கிப் போடச் சொன்னாள்.

இது யார் காசு. எவர் செலவு? இந்த வீட்டு சமையல் செலவை, நிர்வாகச் செலவை இனி யார் சுமப்பது? எப்படிப் பகிர்வது? என்ன கணக்கு?

பகல் பத்தரை மணிக்குப் புருஷனும், மனைவியும் ஏ.ஸி. ரூமில் கதவு பூட்டிக் கொண்டுவிட்டால் மிச்சகாரியம்

எப்படி நடப்பது? மன்னியைக் கூப்பிட்டுப் பேசலாம். எப்படிக் கூப்பிடுவது? கதவு தட்டியா... அலுத்துக் கொள்வாளோ?

பகல் பத்தரை மணிக்கு ஒரு குடித்தனப் பெண்ணுக்கு என்ன அலுப்பு. ஒருவேளை எந்நேரமும் பூட்டின அறைக்குள் புருஷனோடு இருக்கிற பெண்ணுக்கு அலுப்பு வரத்தான் வரும். தவறு அண்ணாவின் மீதோ?

இவனும் அப்பாவோ? பெண்ணில்தான் சந்தோஷமே என்று நினைக்கற புருஷனோ? பேசும்போதுகூட மனைவி இடுப்புத் தசை மடிப்புகள் தடவித் தடவிப் பேசுவது இதனால்தானோ? தேவடியாளைத் தேடிப் போக மனசு தைரியமில்லாது பொண்டாட்டியே தேவடியாளாய்... அது சரி... இப்படிப்பட்ட அப்பனுக்கு இப்படித்தான். பிள்ளை பிறக்கும். காமத்தில் உதித்தது காமம்தான் கக்கும்.

ச்சே... நான் ஏன் இத்தனை வெறுப்பாய் யோசிக்கிறேன்? பத்தாம் நாள் காரியத்துக்கு என்ன பண்ணணும், என்ன செலவு... எங்கு பேசுவது... எப்போது பேசுவது? அண்ணா விடம் சொல்லி மன்னியை வரவழைக்கலாமா?

'காத்தால வண்டியைப் புசுக்குன்னு எடுத்துண்டு போனா உங்க தங்கை. எங்க போனாளோ... யாரைப் பார்த்தாளோ... உச்சி வேளைல வந்து என்ன டிஸ்கஷன். பெரிசா தான்தான் தாங்கறா மாதிரி? அவ எங்க போனா? அதக் கேளுங்கோ முதல்ல.'

பேச்சு வருமோ?

வந்தால் எங்கு போனதாய் சொல்வது. டாக்டர் வீடு பொய் என்று தெரிந்துவிடுமோ? ஏழுலேர்ந்து பத்தரை வரைக்கும் டாக்டர் வீடா? அதென்னடி டாக்டர் அவர்? என்ன வைத்தியம் அது? கேலி வருமோ?

பத்தாம் நாள் காரியம் என் தலையெழுத்து. மன்னிக்குப் பொறுப்பில்லை. வேண்டுமானால் அவள் கேட்கட்டும். கேட்கிறபோது இந்த ஆயிரத்தைத் திருப்பி வாங்கிவிட வேண்டும். இது உன் வீடு. உன் குடித்தனம், உன் செலவு.

பிரிதல் வந்துவிட்டது. விரிசல் ஏற்பட்டு விட்டது. பழைய சந்தோஷம் தடேரென்று நின்று போய்விட்டது.

டைனிங் டேபிளில் அரை மணி காத்திருந்தாள். கதவு திறக்கப்படவில்லை.

கதவு அருகே போய் தட்ட கை நீட்டினாள். உள்ளே டேப்ரிக்கார்டர் சத்தம் கேட்டது. துள்ளல் சங்கீதம். பாட்டு விவரம் புரியவில்லை.

என்ன பாட்டு?

'நான்தான் ராணி நீதான் ராஜா வாலிப வயசு விடலாமா?' - ஷூட்டிங் பாட்டு ஞாபகம் வந்தது.

இது வாலிப வயசா? இல்லை, எல்லா வயசுமே வாலிபமா? பெண்ணை ஹோட்டல் அழைத்துக்கொண்டு போய் என்ன...?

கடவுளே.

ஹால் கடந்து வாசலுக்குப் போனாள். வராண்டா வழியே அப்பாவின் அறைக்குப் போனாள்.

இரட்டை சோபா, ஒரு கட்டில், இரண்டு காட்ரெஜ் பீரோ, புத்தக அலமாரி, டேபிள், சுழல் நாற்காலி, அறையின் நடுவே ரத்தினக் கம்பளம், அழுக்குத் துணி கூடை, சின்ன கோட் ஸ்டாண்ட்.

நேர் சுவரில் அம்மா படம், ஏலக்காய் சரிகை மாலை போட்ட அம்மா படம்.

மத்திய வயசு அம்மா படம், வலது பக்க ரவிக்கையும், கெட்டித் தாலிக்கொடியும், கருமணிச் சரமும் கழுத்தோடு ஒட்டின அட்டிகையும் பதக்கமும், மூக்குத்தியும் பெரிய

குங்குமப் பொட்டும், நெற்றி வகிட்டுத் தீற்றலும் போட்டே எடுக்கற மாதிரி சிரி என்கிற கட்டளைக்குப் படிந்த சிரிப்புமாய் புடையை மடிப்பில் உடல் வாளிப்பு தெரியவில்லை. மடித்து மடித்து பட்டுப்புடவை போர்த்தியிருந்தது.

கன்னம் செழுமையாய் இருந்தது.

அப்பாவால் கிள்ளப்பட்ட கன்னம். முத்தமிடப்பட்ட கன்னம். புருஷன் கோதி விட்ட தலைமுடி. இறுக்கிக்கட்டிக் கொண்ட தோள்கள்.

ச்சே... நான் ஏன் எப்போதும் கூடலையே யோசிக்கிறேன்? எதன் விளைவு இது? மகிழ மரத்தடியில் உட்கார்ந்து பாட்டு கேட்டபடியே இன்கம்டாக்ஸ் ரூல்ஸ் படித்துக் கொண்டிருந்த புத்தியா என்னுடையது? என்னவாயிற்று எனக்கு?

பெயர் தெரியாத அந்தப் பெண் பெட்டி எடுத்துப் போயிருப்பாளோ?

ஐயர் ஆசையா கொடுத்தாரு என்பாளோ?

''ஏன் கொடுத்தாருன்றியா... நான் சொல்வேன். விலாவாரியா சொல்வேன். உன்னால் கேட்க முடியாது உனக்கில்லாத சொத்தா... நான் உழைச்சு சம்பாதிச்சு... போ.''

-துரத்தி விடுவாளோ...?

கங்காதரன் எடுக்கவில்லை. அவன் பயம் ஷூட்டிங் பற்றி.

மில்டன் எடுக்கவில்லை. பெட்டியேகூட பார்த்திருக்கமாட்டான்.

வனிதா ஐந்து சதவிகித சான்ஸ் இருக்கறது.

வின்ஸெண்ட் மான்யூவல், பத்து சதவிகித வாய்ப்பு இருக்கிறது.

அந்தப் பெண் எடுக்கவில்லை என்று தெரிந்துவிட்டால் இவர்கள் மீது பார்வை திருப்ப வேண்டும்.

ஆளவந்தாருக்கு ஆர்.வி.எஸ். கம்பெனிக்கு.

ஆளவந்தார். ஆளவந்தார் எடுத்திருக்கலாமா? பெட்டியோட கார் ஏறிட்டாரு என்பது என்ன நிஜம்? இல்லை... கங்காதரன் பெட்டி பார்த்து இருக்கிறான். பெட்டி ஹோட்டல் வந்துவிட்டது.

பின்னால் வந்து வேவு பார்த்துப் பெட்டி எடுத்திருக்கலாம். பெண் மீதோ ஹோட்டல் மீதோ பழி போடலாம். 'அப்பா குடிச்சுட்டு எங்க விட்டாரோ?' என்று கைவிரிக்கலாம், அல்லது பதுக்கி நல்ல பிள்ளை போல 'பெட்டி வூடு வந்திருச்சாம்மா?' என்று...

ஆளவந்தார். செய்வாரா... மூன்று லட்சம் பெரிய காசா? செய்யலாம். யாரும் செய்யலாம்.

என்ன வாய்ப்பு?

ஐந்து சதவிகிதம்.

பெட்டி காணாமல் போயிருக்கும் என்பது போல் அல்லவா தகவல் தந்தார்?

அது வெறும் விசாரணையா... இல்லை, திருட்டு மறைக்க போட்ட வேஷமா? ஆளவந்தார் ஏன் திருடியிருக்கக் கூடாது?

மாட்டினால் தண்டனை என்பது தெரியாதா? எப்படி மாட்ட முடியும்? கறுப்புப் பணம். என்ன கணக்கு? எப்படி ரிப்போர்ட் பண்ண முடியும் என்கிற தைரியத்தில் நடந்திருக்குமா?

ஆளவந்தார், போய்ப் பார்த்தீங்களா என்று போன் பண்ணவில்லையே.

நாம் செய்வோமா?

போன் செய்து விவரம் சொல்வோமா? என் விவரம்?

அப்பா குட்டியுடன் ஹோட்டலில் தங்கின விவரமா ஆர்.வி.எஸ். வரைக்கும் போகும். எல்லா டீலருக்கும் தெரியும்.

கம்பெனி டைரக்டரின் மனைவி சிரிப்பாள். ''என்ன போன்ல கூப்பிட்டு திட்டினான் படவா. அநாதையா செத்தான். அவன் பாவமே அவனை அழிச்சிடுத்து''. சொல்வான். டீலர்கள் சிரிப்பார்கள்.

''அவருக்கு உயிர் மூக்கு வழியா போகலை. வாய் வழியா போகலை. கண் வழியா போகலை. அது போன இடமே வேறு. விதமே வேறு.''

- டீலர்கள் பேசிச் சிரிப்பார்கள்.

ச்சே... டிஸ்கஸ்டிங். அவமானம். மகத்தான அவமானம். இறந்த பிறகும் தொடரும் அவமானம்.

'சங்கர அய்யருன்னு ஒருத்தர் இருந்தாரு. உல்லாசி. நாட்டு ஷோக்காளி. எப்படி செத்தாரு தெரியுமா?'

வேண்டாம். ஆளவந்தாருக்குப் போன் செய்ய வேண்டாம்.

வேறு யார்?

யார்?

அறைக்குள் சுற்றினாள். யோசித்தாள்.

அனிச்சையாய் மேஜை டிராயரை இழுத்தாள். பம்பாய் மற்றும் டெல்லி டூரிஸ்ட் கைடுகள் இருந்தன. புரட்டினாள். கீழே அம்மா, அப்பா போட்டோ, கல்யாண போட்டோ இருந்தது. ஏன் இது இங்கே? தெரியவில்லை.

அடுத்த அறை இழுத்தாள். ஃபைல்கள் ஆர்.வி.எஸ் ஃபைல்கள். வெளியே எடுத்துப் போட்டாள்.

காகித உறை இருந்தது. பிரித்தாள். உயில், உயில் காப்பி, போட்டோ ஸ்டெட் காப்பி.

எது எது எங்க வைக்கறது, ஒரு வரைமுறை இல்லையா? இது ஏன் இங்கே?

கீழ் அறை இழுத்தாள். பேப்பர் கட்டுகள் டூவீலர் பற்றிய கட்டுரைகள் தொகுப்பு. அவர் எழுதிய கட்டுரை இருந்தது. எடுத்து வெளியே வைத்தாள். கறுப்பு பிளாஸ்டிக் ஃபோல்டர் இருந்தது. எடுத்துப் பிரித்தாள்.

கி.பி. இரண்டாயிரத்தில் இந்தியாவில் வாகன வசதி குறிப்புகள், கிறுக்கல் கையெழுத்தில் கட்டுரை குறிப்புகள் இருந்தன. இத்தனை ரகசியமாய் ஏன் வைக்க வேண்டும் இதை.

பீரோ திறந்தாள். புத்தகங்கள் புரட்டினாள். அம்மா அவருக்கு எழுதிய கடிதங்கள். ரப்பர் பேண்ட் போடப்பட்டு கத்தையாய் இருந்தது.

'அன்புள்ளவருக்கு, அநேக கோடி நமஸ்காரம். நான் சவுகர்யமாய் மாயவரம் வந்து சேர்ந்தேன்...' மூடினாள்.

வேண்டாம். இது புருஷன், மனைவி அந்தரங்கங்கள். தாயும், தந்தையுமானபோதிலும் நான் தலையிடக்கூடாத அந்தரங்கம். எனக்கு இது வேண்டாம்.

கீழ் புத்தக இடுக்கில் ஆர்.வி.எஸ். கணக்கு வழக்கு ஃபைல் இருந்தது.

காட்ரெஜ் பீரோ சாவி போட்டுத் திறந்தாள். உடைகள் நாலைந்து... வாட்ச், மோதிரம் இரண்டு மைனர் செயின். லாக்கர் திறந்தாள். பத்து ரூபாய் நோட்டும், லிஃப்கோ ராமாயண பாராயண புத்தகமும்... ஏன் இது இங்கே?

புத்தகத்தின் உள்ளே அம்மாவின் பெயர் எழுதியிருந்தது. இது அம்மாவின் ஞாபகமா? அவள் சொத்தா. அதுதான் இத்தனை பத்திரமா?

எல்லா துணிக்கும் அடியில் அம்மாவின் பட்டுப் பு—வை ஜாக்கெட். முன் ஊக்கு சாடிஸ். இது பிரியமா? ஞாபகார்த்தமா? கவனமா.

பீரோ சாத்தினாள்.

வேறு என்ன இருக்கும். அறையில் உள்ள படுக்கையைப் புரட்டினாள். பிளாஸ்டிக் கவர் இருந்தது. ஸ்டாப்லர் பின் போட்டிருந்தது. படபடவென்று பிரித்தாள்.

தாலிக்கொடி, ஆறு சவரன் தாலிக்கொடி, குண்டு, குழல், சூரிய சந்திரப்பிரபை, நாலு பவழங்கள் மாட்டிய தாலிக்கொடி.

இது அம்மாவுடையது.

இது ஏன் இங்கே? ரகசியமா... காவலா... காதல் மேலீட்டா

என்ன செய்திருக்கிறார் அப்பா, இடம் மாற்றி இடம் மாற்றி...

படுக்கையில் யாரும் தாலிக்கொடி வைப்பார்களா.

இல்லை. இது திட்டமிட்ட ஏற்பாடு. அப்பாவுக்குக் கை மறதி இல்லை. கவனப் பிசகு இல்லை. எது எங்கே வைக்கிறோம் என்று அப்பாவுக்குத் தெரியும்.

அப்பா தன் சவுகர்யத்துக்கு அதது அங்கங்கே வைத்திருக்கிறார். அது கூர்மையான புத்தி. தெளிவான மெமரி பவர். என்ன எங்கே எதற்கு என்று தெரியும். மறந்து வைக்கிற ஆள் இல்லை அவர். ஒளித்து வைக்கிற ஆள்.

சட்டென்று வேறு ஒருவர் கைக்குக் கிடைக்காமல் தனக்கு மட்டும் தெரிந்த இடத்தில் பீரோவில் கல்யாணப் பத்திரிகை. கட்டில் படுக்கையில் தாலிக்கொடி.

அப்போ அந்த மூன்று லட்சம்?

எங்கே ஒளித்து வைத்திருக்கிறார்?

தான் மட்டும் நினைவில் வைத்துக் கொண்டு மற்றவர்க்கு சந்தேகம் வராத இடத்தில் ஒளித்து வைத்திருக்கிறார். எங்கே?

'கார். அப்பாவுடைய கார்.'

மைதிலி வெளியே ஓடினாள்.

அப்பா காரில் உட்கார்ந்து துழாவினாள். முன்பக்க ஸீட்டில் உட்கார்ந்து இழுப்பறையைத் திறந்து பார்த்தாள். டி.வி. லைசென்ஸ், ஆர்சிபுக், டைரி, சண்முககவசம் கையடக்கப் புத்தகம்.

ஸீட்டுக்கடியில் துழாவினாள். சின்ன பிளாஸ்டிக் பெட்டி தட்டுப்பட்டது. எடுத்துப் பிரித்தாள். மாத்திரைகள், ஆஸ்துமா மாத்திரைகள். ஐஸாப்டின் மாத்திரை பாட்டில் ஐஸாப்டின் இருதயநோயாளிகள் சாப்பிடுவது. அப்பாவுக்கு இருதய நோயா? முன்னமே தெரியுமா? ஏன் சொல்ல வில்லை?

பின் ஸீட்டில் வாரப் பத்திரிகை ஒன்று. அவர் செத்துப் போன நாளின் ஹிண்டு. ஸ்டியரிங் தலைக்கு மேல் ஒரு ரெக்ஸின் பை கூரையில் பைத்திருந்தது. உள்ளே துழாவினாள்.

போட்டோ. அம்மா, அப்பா, அண்ணா, அக்கா இவர் மடியில் வைத்துக்கொண்ட குடும்பப் போட்டோ. தனியே இவள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ. எம்.பி.ஏ. சேரும்போது எடுத்த போட்டோ.

சட்டென்று கண்ணில் ஜலம் கட்டியது.

''உனக்குப் பிடிக்குமா? அப்பா, என்னைப் பிடிக்குமா? உனக்குக் குடும்பம் பிடிக்குமா? வீடு ஆசை உள்ள மனிதன்தானா நீ?''

போட்டோக்கள், மாத்திரை டப்பா எடுத்துக் கொண்டு கீழிறங்கினாள். தன்னறையில் போய் பத்திரப்படுத்தினாள்.

போன்மணி அடித்தது. போய் எடுத்து... வேண்டாம். போன் அடிக்கட்டும். மன்னி வெளியே வந்து எடுக்கிறாளா பார்ப்போம். போய் கதவு தட்டுவதை விட அவளை இப்படி வரவழைப்பது நல்லது.

தன் அறைக்கதவு ஒருக்களித்து ஹால் நோக்கிப் பார்த்து காத்திருந்தாள்.

மன்னி அறைக்கதவு திறப்பது கேட்டது. ''மைதிலி'' -மன்னி கதவு திறந்தபடி குரல் கொடுக்கிறாள். ''என்னபோன் இப்ப? தூங்கற நேரத்துல.'' அலுப்புடன் ஹாலுக்கு வருவது தெரிந்தது.

''ஹலோ... யெஸ்?'' தோளிடுக்கில் போன் வைத்துக் கொண்டு இரண்டு கைகளால் ரவிக்கை ஹுக் போட்டுக் கொள்கிறாள். பாடிஸ் காணோம். அகல முதுகு? கோதுமை நிற முதுகு? ட்யூப் ட்யூபாய் சதை மடிப்புகள் கொண்ட இடுப்பு. இடுப்புக்குக்கீழே இறங்கிய புடைவை. மெல்லிய ஸிந்தெடிக் புடைவை நின்றால்கூடு குலுங்கும் பிருஷ்டம். சதைக்கோளம். சொகுசான சதைக்கோளம்.

''மைதிலி...'' அறை நோக்கிக் கூவினாள்.

''உனக்கு போன்.''

கதவு திறந்து மைதிலி வர சிரித்தாள். ''எங்க போயிட்ட காலங்கார்த்தால? உன்கூட நிறைய பேசணும். மைதிலி இது உனக்கு போன்? யாரோ பாண்டியனாம்.''

''ஹலோ மைதிலி ஹியர்.''

''சுந்தரம் இங்க வந்திருக்காரு மேடம். ரிசப்ஷன்ல உட்கார வச்சிருக்கேன். நான் இன்னும் பேசலை. வரீங்களா... இல்லை...''

''வரேன். டென் மினிட்ஸ்ல வரேன்.''

''யாருடி?''

''ஹோட்டல்ல மேனேஜர் ரூம் வாடகை கேட்கிறார்.''

''உன் கூட பேசணுமே?''

''வந்துடறேன் மன்னி.''

'நாளைக்கு பே பண்ணலாமே... இப்பவே ஓடணுமா? பத்தாம் நாள் காரியம் பத்திப் பேசணுமே?''

''பேசலாம். போய்ட்டு வந்துடறேன்.''

''ஏதாவது ப்ராப்ளமா?''

''இல்லை. இத்தனை நாள் பே பண்ணலை. கேட்கறாங்க. எதுக்கு அசிங்கமா?''

''எல்லாப் பொறுப்பும் என் தலைல விழுந்துட்டுது. ப்ளீஸ்! என்னோட கோவாபரேட் பண்ணு மைதிலி.''

தேவைதானா தனக்கு...

''வரேன் நிச்சயம் வரேன்.'' - மைதிலி அறையைப் பூட்டிவிட்டு பர்ஸ் எடுத்து காருக்கு ஓடினாள். வண்டி கிளம்பி வேகமாய் ஹோட்டல் நோக்கிப் போனாள்.

நடு வீட்டில், நாலு பேர் இருக்கிற வீட்டில், தோட்டக்காரன், வேலைக்காரன், ராமு மாமா, சமையல் மாமி இருக்கிற வீட்டில் எப்படி பாடீஸ் இல்லாது மெல்லிய ரவிக்கை போட்டு வளைய வர முடிகிறது? இவள் குடித்தனக்காரியா? விபசாரியா? யார் விபசாரி? எல்லாக் குடித்தனக்காரிகளுமா? புருஷனை மயக்குகிற எல்லா பெண்டாடிகளுமா?

அப்பாவுக்கு இப்படி ஒரு மனைவி இல்லாத நிலை தான் ஹோட்டலுக்கு போக வைத்ததோ?

என்ன உலகம் இது?

பெண் என்னும் மாயப்பிசாசு என்பது இதுதானா?

அம்மா பிசாசா? பட்டுப் புடைவையை அடுக்காய் பட்டை பட்டையாய்ப் போர்த்தி உடம்பு செழிப்பு பூராவும் மறைத்தவளும் பிசாசா... சில பேர் பிசாசு... சில பேர் பத்தினியா?

ஹோட்டலுக்கு சீறலுடன் கார் திரும்பி பார்க் செய்தாள். பூட்டிவிட்டு கைப்பையுடன் இறங்கினாள். ரிசப்ஷன் சுற்றிப் பார்த்தாள்.

ஸ்விமிங்பூல் பார்த்தபடி ஓர் ஆள் தனியே உட்கார்ந்திருந்தான். அரைக் கைச் சட்டை, வேஷ்டி, எண்ணெய் மினுக்குத் தலை. நாற்பது வயது ஆள். பருமனாய் கை கட்டி உட்கார்ந்திருந்தான்.

''பாண்டியன் அறை எது?''

''ஃபர்ஸ்ட் ஃப்ளோர். லாஸ்ட் ரூம்.''

பாண்டியன் வழியில் எதிர்கொண்டார். மடக்கி பால்கனிக்குக் கூட்டிப் போனார். அங்கிருந்து ரிசப்ஷன் ஹால் தெரிந்தது.

''அது சுந்தரம், போய்ப் பேசலாம். உங்கள் அறைக்கு வரவழைத்தால் நல்லது இல்லையா?''

''சரி...''

பெல்காப்டனை நோக்கி சைகை செய்தார். அறைக்கு போய் காத்திருந்தார்கள்.

''வணக்கம் சார்!''

''வாங்க. உட்காருங்க. உங்க பேர் சுந்தரமா''

''ஆமாங்க...''

''நான் ஹோட்டல் செக்யூரிடி ஆபீஸர். பழைய போலீஸ்காரன். மதுரை சூப்பிரண்டா இருந்தேன். ஓர் ஆள் பத்தி விசாரிக்கணும்.''

''சொல்லுங்க ஐயா.''

''சங்கரன்னு ஒரு பெரியவர்... நம்ம ஹோட்டல்ல நாலுநாள் முன்ன தங்கியிருந்தார்...''

''சொல்லுங்க.''

''அவருக்கு நீங்க ஆள் புடிச்சுக் கொடுத்தது கேள்விப்பட்டேன்.''

சுந்தரம் முகம் மாறினான். பயந்தான்.

''நத்திங் டு வொர்ரி. அவரு செத்துட்டாரு தெரியுமா?''

''கேள்விப்பட்டேன். பேப்பர்ல படிச்சேன்.''

''ஹார்ட் அட்டாக்னு முடிவாயிடுச்சு. இருந்தாலும் கடைசியா என்ன சொன்னார். என்ன பேசினாருன்னு தெரிஞ்சுக்க ஆசை, அதான் ஆள் யாருன்னு சொன்னா?''

''ஞாபகம் இல்லீங்களே.''

''சுந்தரம்...''

''நம்மகிட்ட நிறையபேர் வேலை செய்யறாங்க. பல பேரு பல இடத்துக்கு அனுப்பறேன். சட்டுன்னு சொல்ல முடியலை.''

''நிதானமா யோசிச்சு சொல்லுங்க. காபியா?''

''வேணாங்க.''

''ரூம் சர்வீஸ், மூன்று காபி ப்ளீஸ்.''

''எதுனா தவறாயிடுச்சுங்களா?''

''ஏன் கேட்கறீங்க அப்படி?''

''கூப்புட்டுக் கேட்கறீங்க. வீடு வரைக்கும் வந்து விசாரிக்கறீங்களேன்னு கேட்கறேன்.''

''ஒரு தவறும் ஆகலை. இவங்க அவரு மக. கடைசியா அவரு என்ன பேசியிருப்பார்னு தெரிஞ்சுக்க ஆசைப்படறாங்க.''

''என்கிட்ட பேசினாருங்க.''

''எப்போ?''

''போன்ல சாயந்தரம் அஞ்சரை மணிக்கு.''

''என்ன சொன்னாரு?''

''சுந்தரம் ஆள் இட்டா ஹோட்டலுக்கு, ரூம் நம்பர் நானூத்திப் பத்து, சட்டுன்னு வான்னாரு. உடனே கூட்டிட்டுப் போனேன்.''

''ரூம் நம்பர் ஞாபகம் இருக்கு, ஆள் பேர் ஞாபகம் இல்லையா?''

''இருக்குங்க''

''சொல்லு....''

''தவறு வராதுங்களே?''

''சத்தியமா ஒரு தவறும் வராது. நீ தவறு ஏதும் பண்ணலையே?''

''பண்ணிட்டேன் சார்.''

''என்னது?''

''ஆயிரம் ரூபா கொடுத்தாரு.''

''ம்ம்...''

''இட்டாந்த ஆளுக்கு அறநூறு, எனக்கு நூறுன்னு பேச்சு. பாக்கி அவருக்குக் கொடுக்கணும். குடுக்கலை. வந்து பார்த்தேன், செத்துட்டாருன்னாங்க. நானே வச்சுக்கிட்டேன்.''

''பரவாயில்லை வச்சுக்கங்க.''

''உசிரோட இருந்தா கூப்பிட்டு கொடுத்திருப்பல்ல.''

''நிச்சயமா சார். அவரு ரொம்ப நாள் பழக்கம். துட்டு கேட்டா டக்குன்னு குடுப்பாரு. எடுத்தா அசிங்கமா திட்டுவாரு.''

''ம்ம்.. ஆளு யாரு?''

''உன்னிசா பேகம் சார்.''

''முஸ்லிம் பெண்ணா?''

''அது தெரியலை. முஸ்லிம் எடுத்து வளர்த்தாருன்னு சொல்லும். அதுங்க ஓர் இடத்துக்கு இடம் மாறும். ஒரு சமயம் சின்ன லட்சுமின்னும், ஒரு சமயம் மங்களம்னும் ஒரு சமயம் மனோன்மணின்னும் சொல்லும். எங்க பக்கம் அது பேரு உன்னிசா.''

''பார்க்கணுமே?''

''எதுக்கு சார்?''

''என்ன பேசினாருன்னு கேட்கணும்.''

''புடிக்கிறது கஷ்டம் சார். அப்ப வீட்டு வாசல்ல தாயபாஸ் ஆடிகினு இருந்தது. ஏய் கிளம்புன்னதும் கூட வந்துடுச்சு. இப்ப எங்க இருக்கோ...?''

''அவசியம் பார்க்கணுமே.''

''தவறு வராதே சார்?''

''வராது.''

''இட்டாரவா?''

''இடம் எங்கே சொல்லு?''

''நூறடி ரோட்ல ராயப்ப மேஸ்திரி தெரு, ஏழாம் நம்பர் வீடு, கடைசி போர்ஷன்.''

''பார்க்கறதுக்கு எப்படி இருப்பா?''

''நிதானமா இருக்கும்.''

''நிதானமான்னா?''

''சுமார் உயரம், ரொம்ப குண்டு இல்லை... ரொம்ப ஒல்லி இல்லை, உதட்டு மேல இடப்பக்கம் மச்சம் இருக்கும், கைல கறுப்புவளையல் நிறைய போட்டிட்டிருக்கும்.''

''சாப்ட்டீங்களா?''

''காலைல சோறு சாப்டேங்க.''

''நம்மஹோட்டல்சிக்கன்ரோஸ்ட்சாப்பிட்டிருக்கீங்களா?''

''இல்ல சார்.''

''செம டேஸ்ட்'' - காலிங் பெல் அழுத்தினார். வின்சென்ட் உள்ளே நுழைந்தான்.

'வின்சென்ட். அவர் பேர் சுந்தரம். என் கெஸ்ட். எனக்கு ஹெல்ப் பண்றார் ஒரு மேட்டர்ல. இவருக்கு நம்ம ஹோட்டல் சிக்கன் ரோஸ்ட், ஃப்ரைட் ரைஸ் சாப்பிட கொடுக்கணும். நேர கிச்சனுக்குக் கூட்டிட்டுப் போங்க. அங்க டேபிள் போட்டு சாப்பிட வைங்க. வேற ஏதாவது ஸ்பெஷல் இருந்தாலும் குடுங்க. செண்ட் த பில் டு மீ. அவர் கூடவே இருந்து கவனிங்க. போய் சாப்பிட்டு வாங்க பிரதர்.''

''ஒண்ணும் தவறு வராதுங்களே?''

''வரவே வராது. பயப்படாம போங்க.''

வின்சென்ட் அவரோடு வெளியே போனான். அரை நிமிடம் கழித்து உள்ளே நுழைந்தான்.

''இரண்டு மணி நேரம் உன்னோடு இருக்க வை. ஓட முயன்றால் பயமுறுத்து. பிடித்து வை. அமைதியாய் இருந்தால் வேண்டுமென்பது சாப்பிடக் கொடு.''

அவர்கள் கீழே இறங்க....

மைதிலியும் பாண்டியனும் வெளியே விரைந்தார்கள் காரில் ஏறினார்கள். கார் வடபழனி, நூறடி ரோடு நோக்கிப் பறந்தது.

''மிஸ் மைதிலி, ஒரு வேளை அந்தப் பெண் கிடைத்தால் நீங்கள் விசாரிப்பது நல்லது.''

''ஏன்?''

''என்னைப் போலீஸ் என்று பார்ப்பவர்கள் பிறகு பேசமாட்டார்கள்?''

''புரிகிறது.''

''உங்களுக்குப் பேசமுடியுமா? அந்த மாதிரி ஆட்களுடன்?'''

''முடியும்.''

''அவர்கள் பாஷையில் அவர்களைப் போல...''

''ஏன்?''

''சிநேகமாக வேண்டுமல்லவா. அம்மாதிரிப் பெண்கள் வெளியாட்களுடன், அந்நியர்களுடன் பேசமாட்டார்கள். சட்டென்று பழக மாட்டார்கள்...''

''புரிகிறது.''

''அதனால்...?''

''நானும் அந்தக் கும்பல் பெண்போல பழக வேண்டும்.''

''சிரமம்தான்.''

''சிரமமில்லை. என்னால் முடியும்.''

''உங்களைப் பார்க்கிற தொலைவில் நானிருப்பேன். பயப்பட வேண்டாம்.''

மைதிலி பதில் பேசாது வண்டி ஓட்டினாள். நூறடி ரோடில் வண்டி நிறுத்தினாள். இறங்கி ராயப்ப மேஸ்திரி தெரு தேடினார்கள். இரண்டு குறுக்கு சந்து கடந்து குட்டையோரம் நடந்து கண்டுபிடித்தார்கள்.

வரிசையாய் ஒட்டு வீடுகள். ஏழாம் நம்பர் வீட்டு வாசல். தாயபாஸ் கட்டம் கட்டி நடந்துகொண்டிருந்தது. பாண்டியன் கடந்து போய் நின்றார்.

மைதிலி வாசலில் தயங்கினாள்.

''உன்னிசா இருக்கா?''

''நீ யாரு?''

''மும்தாஜ். அது உறவு.''

''ஏய் உன்னிசா இருக்காடி?''

''இல்லை. போயிருச்சு.''

''எங்க?''

''தெரியலை.'' - உள்ளிருந்து குரல் வந்தது.

''துட்டு கடன் கேட்டுது. எடுத்தாந்தேன். இல்லியா?''

''என்கிட்ட கூட கேட்டுது. இரு வரேன். எங்க போயிருக்கு தெரியலையே?'' எழுந்து உள்ளே போனாள்.

''யாரு இட்டுக்கினு போனாங்க?''

''பாபு.''

''எங்கிக்கு...?''

''திருவான்மியூர் தாண்டி கடற்கரை ஹோட்டல் போனாப்பல.''

''இல்லியாமே. என்கிட்ட குடுத்துட்டுப் போ.''

''வேணாம். ராத்திரி வரட்டா?''

''ராத்திரியா... அது நாளைக்கு காலைலதான் வரும். அப்ப வா. உம் பேர் என்னா?''

''மும்தாஜ், பெரிய பாய் மகள்னு சொல்லு.''

''சரி, காய் நவுத்தடி. தாயம் போட்டியா. இல்லேன்னா நில்லு!'' ஆட்டத்தில் அமிழ்ந்தாள்.

திருவான்மியூர் தாண்டி கடற்கரை ஹோட்டல் பல ஹோட்டல்கள் இருக்கின்றன. எந்த ஹோட்டல்? எப்படிக் கண்டுபிடிப்பது?

பாண்டியன் முன்னே நடந்து வண்டியருகே நின்றார்.

''பாபுவைப் பிடிச்சர்லாம் வாங்க.''

''இருப்பானா?''

''எங்க போயிருக்கான்னு புடிச்சுரலாம் வாங்க.''

மறுபடி வடபழனி லாட்ஜ் அருகே வண்டி நின்றது.

''பாபு இருக்காரா?''

''இல்லை. நீங்க யாரு?''

''ஆள் வேணும்.''

''காலை வந்து கேட்டுங்க. இதே வண்டில...'' டக்கென்று மடக்கப்பட்டார். வெகு கூர்மையான ஆட்கள்.

''இப்பதான் வேலூர்லேர்ந்து நேர வரேன். பாபு இல்லியா?''

''மீனவர் ஹோட்டலுக்குப் போயிருக்காரு. வேற புரோக்கர் அனுப்பவா?''

''வேண்டாம். பாபு வந்தா ரைஸ் மில் கணேசன்னு சொல்லுங்க. வந்துருவாரு.''

''எந்த ஹோட்டல்ல இருப்பீங்க?''

''அவருக்குத் தெரியும். மறக்காத சொல்லுங்க.'' வண்டி நகர்ந்தது.

''மீனவர் ஹோட்டல் போங்க மைதிலி! நாப்பது கிலோ மீட்டர் இங்கிருந்து. நான் வண்டி ஓட்டவா...''

''ப்ளீஸ்... பாண்டியன் நானே கேட்கணும்னு நினைச்சேன்.''

இறங்கி இடம் மாறினார்கள்.

ஃபியட் கார் சீராய் கடற்கரைச் சாலையில் தெற்கு நோக்கிப் போயிற்று. முட்டுக்காடு பாலம் கடக்க, இருள் சூழ்ந்தது. மஞ்சள் ஹெட்லைட் போட்டு முழு வேகத்தில் காரை விட்டினார்.

மண் பாதையில் திருப்பி பனைமரங்களூடே போய் மீனவர் ஹோட்டல். சென்னையிலுள்ள பெரிய ஹோட்டலின் கடற்கரைச் சிறகு.

காரை மரத்து இருளில் நிறுத்தினார்.

உள்ளே போனார். ரிசப்ஷனில் தன் சார்ட் காண்பித்தார். கை குலுக்கினார். ஒரு விசாரணைக்கு வந்திருப்பது தெரிவித்தார். ஹோட்டல் செக்யூரிட்டி ஆள் வந்து சல்யூட் செய்தான்.

''வடபழனி பாபு வந்திருக்கானா?''

''யெஸ் சார்.''

''எங்கே?''

''கடற்கரை விளம்பு குடிலின் வாசலில் நிற்கிறான்.''

''கூட ஆள் உண்டா?''

''உண்டு. இப்போதுதான் உள்ளே போயிற்று.''

''குடிலுக்குள் யார்?''

''பெரிய இடம். பிஸினஸ் மாக்னெட்.''

''எனக்கு அந்தப் பெண் பார்த்துப் பேச வேண்டும். பாபுவை அப்புறப்படுத்து. ஹோட்டலுக்கு வெளியே போகச் சொல்.''

பத்து நிமிடத்தில் வாசலில் கூச்சல் கேட்டது.

''ஏன் போணம்? எங்க ஆள் உள்ள இருக்கு. ஏன் போணம்.?''

''போ வெளியே.'' அதட்டினார்கள்.

அவன் முணுமுணுத்தபடி ஹோட்டல் காம்பவுண்டோடு வெளியே போனான். மரத்து நிழலில் தலையில் துண்டு போட்டு உட்கார்ந்து கொண்டான். பீடி பற்ற வைத்தான்.

பாண்டியனும் மைதிலியும் செக்யூரிட்டி ஆள் காட்ட, குடில் நோக்கிப் போனார்கள்.

''உள்ளே போக வேண்டாம் சார். பார்ட்டி பெரிய ஆள்?''

''போக மாட்டேன். பயப்படாதே.''

- தொலைவாய் குடில் வாசல் நோக்கிக் காத்திருந்தார்கள். உள்ளே விளக்கு எரிந்தது. பேச்சு சப்தம் கேட்டது. பேரர் ஒருவன் பெரிய தட்டுகளுடன் உள்ளே போனான். திரும்பி வந்தான்.

பாண்டியன் அவனைக் கூப்பிட்டார்.

''என்ன நிலைமை உள்ளே?''

''கஸ்டமர் உள்ளே முழு பூஸில் இருக்கார். சாப்பிட முடியாது. தூங்கி விடலாம்.''

''குட், தாங்க்யூ!''

- காத்திருந்தார்கள்.

உள்ளே விளக்குகள் அணைந்தன.

காத்திருந்தார்கள்.

முக்கால் நிலவு மேகத்தில் எழுந்தது. சுடர்கள் மின்னின. கடற்காற்று குளிராகியது. மைதிலி தலையைச் சுற்றி தலைப்பைப் போட்டுக் கொண்டாள்.

''வேண்டாம் மேடம். அப்படிப் போடாதீங்க.''

''ஏன்?''

''இங்கு வரும் பெண்கள் அப்படித்தான் வருவார்கள். போட வேண்டாம்.''

மைதிலி தலையிலிருந்து தலைப்பை எடுத்தாள். கறுப்
இருட்டில் வெள்ளை நுரை சிரித்துக் கொண்டிருந்த
தரைமீது விழுந்து புரண்டது. சின்ன சிணுங்கலோடு நழுவிய
காத்திருந்தார்கள்.

கதவு திறக்கும் சப்தம் கேட்டது. ஒருக்களித்து மெல்
திறக்கப்பட்டது. யாரோ அங்கிருந்து பார்க்கிறார்கள்
பாண்டியன் மர நிழலுக்கு ஒதுங்கினார். கூர்ந்து பார்த்தார்.

கதவு விரியத் திறந்து அவள் வெளியே வந்தாள்
மூடினாள். மெல்ல பால்கனி மாதிரி போடப்பட்
மரத்தளத்தில் நடந்து கீழிறங்கினாள். சோம்பல் முறித்தாள்
வானம் பார்த்தாள். முப்பது வயதிருக்கும்.

உடம்பில் திமிர் தெரிந்தது. நடையில் உல்லாச
இருந்தது. தளுக்கு இருந்தது,

பேரர் நடந்து அவளருகே போனான்.

''என்ன வேணும்?''

''ஆரஞ்சு ஜூஸ் இருக்கா?'' கட்டை குரல் கேட்டது.

''ஒரு கிளாசா, ரெண்டு கிளாசா?''

''ஒண்ணு கொடு.''

திரும்பினான்.

அவள் மெல்ல சீட்டியடித்துப் பாடினாள்.

பாண்டியன் மைதிலியை 'போ' என்று சைகை செய்தார்
''தலைல போர்த்திங்கங்க.''

''எதுக்கு?''

''அப்பத்தான் அவங்க ஆளுன்னு தெரியும்.''

மைதிலி போர்த்திக் கொண்டாள். உலாவி வருவது
போல் மெல்ல நடந்தாள். அவள் அருகே போனாள், நடை
சப்தம் கேட்டு அவள் திடுக்கிட, புன்னகை செய்தாள்.

''ரொம்பக் குளிருதுல்ல...?''

''ஆம்...''

''குளிரு ஜாஸ்தி இன்னிக்கு.''

''ஆமா.''

''சாப்பிட்டாச்சா?''

''ம்ம்... நீங்க யாரு?''

''இங்க வந்தேன். தூங்கிட்டாங்க. எனக்குத் தூக்கம் வரலை. அதான் வந்தேன்.''

அவள் உற்றுப் பார்த்தாள்.

''நீ யாருன்னு தெரியலையே?''

''உன்னைத் தெரியும். சுந்தரம் இட்டாந்தாரே- போன வாரம் பார்த்தேன்...''

''எந்த சுந்தரம்.''

''வடபழனி சுந்தரம்.''

''ஆமா நீ யாரு?''

''மாம்பலம்.'

''இட்டாந்தாங்களா?

''ஆமா.''

''யாரு?''

''நடராஜன்.''

''யாரு நடராஜன். தெரியலை''

''எங்க எல்லாருக்குமே மாம்பலம் பக்கம்.''

''எங்க பார்த்தா என்னை?''

''ராயப்பேட்டையாண்ட பெரிய ஹோட்டலு... அங்க வந்தியே.. சுந்தரத்தோட நாலாம் மாடிக்குப் போனியே.''

''ஆமா. நீ எங்க இருந்த?''

''அதே மாடிலதான். உன் பின்னால வந்தேன். பார்க்கலை.''

''உன் பார்ட்டி தூங்கிடுச்சா.''

''தூங்கிடுச்சு.''

''என்ன குடுத்தான்.''

''காலைலதான் பேசணும்.''

''இவனும் அப்படித்தான். பர்ஸ் எடுத்து ஒளிச் வச்சுட்டான்.''

''எங்க?''

''எங்கன்னு தேடறது?''

''ஃபுல்லா ஏறிப்போச்சு. எத்தினி பேசின?''

''நான் பேசலை. நடராஜன்.''

''அதுல நடராஜன் எத்தினி தருவான்?''

''ஐந்நூறு...''

''ஆங்... யார்கிட்ட கதை வுடற?''

''இல்லன்னா போடான்னுருவேன்.''

''பார்ட்டி தருமா?''

''தரும்.''

''மெட்ராஸ் ஹோட்டல் பேஜாரு. இங்க அப்படி இல்லை. வாரா வாரம் வருவியா?''

''வருவேன். ஆமா, அந்த ஹோட்டல்ல ஓர் ஆள் செத்துப் பூட்சாமே... மறுநா ஒரே கலாட்டா...''

''வெளியே சொல்லாத.''

''ஏன்?''

''என் ரூம் ஆளுதான் அது. கிழடு.''

- மைதிலிக்குப் பாய்ந்து அவளை உலுக்க ஆசை வந்தது அடக்கிக் கொண்டாள்.

''ஏன்.. என்ன ஆச்சு?''

''தெரியலை. மருந்து சாப்டுது.''

''என்ன மருந்து?''

''அதுதான் சீமைச் சரக்கு.''

''ம்ம்...''

''இட்லி துன்னுது.''

''ம்ம...''

''நிம்மதியா கொஞ்சம் தூங்கறேன். அப்புறம் எழுப்புன்னுச்சு.''

''அப்புறம்?''

''சரின்னு ஆரஞ்சு ஜூஸ் கேட்டு குடிச்சேன். உட்கார்ந்து டி.வி. பார்த்தேன். நல்லாத் தூங்கிடுச்சு. என்னடா இது பேஜாருன்னு பத்தரை மணிக்கு உலுக்கினேன். எழுந்திருக்கவேயில்லை.''

''ஐயோ.''

''நெஞ்சுல கை வச்சுப் பார்த்தேன். சில்லுன்னு இருந்துச்சு. கையைத் தூக்கினா பொத்துன்னு வுழுந்துருச்சு.''

''ஐயோ, அப்புறம்.''

''எனக்கு ஒண்ணும் புரியலை போ. வெடவெடன்னு ஆயிடுச்சு. அரை அவர் உட்கார்ந்து அதையே பார்த்துக்கினு இருந்தேன்.''

மைதிலி கண்களில் ஜலம் கட்டியது. அடக்க சிரமப்பட வேண்டி இருந்தது.

''கதவு திறந்தேன். வராண்டால யாரும் இல்லை. உள்ளே போய் நின்றேன். கால் தொட்டுக் கும்புட்டேன். சரசரன்னு படியில இறங்கி வாசலுக்கு வந்தேன். எங்க போறேன்னான் கூர்க்கா.''

''என்ன சொன்னே?''

''பார்ட்டி வேண்டாம்னுருச்சுன்னு கிளம்பி ஆட்டோ புடிச்சி வீட்டுக்கு வந்துட்டேன். அப்புறம் சுந்தரம் கேட்டா 'என்னாடி'ன்னு. விஷயம் சொன்னேன். ராத்திரி பூரா தூக்கம் இல்லை. என்னமோ பேயடிச்ச மாதிரி ஆயிடுச்சு'' - கன்னத்தில் கை வைத்துக் கொண்டாள். பிறகு தொடர்ந்தாள்.

''காலைல தலைக்குத் தண்ணி கொட்டறப்ப ஒரே அழுகையாயிடுச்சு. எனக்கு யாரு என்னா ஏன் ஒண்ணும் புரியலை. போலீஸ் கேஸாயிடப் போவுதேன்னு பயம் ஒரு பக்கம். பட்டுன்னு கண்ணெதிர்ல ஓர் ஆள் செத்துப் போன பயம்... ஒண்ணும் புரியலை போ.''

''குடி என்ன? குட்டி என்ன? ஆட்டம் என்ன... எல்லாருக்கும் இதான்னு கடைசில எழுதியிருக்கு. துட்டு இருக்கறவனும் சாவறான். இல்லாதவனும் சாவறான். என்னா சொல்ற நீ?''

''சுந்தரம் மறுநா சொல்லிச்சு. மாரடைப்பாம். போலீஸ் வராதுன்னுச்சு. நிம்மதி. மாட்டியிருந்தா என் கதி என்ன கதி சொல்லு.''

''கஷ்டம்தான்.''

''உன் காலாண்ட ஓர் ஆள் அப்படிச் செத்துப்போனா எப்படி இருக்கும்? ஓரடி தொலைவுகூட இல்லை கட்டில்ல... இப்படி படுத்துருக்கு. எப்ப உசிரு போச்சுன்னே தெரியலை.''

''கடைசியா என்ன சொன்னாரு?''

''நிம்மதியா கொஞ்சம் தூங்கறேன். அப்புறம் எழுப்புன்னாரு.''

''வேற ஒண்ணும் சொல்லலியா?''

''இல்லை.''

''அவரோட பொட்டி படுக்கை?''

''எதுவுமில்லை, ஒரு ஃபைலு இருந்தது. டேபிள்ல விஸ்கி பாட்டில், ரவா இட்லி... முக்கா பாட்டில் விஸ்கி தான் இருந்தது. அப்படியே வுட்டுட்டு வந்துட்டேன். அவர் சொல்லாத நான் சாப்புட்டது ஆரஞ்சு ஜூஸ்தான்.''

''பொட்டி இல்லாமலா ஹோட்டல் ரூம் வருவாங்க.''

''அது லோக்கல் ஆளு. வெளியூர் இல்லை.''

''பொட்டி எதுவும் இல்லையா?''

''ஏன் கேட்கற?''

''தெரியணும்.''

''தெரியணுமா?''

''அவரு பொட்டி வச்சிருந்தாரு, அது காணம்?''

''யாரு?''

''கிழடு.''

''நீ யாருன்றேன்?''

''நான் அவர் மக.''

''இட்டாந்த ஆளுன்னு சொன்னே.''

''சும்மா சொன்னேன்.''

வேகமாய் குடிலுக்கு உள்ளே நுழையமுற்பட்டவளை மைதிலி தடுத்தாள். பாண்டியன் இருந்த இடம் விட்டு வெளியே வந்தார்.

''யார் அது?''

''செக்யூரிட்டி ஆபீஸர்.''

''ஐயோ! எனக்கு ஒண்ணும் தெரியாது.''

''பயப்படாதே.''

''ஐயோ. நான் ஒரு தவறும் செய்யலை.''

''ஹோட்டலுக்கு உடனே கூப்பிட்டு சொல்லியிருக்கக் கூடாது? பொழைச்சிருப்பாரே.''

''உசிரு போயிடிச்சிய்யா. கை தொங்கி நரு
நின்னுபோச்சுங்க.''

''நெஜமா?''

''சத்தியமா... நெஞ்சுல கை வச்சு பார்த்தேங்க
டப்புடுப்பு சத்தம் ஒண்ணும் வரலை.''

''பொட்டி எதுவும் பார்க்கலையா?''

''ஒரு பொட்டியும் பார்க்கலய்யா. வுட்டாப்போறும்னு
வந்துட்டேன்.''

''நிஜமா?''

''சத்தியமா. சந்தனக்குடம் அமீர்பாய் தர்கா சத்தியமா
நான் ஏதும் பார்க்கலை. ஏதும் எடுக்கலை.''

''மிஸ் மைதிலி.''

''யெஸ்.''

''ஷிஈஸ் ஹானஸ்ட் இன் ஹெர் ஸ்டேட்மெண்ட்.''

''யெஸ்.''

''என்ன செய்யலாம்?''

''போகலாம்.'' - திரும்பினார்கள்.

''அம்மா அம்மா... மகராசி என்னை இழுத்து
வுட்றாதம்மா. நான் நாறப் பொழப்பு பொழைக்கறவ தாயே...
அதையும் கெடுத்துறாதம்மா.''

மைதிலி பர்ஸ் திறந்தாள். ஆறு நூறு ரூபாய் நோட்டுகள்
எடுத்தாள். அவளிடம் நீட்டினாள்.

''வேணாம்மா.''

''அன்னிக்கு நீ காசு வாங்கலை இல்லையா?''

''இல்லீங்க.''

''வச்சுக்க.''

''வேணாம்.''

''வச்சுக்க?''

''நான் உபயோகப்படலையே.''

''பட்டிருக்கே. நிச்சயம் பட்டிருக்கே. அவரை நிம்மதியா தூங்கவிட்டிருக்கே உன்னிஸா.'' - மைதிலி முகம் பொத்திக் குலுங்கிக் குலுங்கி அழுதாள். ''சின்ன தொந்தரவு கூட பண்ணாம இருந்திருக்க. அமைதியா அவரைச் சாகவிட்டிருக்கே...''

அந்தப் பெண் உன்னிசாவும் அழுதது.

''அன்னிக்கு உள்ள நுழைஞ்சு அவரைப் பார்த்ததும்... வயசானவரா... எங்க அப்பா மாதிரி பட்டுச்சு. எங்க பாய் குல்லா இல்லாத மாதிரி பட்டுச்சு. சரி, நம்ம பொழப்புக்கு அப்பனாவது புள்ளையாவதுன்னு நினைச்சுக்கிட்டு உட்கார்ந்தேன். என் காலாண்ட சாகணும்னு.'' அழுதாள்.

மைதிலி அவள் கையைப் பிடித்து நோட்டுகளைத் திணித்தாள்.

''தாங்க்யூ உன்னிசா.''

''நல்லா இருக்கணும்மா.'' - உன்னிஸா கை கூப்பினாள். வாயெல்லாம் பல்லானாள்.

8

பாண்டியன் வண்டியை நகரம் நோக்கி செலுத்தினார். மைதிலி குழல் பறக்க அமைதியாய் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

''மிஸ் மைதிலி!''

''ம்ம்.''

''சமாதானமாகி விட்டீர்களா?''

''ம்ம்.''

''நான் போலீஸ்காரன். எனக்கும் கண்கள் கலங்கி விட்டன மேடம். மரணம் எவ்வளவு கொடியது?''

மைதிலி பேசாதிருந்தாள்,

''என்ன செய்யப் போகிறீர்கள்?''

''தெரியவில்லை.''

''வேறு யாராவது விசாரிக்க வேண்டுமா?''

''இல்லை, தேவையில்லை.''

''ஏன் மைதிலி?''

''பெட்டி முக்கியமில்லை என்று இப்போது பட்டுவிட்டது. அந்தக் கடைசி வார்த்தை... 'கொஞ்சம் நிம்மதியாய் தூங்குகிறேன்' என்கிற கடைசி வார்த்தை என்னை உலுக்கிவிட்டது. நிம்மதியாய் தூங்கி விட்டார். சகலமும் துறந்து அமைதியாய் வலியில்லாது மரண மடைந்திருக்கிறார்.''

நல்ல சாவு.

''அவரைக் கேலி செய்தவர்கள் அநேகம் பேர். பாபி என்றவர்கள் அநேகம் பேர். அவருக்கு நல்ல சாவுதான் கிடைத்திருக்கிறது.''

''நல்ல மனிதருக்கு நல்ல சாவுதான் கிடைக்கும்.''

அமைதியானார்கள்.

''எங்கே போக வேண்டும் மைதிலி?''

''என் வீட்டுக்கு. முதலில் ஹோட்டலுக்குப் போய் உங்களை ட்ராப் செய்துவிட்டு வீட்டுக்குப் போகிறேன். இந்த நேரம் ஆட்டோ கிடைக்காது.''

''நன்றி மிஸ் மைதிலி!''

''நான் உங்களுக்கு நன்றி சொல்லவேண்டும் மிஸ்டர் பாண்டியன். இது என் அன்பளிப்பு.'' பர்ஸ் திறந்து எண்ணி ஆயிரம் ரூபாய் நீட்டினாள்.

''மன்னிக்க வேண்டும்.''

''ஏன்?''

''தந்தையின் கடைசி வார்த்தை கேட்க அலைந்த ஒரு மகளிடமிருந்து காசு வாங்க முடியாது.''

''ஏன்?''

''எனக்கும் மகள் உண்டு. என் கடைசி வார்த்தையை என் மகள் கேட்கப் பிரியப்படுகிறேன். இது, இந்த உதவி புண்ணியமெனில் எனக்கு அந்த பாக்கியம் கிடைக்கட்டும். என் மகள் மடியில என் உயிர் போக வேண்டும். எனக்கு ஃபீஸ் வேண்டாம்.''

''அப்படியில்லை பாண்டியன்.''

''அப்படித்தான் மகளே. நானும் குடிப்பவன். நானும் உல்லாசி. நானும் நிறைய சம்பாதித்து குடும்பத்தினர் மீது அன்போடு இருப்பவன், மிஸ்டர் சங்கரன் மரணம் என்னை பாதித்திருக்கிறது.''

''என்ன விதத்தில்?''

''இனி உல்லாசம் என்னால் முடியாது என்று தோன்றுகிறது. உலகத்துல எல்லாப் பெண்களையும் என் மகளாகப் பார்க்கும் வயது வந்துவிட்டது என்று தோன்றுகிறது.''

''ஆச்சரியமான மாறுதல்!''

''மரணம் மாற்றும். மரண பயம் மாற்றும். நம் கடவுள் பயமே மரண பயத்தின் சாயல். நமது ஒழுக்க விதிகள் மரண பயத்தின் சாயல்.''

''உங்கள் உதவிக்கு எப்படி நன்றி சொல்வதென்றே...''

''வேண்டாம் மைதிலி! நான் கலங்கியிருக்கிறேன். இதுவரை உணராத கலக்கம் உணர்கிறேன். நான் லீவு போட்டு நாலு நாள் என் குடும்பத்தோடு இருக்கப் போகிறேன்.''

''பயமா... படிப்பினையா?''

''இரண்டும், இரண்டும்.''

கார் ஹோட்டலுக்குள் நுழைந்தது. ''மிஸ் மைதிலி! ஹோட்டல் ரூம் வெகேட் செய்துவிடலாமே, எதற்கு வீணாய்...''

''எனக்கும் அப்படித் தோன்றுகிறது. ஆனால், இறந்த இடத்தில் சிறு பூஜை ஒன்று உண்டு. பதின்மூன்றாம் நாள்.''

''இது பொதுஇடம் மிஸ் மைதிலி. எதற்கு சிரமப்படுகிறீர்கள். சடங்கு வீட்டோடு இருக்கட்டுமே.''

''சரி, வெகேட் செய்து விடுகிறேன்.''

''கடைசியாய்...''

''என்ன?''

''ஒன்றுமில்லை.''

''சொல்லுங்கள். கடைசியாய் அவர் படுத்த இடம் பார்க்க ஆசை உண்டா?''

''பார்க்கலாம்.''

''எனக்கும் பார்க்க ஆசை இருக்கிறது. மிஸ் மைதிலி! போய் வணங்கவேண்டும் போல் இருக்கிறது.''

''எனக்கும் பாண்டியன்.''

இறங்கினார்கள்.

உள்ளே போனார்கள்,

சாவி போட்டுக் கதவு திறந்தார்கள். வெளிச்சம் ஏற்படுத்தினார்கள்.

அறையில் ஒற்றை ரோஜா... வாடின ரோஜா... சுத்தமான படுக்கை... மைதிலி மண்டியிட்டு அந்தப் படுக்கையில் கன்னம் கவிந்தாள். மெல்ல அழுதாள்.

பாண்டியன் கை கூப்பினார்.

மைதிலி எழுந்தாள். அறையைச் சுற்றிப் பார்த்தாள்.

''ஏதும் விட்டுவிடலையே...''

எல்லாம் கலெக்ட் செய்து கொண்டார்கள். மேஜை டிராயர்களை இழுத்தாள்.

உள்ளே பளிச்சென்று மைதிலிக்குள் ஓர் மின்விளக்கு எரிந்தது,

அப்பா... ஒளித்து வைப்பார்.

இங்கு ஒளித்து வைத்திருக்கிறாரா? ரகசியமாய் யாரும் பார்க்காத இடமாய்.

மறுபடி சோதனை செய்யலாமா... அறையைப் புரட்டி ஒருமுறை பார்த்து விடுவோமா?

''பாண்டியன்...''

''யெஸ் மேடம்...''

''அந்தப் பெட்டி இங்கு எங்கேயோ இருக்கிறது பாண்டியன்.''

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

''உள்ளே மனசுக்குள்ளே ஒரு எண்ணம் வருகிறது.''

''தேடிப் பார்த்ததாய் சொன்னீர்களே...''

''மறுபடி தேட வேண்டும்.''

பாண்டியன் பரபரத்தார்.

பீரோக்களின் கதவுகள் தள்ளிப்பார்த்தார். கட்டிலுக் கடியில், பாத்ரூமில், குளியல்தொட்டி சந்துகளில், அறையில்

கம்பள விரிப்பு தூக்கி உதறிப் பார்த்தார். இரண்டு பேருமாய் படுக்கை தூக்கிக் கீழே போட்டார்கள். கட்டில் சுத்தமாய் இருந்தது. சானல் மியூஸிக் வரும் பெட்டியைத் தட்டிப் பார்த்தார். டி.வி.ஸ்டாண்டை நகர்த்தினார்.

''இங்கு இல்லை மேடம்.''

''இருக்கிறது.''

''எப்படி? எனக்குப் புரியவில்லை. தலைகீழாய் புரட்டி தேடிவிட்டோம்.''

''பாண்டியன்...''

''மிஸ் மைதிலி!''

''நான் சற்று தனியே இருக்கப் பிரியப்படுகிறேன்.''

''மிஸ் மைதிலி. உணர்ச்சிவசப்பட்டு உங்கள் தந்தையோடு பேசுவதாய் கற்பனை செய்து வீண் மனச்சஞ்சலம் ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள்.''

''இல்லை பாண்டியன். நான் அமைதியாய் யோசிக்க விரும்புகிறேன்.''

''நான் வாசலில் இருக்கவா?''

''உங்கள் அறையில் போய் இருங்கள். நான் சரியாய் இருபது நிமிடம் கழித்து போன் செய்கிறேன்.''

''நன்றி.''

பாண்டியன் வெளியேறினார்.

கதவு பூட்டிக் கொண்டாள்.

மைதிலி எழுந்து மெல்ல அப்பாவின் படுக்கையை வருடினாள்.

''நான் உன் கடனை அடைச்சுட்டேன் தெரியுமா? கூட்டிண்டு வந்தா காசு தரவேண்டாம்? டிப்ஸ் தர வேண்டாமா? இப்படியா பளிச்சுன்னு செத்துப்போறது?

பாவம்... பயந்துடுத்து அந்தப் பெண். அவ பேரு உன்னிஸா. தெரியுமோ...?

அப்பா அப்பா. என் செல்ல அப்பா. நிம்மதியா தூங்கணும்னியாமே... என்ன அர்த்தம் அதுக்கு...? எதுலேர்ந்து நிம்மதி...? நம்ம வீட்லேர்ந்தா, தொழிலிலா, இல்லை, என்கிட்டேர்ந்து தப்பிச்சா...

நிம்மதியா தூங்கிட்டியா?

ஏம்பா நான் கஷ்டப்படுத்திட்டேனா உன்னை, நோக அடிச்சேனா...?

ஸாரி... ரியலி ஸாரி. உன் மேல இருக்கிற அன்புல அக்கறைல நான் பேசினேனே தவிர உன்னை என்னால கோச்சுக்க முடியாதப்பா... நீ என்ன பண்ணினாலும் கோச்சுக்க முடியாது. அப்போய்... நான் இந்த ரூம் காலி பண்றேன். இந்த இடத்தை விட்டுப் போக முடியாம தவிக்காதே. போ. போய் உனக்கு உண்டானதை அனுபவிச்சிட்டு எனக்குப் புள்ளையா பொற... நான் உன்னை நல்லபடி வளர்க்கிறேன். நல்ல அம்மாவா இருந்து உன்னை கவனிச்சுக்கறேன். அப்பா எனக்குப் புள்ளையா பொறப்பியா... சொல்லேன்.''

அறை அமைதியாய் இருந்தது.

''அந்தக் காசு காணோம். எங்க போச்சுன்னு தெரியலை, யார் எடுத்தா தெரியலை. எனக்கு அது வேண்டாம். எனக்கு வேணும்னு தேடலை. நீ கஷ்டப்பட்டு சம்பாதிச்சது காணாமப் போயிடுத்தேன்னு தேடினேன். அப்பா அது உன் காசு. அதை என்ன வேணா பண்ணிக்கோ.

நான் கிளம்பறேம்பா ப்ளெஸ் மீ டாடி. என்னை ஆசீர்வாதம் பண்ணு. எனக்கு நல்ல புருஷன் கிடைக்கணும்னு ஆசீர்வாதம் பண்ணு. நல்ல குழந்தைகள் பிறக்கணும்னு ஆசீர்வாதம் பண்ணு.

அப்பா. நீ இங்க இருக்கறதா படறது. போ. போய் உனக்கு உண்டானதை அனுபவி. அனுபவிச்சு மறுபடி என்கிட்ட வா... என் குழந்தையா வா. அப்பா... அப்பா... குட்பை.''

-கண்ணில் நீர் இறங்கிற்று. உடம்பு குலுங்கிற்று. படுக்கை நனைந்தது.

அறை அமைதியாய் இருந்தது.

மைதிலி எழுந்தாள். முகம் துடைத்துக் கொண்டாள். அறையில் இறுக்கம் அதிகம் இருந்தது. அடைபட்டது போல் ஒரு சலனம் கூட இல்லாது கும்மென்ற இறுக்கம் இருந்தது. அதிகம் வியர்த்தது.

யாரும் வரவே முடியாதபடி, வெளியே போகவே முடியாதபடி அடைபட்டுக் கிடந்தது.

மைதிலி ஜன்னல் வழியே சாலையை பார்த்தாள். கீழே தெருவில் வாகனங்கள் விரைந்து கொண்டிருந்தன.

அப்பா படுக்கையிலிருந்து ரோஜாப்பூ எடுத்தாள். உதிர்ந்து விடுவேன் என்பது போல் துவண்டது. ஜாக்கிரதையாய் தூக்கி ஜன்னலருகே வந்தாள். கைப்பிடி பற்றி பலக்க இழுத்தாள். இடப்புறத்தில் இருந்த கதவை வலப்புறமாய்த் தள்ளினாள். கண்ணாடி மீது கண்ணாடி உரசி கிரீச் என்று வினோத சத்தம் கேட்டது. காற்று குப்பென்று உள்ளே வந்தது.

கையிலிருந்த ரோஜாப்பூவை சிதற அடித்தது. இதழ்களும் பிய்ந்து காற்றோடு வெளியே பறந்தன. காற்று இதழ்களை உயரத் தூக்கியது. ரோஜா இதழ்கள் எங்கோ இருட்டில் போய் மறைந்தன.

காற்று, பூவைப் பிடுங்கிப் போன வேகம் பார்த்து மைதிலி வியந்தாள். போயாச்சு போயாச்சு என்று வானம் பார்த்தாள்.

கையில் பச்சைக் காம்பு மட்டும் இருந்தது.

இதை என்ன செய்வது?

ஜன்னலுக்குக் கீழே தொட்டியிருந்தது. அங்கிருந்து கொடி கிளம்பி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. இதைத் தொட்டியில் போடலாம். இது உரமாகட்டும். இந்தக் கொடி வளர்க்கட்டும். இரண்டடி ஆழத்தில் விழுந்திருக்க வேண்டிய காம்பு எதிலோ தட்டி அப்படியே நின்றது.

''என்னது?'' - கொடிகள் விலக்கிப் பார்த்தாள்.

'சொரேர்!' என்று உணர்வு வயிற்றைத் தாக்கியது?

பெட்டி, சிவப்புப் பெட்டி.

''ஐயோ... பெட்டி இங்கே இருக்கு. பாண்டியன் - பெட்டி பாண்டியன்.'' - வாய் திறக்காது ஓர் அலறல் அவளுக்குள் எழுந்தது.

பதறினாள். எட்டி கை நீட்டினாள். எட்டவில்லை. கால் தூக்கி உடம்பு முழுவதும் சிமெண்ட் பலகையில் போட்டு கை நீட்டினாள்.

யாரோ இழுப்பது போல் ஓர் உணர்ச்சி வந்தது. சட்டென்று பின்வாங்கினாள். கண்ணாடிக் கதவைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டாள்.

''மைதிலி! மைதிலி! அமைதியாய் இரு. பெட்டி கிடைத்துவிட்டது அமைதியாய் இரு.'' மைதிலிக்கு நாக்கு வறண்டது. உள்ளே போய் ஜக் கவிழ்த்து ஒரு டம்ளர் தண்ணீர் குடித்தாள்.

மறுபடி ஜன்னலருகே வந்து நின்றாள்.

9

பாண்டியன் அறையை விட்டுப் போய் பத்துநிமிடம் ஆகிவிட்டது. இன்னும் பத்து நிமிடத்தில் வந்துவிடுவார். அல்லது போன் செய்வார்.

''பாண்டியனிடம் இதைச் சொல்ல வேண்டும். பெட்டியைத் திற என்றால் கீழ்ப்படிய வேண்டும். திறந்தால் உள்ளே என்ன இருக்கு. கரன்ஸியா... காலிப்பெட்டியா?''

இரண்டுமே தலைகுனிவுதான்.

''ப்ளாக் மணியா?'' என்கிற தலைகுனிவு.

காலிப்பெட்டிக்கா இத்தனை ஆட்டம் என்கிற தலைகுனிவு

டெலிபோன் அருகே போய் பாண்டியனை ஆபரேட்டர் மூலம் தொடர்பு கொண்டாள்.

''யெஸ் மேடம்?''

''நான் ப்ரேயர் செய்யப் போகிறேன், பாண்டியன். மெடிடேட் செய்யப் போகிறேன். ப்ளீஸ், இன்னும் இருபது நிமிடம் தொந்தரவு செய்ய வேண்டாம்.''

''மிஸ் மைதிலி. மன ஆரோக்கியத்துடன் இருக்கிறீங்களா?''

''வெரிமச்.''

''மனத் தெளிவோடுதான் இருக்கிறீர்களா?''

''இருக்கிறேன்.''

''சரி, நான் சரியா இருபது நிமிடம் கழித்து உங்களுடன் தொடர்பு கொள்கிறேன்.''

போன் துண்டிக்கப்பட்டது.

மைதிலி மறுபடி கதவு திறந்தாள். காற்று சீறிப்பாய்ந்தது. கை நீட்டி எட்டி எடுக்க முடியாது. அதிகம் குனிய வேண்டும். இரண்டடி சுவர் அகலம். பிறகு இரண்டடி ஆழம். கை நீளாது. குனிய கால் வாரிவிட்ட தென்றால் நாலு வினாடியில் தரை தொட நேரிடும்.

வேறு என்ன செய்வது? ஏதாவது வாக்கிங் ஸ்டிக் போல கிடைத்தெனில் பெட்டி தூக்கலாம். தூக்க முடியாது போனால் சுமை தாங்காது கீழே விழுந்தால்...

பெட்டி சிதறி தெருவெல்லாம் கரன்ஸி பறக்கும். ஊர் உலகம் பொறுக்கிக் கொண்டு போகும். நிச்சயம் போலீஸ் கேஸாகும்.

என்ன செய்ய?

இறங்க வேண்டும்.

சுவர் தாண்டி இறங்கி, தொட்டியில் கால் வைத்து பெட்டி தூக்கி சுவர் மீது வைத்து, மறுபடி ஏறி உள்ளே இறங்க வேண்டும்.

தெரு வேடிக்கை பார்க்குமா?

நான்காவது மாடி. பார்க்காது.

பார்த்தால் கூவும். கூவி திசை திருப்பும். உயரத்தில் இருட்டாய் இருக்கிறது தெரியுமா? தெரியும். அறை வெளிச்சத்தில் ஆள் நடமாடுவது தெரியும். என்ன செய்வது?

அறை விளக்கு அணை.

அணைத்தாள்.

எட்டிப் பார்த்தாள்.

தொட்டி தெரியவில்லை. விளக்கு அணைக்க தொட்டி இருட்டாகி விட்டது. என்ன செய்வது? உத்தேசமாய் இறங்க வேண்டும்.

மறுபடி விளக்கு போட்டாள். தொட்டி நீள அகலம் பார்த்தாள். உள்ளே போய் விளக்கணைத்தாள். செருப்பு அவிழ்த்தாள்.

புடவையை சற்று உயரத்தூக்கி ஜன்னல் சுவர் ஏறினாள். கதவு இன்னும் அகட்டித் திறந்து மறுபக்கம் கால் நீட்டி தொட்டிக்குத் துழாவினாள்.

கெட்டியாய் சுவர் விளிம்பு பிடித்தபடி தொட்டியில் கால் வைத்தாள். சில்லென்று தொட்டி காலில் பட்டது. மண் நரநரத்தது. பிடித்த பிடியை விடாமல் கொடிகளூடே கால் நுழைத்து பெட்டியைக் கால் கட்டை விரலால் தொட்டாள். பெட்டி ஆடிற்று.

இடக் கையால் சுவர் விளம்பு பிடித்து மொத்த உடம்பு பாரமும் தொட்டியில் வைத்து, வலக் கையால் கொடிகளூடே துழாவினாள். பெட்டி பிடியைத் தேடிப் பார்த்தாள். தூக்கினாள். பெட்டி உதைத்து வெளியே இழுக்க, கொடிகள் சிக்கன. பெட்டி வராமல் சிக்கிற்று.

கீழே கார்கள் ஓலமிட்டு ஓடின. ஆட்டோ ஒன்று சைலன்சர் இல்லாமல் படபடத்தது. குனிந்து தரை பார்க்க தலை சுற்றியது. வயிற்றுள் குப்பென்று பயம் பற்றி உறைய வைத்தது. இழுத்தாள். பெட்டி சிக்கிற்று. இன்னும் பலம் கூட்டி இழுக்க, கொடி அறும். கீழே சாய நேரிடும். நாலு வினாடியில் தரை தொட நேரிடும்.

என்ன செய்ய? என்ன செய்ய?

யோசி... யோசி...

கொடிகளுக்கு எதிராக இழுக்காமல் கொடியூடே மேலே போ.

அப்படியே பெட்டி தூக்கி கொடிகளூடே மேலே கொண்டு போனாள். பெட்டி இடைஞ்சலில்லாமல் வந்தது.

தூக்கி சுவரில் வைக்க முடியவில்லை. இரண்டு கை தேவைப்பட்டது. மெல்ல இடக்கையை விடுவித்துக் கொண்டு இரண்டு கைகளாலும் பெட்டி தூக்கி ஜன்னல் சுவரில் வைத்தாள். பெட்டி இப்போது ஜாக்கிரதை ஆகிவிட்டது. கைவைத்து உள்ளே தள்ள தடேரென்று பெட்டி அறைக்குள் விழுந்தது.

இப்போது பெட்டி இன்னும் ஜாக்கிரதை ஆகிவிட்டது. நான் வர வேண்டும். என்னால் முடியுமா?

சுவரில் கைவைத்து தம் பிடித்து உடம்பு உயர்த்தினாள். இடுப்பு வரை உயர்ந்து நேராக சுவரில் முழங்கால் வைத்தாள். புடைவை இழுத்து சிக்கியது. கால் நகர்த்த முடியவில்லை. உடம்பு பாரம் முழங்காலில் விழுந்து புடைவையை அழுத்தி முன்பின் போகாது அடித்தது. முழு பலத்துடன் உடம்பை முன்னே தள்ள இடுப்புக் கொசுவம் அவிழ்ந்து முழங்கால் புடைவை தளர்ந்தது.

சேலைத் தலைப்பு அறைக்குள் விழுந்தது. அப்படியே மறுபடி தம் பிடித்தது அறைக்குள் தாவினாள்.

பந்துபோல தலையில் உருண்டு விழுந்ததில் புடைவை சுத்தமாய் அவிழ்ந்து போயிற்று. முழங்கால் எரிந்தது. எழுந்து புடைவை உதறி கொசுவி கட்டிக் கொண்டாள். தோளில் புடைவையைப் போட்டுக்கொண்டாள். ஜன்னல் மூடினாள். ஜன்னல் வழியே யாராவது பார்க்கிறார்களா என்று உற்றுக் கவனித்தாள்.

இல்லை. தெரு ஓடிக் கொண்டிருந்தது.

மெல்ல குனிந்து பெட்டி எடுத்தாள். நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

என்ன இருக்கிறது உள்ளே? பிரித்துப் பார்ப்போமா? வேண்டாம். இங்கு வேண்டாம். பெட்டி கனக்கிறது. ஏதோ

இருக்கிறது. உள்ளே இருப்பது எனக்கு வேண்டாம். பெட்டி போதும். இந்தப் பெட்டி போதும். மறுபடி அப்பா கிடைத்த சந்தோஷம். மறுபடி அப்பா பார்த்த சந்தோஷம்.

மெல்ல குனிந்து பெட்டியை முத்தமிட்டாள். இருட்டில் சாவி தேடினாள். கிடைத்தது. ஒரே ஒரு விளக்கு போட்டு நிலைக்கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். பர்ஸ் எடுத்துக் கொண்டாள்.

பெட்டி எடுத்தாள். அறையைப் பூட்டினாள். வராண்டாவில் நடந்தாள். ரிசப்ஷனுக்குப் போனாள்.

சாவி கொடுத்தாள். பெட்டியைக் காலருகே வைத்து விட்டு பர்ஸ் பிரித்து அறைவாடகை செட்டில் செய்தாள். பாக்கி காசும் ரசீதும் வாங்கிக் கொண்டாள். புன்சிரிப்புடன் விடை பெற்றாள். சுற்றி யாராவது பார்க்கிறார்களா என்று அமைதியாக நோட்டமிட்டாள்.

பெட்டியுடன் வாசல்நோக்கி நடந்தாள். டோர்மேன் கதவு திறந்து வந்தனம் சொன்னான். பதிலுக்கு சொன்னாள்.

இறங்கி காருக்குப் போய் சாவி போட்டு கதவு திறந்து பெட்டியை உள்ளே போட்டு கார் ஸ்டார்ட் செய்தாள். கியர் மாற்றினாள். விர்ரென்று வெளியே வந்து சாலையில் கலந்தாள்.

எதிர்ப்பக்க கட்டடத்து இருளிலிருந்து பாண்டியன் வெளியே வந்தார். சிரித்தார், 'யேசுவே உமக்கு நன்றி' என்று முணுமுணுத்தார். ஹோட்டல் நோக்கி நடந்தார்.

பத்தாவது நிமிடம் அவர் டேபிள் போன் ஒலித்தது.

''பாண்டியன் ஹியர்.''

''சார். நான் மைதிலி.''

''யெஸ், மிஸ் மைதிலி?''

''நான் ரூம் வெகேட் பண்ணிட்டேன் சார். வீட்லேர்ந்து பேசேறன்.''

''நன்றி மிஸ் மைதிலி!''

''சொல்லாமல் போனதுக்கு ஸாரி.''

''நாலாவது மாடிலேர்ந்து விழாத உருப்படியா போனீங்களே... அதுக்கு இது பெரிசில்லை மேடம்...''

''மிஸ்டர் பாண்டியன்.''

''நான் முப்பத்தாறு வருஷம் தமிழ்நாடு போலீஸ் அதிகாரியாக இருந்தவன்மா. இப்ப ரிடையர் ஆயிட்டு ஹோட்டலில் காவல்காரனா இருக்கேன். என்னை ஏமாத்த முடியாது. ஏமாந்த மாதிரி நடிக்க எனக்குப் பயிற்சி உண்டு.''

''பாண்டியன்?''

''ஒரு க்ஷணம் பேலன்ஸ் தவறி கால் தப்பா வச்சிருந்தா என் கதி, எங்க ஹோட்டல் கதி என்ன ஆகியிருக்கும்? அப்ப மான புடைவை சிக்க அந்தரத்தில் நின்னீங்களே... கர்த்தர் கிட்ட சீகமா உங்களை உள்ளே பிடிச்சு தள்ளினேன். மன்றாடினேன். மிஸ் மைதிலி. லைஃப்ல ரிஸ்க் எடுக்க வேண்டியதுதான். நீங்க எடுத்தது ஹண்ட்ரட் பர்ஸண்ட் ரிஸ்க், மறுபடி இப்படிச் செய்யாதீங்க.''

''பெட்டி கிடைச்சிடுத்து சார்.''

''கடவுளுக்கு நன்றி! கர்த்தரின் அருள்!''

''மறுபடியும் ஸாரி மிஸ்டர் பாண்டியன்.''

''எங்கள் ஹோட்டல் உங்கள் சேவைக்கு எப்போதும் காத்திருக்கிறது. உங்கள் சேவையே எங்கள் வாழ்க்கை. நன்றி மிஸ் மைதிலி!''

போன் துண்டிக்கப்பட்டது.

மைதிலி ஓர் அவமானம் உணர்ந்தாள். முகம் பொத்தி சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள்.

மைதிலி கட்டிலிலிருந்த பெட்டியை எடுத்து பீரோவுக்கு அடியில் தள்ளினாள். முகம் துடைத்து கதவு திறந்தாள்.

''எங்கடி போயிருந்தே மைதிலி!''

மன்னி அறையை அடைத்துக் கொண்டு நின்றாள்.

''ஹோட்டல் பில் செட்டில் பண்றேன்னு போனியே. எப்ப வந்தே... செட்டில் பண்ணிட்டியா... ரொம்ப காசா...''

''ம்ம்...?''

''பில் அதிகமா இருந்துதா?''

''இல்லை, கொஞ்சம்தான்.''

ம்ம்... இன்னும் எங்கெல்லாம் கடன் இருக்கோ? எதையெல்லாம் செட்டில் பண்ணணுமோ? பகவானுக்குத் தான் வெளிச்சம்.'' மன்னி அலுப்போடு நடந்தாள்.

பின்னால் கழுத்தில் கை வைத்து அவளை உந்தித்தள்ள ஆத்திரம் பிறந்தது.

போய் தட்டு எடுத்து தடேரென்று டேபிளில் போட்டாள்.

மன்னி திடுக்கிட்டாள். ''என்னடி கோவம்?''

''ஒண்ணுமில்லை, கை தவறிடுத்து.''

''சாப்பிட்ட பிறகு பத்து ஒழிச்சு சிங்க்ல போட்டுடு. மாமி வீட்டுக்குப் போய்ட்டா. அப்படியே திறந்து போட்டுறாதே.''

மைதிலி பதில் சொல்லாது சாதம் போட்டு குழம்பு ஊற்றிக்கொண்டாள். பிசைந்து விழுங்கினாள். சிறிதளவு

சாதம் போட்டு மோர் கரைத்துக் குடித்தாள். வயிறு பொருமல் நீங்கி தலை ரத்தம் மொத்தமும் வயிற்றுக்குப் போவது உணர முடிந்தது. எழுந்து நிற்க தள்ளாடிற்று. சிங்க் வரை பாத்திரங்கள் எடுத்துப் போக முடியுமா என்று சந்தேகம் வந்தது.

நான் எப்படி நாலாவது மாடி தொட்டியில் நின்றேன். எப்படி பெட்டி எடுத்தேன்? எப்படி மறுபடி எகிறிக் குதித்தேன். நானா... நானா... செய்தேன்? யார் காப்பாற்றினார்கள்? அப்பாவா... பாண்டியன் மனசா... இயேசு கிறிஸ்துவா?

பாத்திரங்களை சிங்கில் போட்டுவிட்டு அறைக்குத் திரும்பினாள். கதவு தாழிட்டு மின்விசிறியை முழு வேகத்தில் போட்டாள். குனிந்து பீரோவிலிருந்து பெட்டி எடுத்தாள். கட்டிலில் உட்கார்ந்து பெட்டி நம்பர்களை சைபர் ஐந்து ஒன்பதுக்குத் தள்ளினாள். இரண்டு பக்கமும் விரல் கொடுத்துத் தள்ளினாள்.

படீரென்று பெட்டி திறந்து கொண்டது. மேலே 'மாலை முரசு' பேப்பர் போட்டு மூடியிருந்தது. 'எம்.ஜி.ஆர். தாயகம் திரும்புகிறார்' என்று போட்டிருந்தது.

பேப்பரை மெல்ல அகற்றினாள். உள்ளே கத்தை கத்தையாக நூறு ரூபாய் நோட்டுக் கட்டுகள் அடுக்கப் பட்டிருந்தன. எல்லா நோட்டுக் கற்றையிலும் பாங்க் ஸீல் போடப்பட்டு சுத்தமாக இருந்தது. எடுத்து அடுக்கினாள். அடுக்கும்போதே எண்ணினாள், முப்பது கட்டுகள் இருந்தன.

மூன்று லட்சம். அப்பா சம்பாதித்த மூன்று லட்சம் கறுப்புப் பணம்தான். ஆனால், உழைத்த காசு கிடைத்து விட்டது. சுற்றி சுற்றி களைத்ததற்குப் பலன் கிடைத்தது.

பெட்டியைத் துழாவினாள். ஒரு பால் பாயிண்ட் பேனா, ஒரு சிட்பேட், அந்தப் பெட்டியின் சாவிகள் இரண்டு. கர்ச்சீஃப். ஒடிகோலன் பாட்டில் சிறியது.

மூடிப் பக்கம் உறையில் ஏதோ துருத்திக் கொண்டிருந்தது. அப்பாவுடைய லெட்டர் பேட். எடுத்து எதிர்ப்பக்கம் வைத்தாள். பெட்டி மூடினாள்.

லெட்டர் பேட் மேல் காக்கி கவர் மின்விசிறிக் காற்றில் நகர்ந்தது. அப்பாவின் கையெழுத்து தெரிந்தது.

எடுத்துப் பிரித்தாள்.

'சௌ. மைதிலிக்கு,

அப்பா அநேக கோடி ஆசீர்வாதங்கள். இந்தக் கடிதத்துடன் ரூபாய் மூன்று லட்சம் கரன்ஸி இருக்கிறது. இது என் சம்பாத்தியம். என் கடின உழைப்பில் கிடைத்த பணம். ஒரு வேளை இதுவே என் கடைசி சம்பாத்தியமா இருக்குமோ என்றும் தோன்றுகிறது. என் அந்திமக் காலம் நெருங்கிவிட்டதாக ஓர் உணர்வு என்னுள் வளர்ந்து கொண்டிருக்கிறது.

மைதிலி! கடந்த சில வாரங்களாக உன் அம்மா கனவில் வருகிறாள். 'என்னைப் பீச்சுக்குக் கூட்டிண்டு போறேளா' என்று கதவோரம் நின்று கேட்கிறாள். நான் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறேன். 'நீபோ. நான் வரேன்' என்று பதில் சொல்கிறேன். அவள் நகர்ந்து எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள். ரொம்ப ஜாஜ்வல்யான அழகோடு இருக்கிறாள். இத்தனை அழகாய் உங்கம்மாவை நான் நேரே பார்த்ததில்லை.

இந்தக் கனவு என்னைக் கலக்குகிறது. மரணம் பற்றிய பயம் இல்லை. இன்னும் சில கடமைகள் இருக்கிறதே என்கிற கவலை கலக்குகிறது.

மைதிலி, 'என் கல்யாணத்துக்கப்புறம் நீ கல்யாணம் பண்ணிக்கோ அப்பா' என்று நீ சொன்னது என்னை மிகவும் காயப்படுத்திற்று. அதிகம் பேசாத உன்னை இப்படிப் பேசும்படி வைக்க நான் உன்னை எத்தனை காயப்படுத்தி இருக்க வேண்டும்?

மைதிலி! நான் காமுகன் இல்லை. நடு வயதில் மனைவி இழந்த சிரமம் என்னைப் போன்ற ஆணுக்குப் பெரிய கொடுமை. என் அதிவேக புத்திக்குத் தெம்பு தர பெண்கள் எனக்குத் தேவைப்பட்டனர். ஆனால், மனைவி தேவைப் படவில்லை. எனக்கு உன் அம்மா போதுமாய் இருந்தாள்.

மைதிலி! நான் செய்தவற்றை சரி என்று சமாதானம் செய்ய முற்படவில்லை. இது என் பலஹீனம் இதற்கு மனைவி என்று ஒரு பெண்ணை பலியிடுவதைவிட இதற்கான பெண்களே, தானாய் முன்வரும் பெண்களே நல்லது என்று தோன்றிற்று. பதிலுக்குக் கொடுத்து விடுகிறோமே என்கிற சமாதானம் வந்தது.

நீ போன பிறகு, 'கல்யாணம் செய்து கொள்' என்று கூறின பிறகு இதிலும் ஒரு தவறு உணர்ந்தேன். என்னைப் போன்ற ஆட்கள் இருப்பதால்தான் இப்படிப்பட்ட பெண்கள் உருவாகிறார்கள். உருவாக்கப்படுகிறார்கள். அழிக்கப் படுகிறார்கள். காசு தருகிற சமாதானம் மனசு எற்கவில்லை.

நான் பல நூறு பெண்ணை இப்படி உபயோகப்படுத்தி யிருக்கிறேன். காசால் அடித்து வீழ்த்தியிருக்கிறேன். ஆயினும் இது பாபம். சமூகக் குற்றம். எனக்கும் புரிகிறது. புரிந்து என்ன? இதுவே கடைசி முறை என்று இப்போது ஒரு பெண்ணுக்குச் சொல்லிவிட்டுக் காத்திருக்கிறேன். இதோடு போதும் என்று நினைத்திருக்கிறேன். பகவான் என்னைக் காப்பாற்ற வேண்டும்.

மைதிலி, நான் செய்த இந்தக் காரியங்களுக்குப் பரிகாரம் செய்ய விரும்புகிறேன். என்னைப் பாபம் தொடருமே என்று இல்லை. என் பாபம் உன்னைத் தொடரக் கூடாது என்ற நினைப்பில் சிலது செய்ய விரும்புகிறேன்.

இந்தப் பெட்டி என் அறையில் ஒரு மூலையில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும். இது பிரித்து நீ படித்தால் இந்த மூன்று லட்ச ரூபாயை அவ்வை ஹோமுக்கு உன் பெயரில் அன்பளிப்பாகக் கொடுத்து விடு.

புருஷனால் கைவிடப்பட்டவர்களும், புருஷன் இல்லாதவர்களுக்கும் இது உபயோகப்படட்டும். இது கறுப்புப் பணம். ஆயினும் அவ்வை ஹோமில் இதற்கு வரிவிலக்கு உண்டு. மிஞ்சி கேள்வி வந்தால் இக்கடிதம் காட்டு. இன்கம்டாக்ஸ் பிரச்சினை வராது.

மைதிலி! உன் அம்மா இறந்த பிறகு என்னிடம் நீ காட்டிய அன்பும் அக்கறையுமே என்னை உயிர்ப்புள்ளவனாக, மனிதனாக வைத்தன. நீ இல்லையெனில் இன்னும் மோசமாக இருந்திருப்பேன்.

மைதிலி! இந்தக் காசு நான் சொன்னதுபோல் செய். மேலும் என் அறையில் உள்ள சில பொருட்களைத் தனியே லிஸ்ட் எடுத்து வைத்து எங்கெங்கு வைத்திருக்கிறேன் என்பது எழுதியிருக்கிறேன். அவையனைத்தும் உன் சொத்து.

நல்ல புருஷனை மணந்து, நல்ல குழந்தைகளைப் பெற்று நெடுங்காலம் நல்லபடி வாழ ஆசீர்வதிக்கிறேன்.

இந்தக் கடிதம் நான் இறந்த பிறகே நீ படிக்க நேரிட வேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்கிறேன். என்னவோ இந்தக் கடிதம் முடிக்கும்போது மனசு சந்தோஷமாகிறது. பெரிய பாரம் குறைந்த நிலை வருகிறது.

ஸ்ரீமந் நாராயணன் சகலருக்கும் அருள் புரியட்டும். சுபமங்களா ரனி பவந்து...

அன்புடன்,

சங்கரன்.

பி.கு. நான் இறந்த பிறகு ஒரு வேட்டி துண்டு, ஒரு புடவை, ரவிக்கைத் துணி கடலில் போட்டு விடு. ஆற்றில் அனுப்புகிற ஐதீகம் நம் வீட்டில் உண்டு. சென்னையில் ஆறு இல்லை, கடலில் போடு.'

மைதிலி காசும் கடிதமும் எடுத்துப் பெட்டியில் போட்டாள். பீரோ அடியில் தள்ளினாள்.

குளிர்ந்தது. உள்ளே உஷ்ணம் ஏறியது. ஜுரம் வந்தது. போர்த்திக் கொண்டு படுத்தாள், அழுதாள். வாய்விட்டு 'அப்பா! அப்பா!' என்று அரற்றி குலுங்கிக் குலுங்கி வெகுநேரம் அழுதாள்.

மறுநாள் ஜுரம் பொறி பறந்தது.

டாக்டர் வரவழைக்கப்பட்டார். அதிர்ச்சி என்றார்.

''பொம்பளையாலட்சணமாவீட்ல இருந்தாத்தானே... நேரங்கெட்ட நேரத்துலே தனியா சுத்தறே!'' மன்னி இரைந்தாள்.

வாஸ்தவம், நான் பெண்ணே இல்லை. எந்தப் பெண் நாலாவது மாடி விளிம்பில் ஏறுவாள். தொட்டியில் குதிப்பாள். அப்பா காசு தேடி நாயாய் அலைவாள். அப்பா கூப்பிட்ட வாடகைப் பெண்ணின் கை பிடித்து அழுவாள். பிம்ப் தேடிப் போய் பேசுவாள். அருணாசலம் ஸ்டூடியோவில் ஆள் தேடுவாள். செக்யூரிட்டி ஆபீஸரை ஏமாற்றி அவமானப்படுவாள்.

இல்லை, நான் பெண்ணேயில்லை. ஆண். ஆண் மனசு கொண்ட பெண். அப்பா மனசு புரிந்து கொண்ட மகள்.

நான் ப்ரா போடாது... புருஷனை மயக்குகிற பெண் இல்லை, பகல் பத்தரை மணி சல்லாபக்காரி இல்லை.

நான் வேறு. நீ வேறு. போ... மனசு கூவிற்று.

நாலு நாள் கழித்து அவ்வை ஹோமில் காசு கட்டும் போதும் நூற்றுக்கணக்கான சோகமான பெண்களைப் பார்க்க முடிந்தது.

அப்பா மறுபடி வா. இவர்களைப் பார். எனக்கு மகனாய்ப் பிற, என் அன்பில் நல்லவனாய் வளர்ந்து வா. முப்பது லட்சம் டொனேஷன் தருகிற ஆளாய் வா.

மனதார அழைப்பு விடுக்கிறேன்.

பதின்மூன்றாம் நாள் கடலுக்கு புடைவை, ரவிக்கை, வேட்டி துண்டோடு போனாள். காகித உறையோடு வீசினாள். செம்படவச்சிறுவர்கள் பாய்ந்து எடுத்துக் கொண்டு வீட்டுக்கு ஓடினார்கள்.

மைதிலி மௌனமாய் கடல் பார்த்து கொண்டிருந்தாள்.

கடல் நீலமாய் இருந்தது.

கடல் நீலமா... நீல நிறம் கடலுக்கு உண்டா?

இல்லை. கடல் நிறம் வெள்ளை. நிறமற்ற வெள்ளை.

ஆகாயப் பிரதிபலிப்பு கடலை நீலமாக்குகிறது. வானம் கறுத்தால் கடல் கறுத்துப் போகிறது. வானம் சிவந்தால் கடல் ப்ரவுனாகிறது. வானம் டாலடித்தால் கொஞ்சம் பச்சை சேர்க்கிறது.

கடலுக்கு நிறமில்லை.

எந்த மனிதனுக்கும் இயல்பு கெட்ட குணமில்லை.

அவன் குணம் சூழ்நிலை குணம், பிரதிபலிப்பு குணம். மனிதன் இயல்பில் நல்லவன். எல்லா மனிதர்களும் நல்லவர்கள்.

அப்பா உள்பட.

கடற்காற்று மெல்ல மைதிலியைச் சுற்றி வந்து நெற்றியில் முத்தமிட்டது.

(முற்றும்)